24

32°c
கூடிய வெப்பநிலை 39 c
குறைந்த வெப்பநிலை 26 c
தெளிவான, வரண்ட காலநிலை காணப்படும்.

# உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily

விலை: யாழ்.– 20/= வன்னி – 20/= கொழும்பு – 30/=

சுடர்: 29 கதிர்: 135 வள்ளுவர் ஆண்டு: 2045 பங்குனி 27, வியாழன் 10.04.2014

கிருபா லேணர்ஸ்
சாரதி பயிற்சியில் நம்பிக்கையை வென்ற நிறுவனம்

216, கண்டி வீதி ,வவுனியா.
(வசந்தம் திரை)
024 2227777, 077 7100444

# கோபியின் மனைவிக்கு தடுப்பில் கருச் சிதைவு

## மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு; சம்பவத்தை மறுக்கின்றார் பொலிஸ் பேச்சாளர்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 10
பயங்கவாதத் தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டு தற்போது தடுத்து வைக்கப்பட்டிருக்கும் கோபியின் மனைவிக்கு கருச்சிதைவு ஏற்பட்டுள்ளது என்று தெரிவித்து கொழும்பு மனித உரிமைகள் ஆணைக் குழுவில் நேற்று முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளை மீளிணைக்க முயற்சித்தார் என்ற குற்றச்சாட்டுடன் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் தேடப்பட்டு வரும் கோபியின் மனைவி கடந்த மாதம் திருகோணமலையில் வைத்து பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டார். கர்ப்பிணியான அவர் தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டு விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றார்.

இந்தநிலையிலேயே அவருக்கு கருச்சிதைவு ஏற்பட்டுள்ளது என்று மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறையிடப்பட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகள் மீளுருவாகின்றனர் என்றும், அவர்களை மீளிணைக்கும் முயற்சிகளில் கோபி என்று அழைக்கப்படும் கஜீபன் என்பவர் ஈடுபட்டார் என்றும் தெரிவித்து அவரைத் தேடப்படுபவராக அறிவித்தது பயங்கரவாதத் தடுப்புப் பொலிஸ் பிரிவு.

அதைத் தொடர்ந்து வட பகுதி முழுவதும் இராணுவத்தின் கெடுபிடிகள் அதிகரிக்கப்பட்டதுடன், கோபியுடன் தொடர்பு வைத்திருந்தார்கள் என்று கூறியும், சந்தேகத்தின் பேரிலும் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் தொடர்ந்து பலர் கைது செய்யப்பட்டு வருகின்றனர்.

அந்த வரிசையில் கடந்த மாதம் 11 ஆம் திகதி கோபி என்று கூறப்படும் கஜீபனின் மனைவி சர்மிளா (வயது-26) பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டார்.

21ஆம் பக்கம் பார்க்க

## இலங்கை மீனவர்கள் இந்தியாவால் கைது

கொழும்பு, ஏப். 10
இந்தியாவின் பிரத்தியேக கடல் பொருளாதார வலயத்தில் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டார்கள் என்ற குற்றச்சாட்டில் 16 இலங்கை மீனவர்களை, இந்திய கடலோரக் காவற் படை கைது செய்துள்ளது.
இந்தியாவின் மங்களூரிலிருந்து 188 கடல் மைல் தொலைவில் மீன்பிடியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த சமயமே

— 21ஆம் பக்கம் பார்க்க

## இலங்கையிடம் பலிக்குமா இந்திய இராஜதந்திரம்?



பக்கம் 12

## போதையை கண்டறிய வந்திறங்கின பலூன்கள்

கொழும்பு, ஏப். 10
மதுபோதையில் வாகனம் செலுத்துவதைக் கண்டறியும் பலூன்கள் 60 ஆயிரம், வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார் பொலிஸ் பேச்சாளர்.

— 21ஆம் பக்கம் பார்க்க

## அரிசிக்கு கட்டுப்பாட்டு விலை

யாழ்ப்பாணம், ஏப். 10
பண்டிகைக் காலத்தில் அரிசியின் விலையில் ஏற்படும் அதிகரிப்புக்களைத் தடுக்கும் வகையில், அரிசிக்கான கட்டுப்பாட்டு விலையை அரசு நிர்ணயித்துள்ளது. இந்தக் கட்டுப்பாட்டு

— 21ஆம் பக்கம் பார்க்க

# மீட்கப்பட்ட எலும்பு எச்சங்களால் பெரும் பரபரப்பானது கெற்பேலி

## அவை விலங்குகளுடையனவே என்பதை உறுதிப்படுத்தினார் சட்ட வைத்திய அதிகாரி



யாழ்ப்பாணம், ஏப்.10
தென்மராட்சிப் பிரதேசத்தில் நேற்றுக் கண்டுபிடிக்கப்பட்ட எலும்பு எச்சங்கள் மிருகங்களுடையனவே என்று உறுதிப் படுத்தப்பட்டுள்ளது. குறித்த எலும்பு எச்சங்கள் மனித எச்சங்களாக இருக்கும் என்று நம்பப்பட்டதை அடுத்து அந்தப் பகுதியில் பெரும் பரபரப்பு நிலை காணப்பட்டது.
இராணுவத்தினரின் நீண்ட காலப் பாவனையில் இருந்த தென்மராட்சியின் கெற்பேலிப்

21ஆம் பக்கம் பார்க்க

# நீதிமன்றத்தின் ஊடாக தடைக்கு சவால் விடுக

## தடை செய்யப்பட்ட அமைப்புகளுக்கு கூறுகின்றது பாதுகாப்பு அமைச்சு

கொழும்பு, ஏப்.10
இலங்கை அரசால் தடை செய்யப்பட்டுள்ள அமைப்புகள், நீதிமன்றங்கள் ஊடாகத் தமக்கெதிரான தடைக்கு சவால் விடுக்க முடியும் என்று தெரிவித்துள்ளது பாதுகாப்பு அமைச்சு.
அண்மையில் இலங்கை அரசு 16 புலம் பெயர் அமைப்புகளையும், 424 தனிநபர்களையும் தடை செய்வதாக அறிவித்திருந்தது.
அரசின் இந்த நடவடிக்கைக்கு பல்வேறு தரப்புகளிடம் இருந்து எதிர்ப்புக் கிளம்பியதுடன், தடை செய்யப்பட்டமைக்கான காரணங்களை விளக்க வேண்டும் என்ற கோரிக்கைகளும் விடுக்கப்பட்டிருந்தன.
இந்தநிலையிலேயே பாது

21ஆம் பக்கம் பார்க்க

# தென்னாபிரிக்கா புறப்பட்டது கூட்டமைப்பு எம்.பிக்கள் குழு

யாழ்ப்பாணம், ஏப். 10
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு நேற்றுக் காலை கட்டுநாயக்கா விமான நிலையத்திலிருந்து தென்னாபிரிக்காவுக்குப் புறப்பட்டுச் சென்றது.
இந்தக் குழுவில் பங்கெடுப்பார் என்று முன்னர் தெரிவிக்கப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை.சேனாதிராசா தவிர்ந்த ஏனையோர் நேற்றுப் புறப்பட்டுச் சென்றனர்.
தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், நாடாளுமன்ற உறுப்பினர்களான சுரேஷ்பிரேமச்சந்திரன், செல்வம் அடைக்கலநாதன், எம்.ஏ.சுமந்திரன் ஆகியோரே தென்னாபிரிக்கா பயணமாகி உள்ளனர்.
மூன்று தினங்கள் அங்கு தங்கியிருக்கும் அவர்கள் தென்னாபிரிக்காவின் பல்வேறு தலைவர்களையும் சந்தித்து இலங்கையின் இனப்பிரச்சினை, சாத்தியமான தீர்வுகள், தமிழ் மக்களுடைய

21ஆம் பக்கம் பார்க்க

# இறுதிப் போர் விடயத்தில் விசாரணைகள் அவசியம்

## இலங்கையிடம் வலியுறுத்துகிறது ஆஸி.

சிட்னி, ஏப். 10
இறுதிப் போரில் இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க் குற்றங்கள் தொடர்பில் நம்பகரமானதும் - சுதந்திரமானதுமான விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என்று வலியுறுத்தியுள்ள ஆஸ்திரேலியா, இலங்கையின் வட பகுதியில் படைக் குறைப்பும் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் கோரியுள்ளது.
இலங்கை அரசியல் தரப்புத் தலைவர்களுக்கும், ஆஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சர் ஜூலியாட் பிஷப்புக்கும் இடையே கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றுள்ளது.
அந்தச் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு வலியுறுத்தியுள்ளார்.

21ஆம் பக்கம் பார்க்க

# பறிபோனது கமலேந்திரன் பதவி

## அவரது இடத்துக்கு புதியவரை நியமிக்க வடமாகாண சபைச் செயலர் கோரிக்கை

கொழும்பு, ஏப்.10
வடக்கு மாகாணசபை உறுப்பினர் கந்தசாமி கமலேந்திரன் பதவியிழந்து விட்டார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.
அவரது பதவி இழப்பால் ஏற்பட்டுள்ள வெற்றிடத்தை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கோரி, வடக்கு மாகாண சபையின் செயலாளரினால் யாழ். மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலருக்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அந்தக் கடிதம் மேலதிக நடவடிக்கைக்காக கொழும்பு தேர்தல் திணைக்களத்துக்குப் பாரப்படுத்தப்பட்டுள்ளது என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.
வடக்கு மாகாணசபைக்கு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சார்பில் போட்டியிட்ட, ஈ.பி.டி.பியில் இருந்து அண்மையில் நீக்கப்பட்டவர் என்று அறிவிக்கப்பட்ட முன்னாள் யாழ். மாவட்ட அமைப்பாளரான கந்தசாமி கமலேந்திரன் அந்தக் கட்சியின் சார்பில்

21ஆம் பக்கம் பார்க்க

# சுகாதார பரிசோதகர்கள் விடயத்தில் நடைமுறைக்கு வராத உறுதிமொழி

## கவனவீர்ப்புப் போராட்டத்தில் குதிப்பதற்கு உள்ளுராட்சி மன்றங்களின் தவிசாளர்கள் தயார்

யாழ்ப்பாணம், ஏப். 10
வடக்கு மாகாண முதலமைச்சருடனான சந்திப்பின் போது பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் தொடர்பில் தீர்மானிக்கப்பட்ட விடயங்கள் இதுவரை வடமாகாண சுகாதார அமைச்சரினால் நடைமுறைப்படுத்தப்படாதமையைக் கண்டித்து வடக்குமாகாணத்திலுள்ள உள்ளுராட்சி மன்றங்களின் தவிசாளர்கள் கவனவீர்ப்பு போராட்டம் ஒன்றை நடத்தத் தீர்மானித்துள்ளார்கள்.
வழங்கப்பட்ட உறுதி மொழிகள் இதுவரை நடைமுறைப்படுத்தாதமை தொடர்பிலும், அதனால் தொடர்ச்சியாக நீடிக்கும்

21ஆம் பக்கம் பார்க்க

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# மத நல்லிணக்க ஊடக சந்திப்பில் கலகம் புரிந்தது பொது பல சேனா

யாழ்ப்பாணம்.ஏப்.10
மத நல்லிணக்கம் தொடர்பாக நடத்தப்பட்ட ஊடகவியலாளர் சந்திப்பு ஒன்றில் அத்துமீறி நுழைந்த பொது பல சேனா அமைப்பால் குழப்பம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஜாதிக பல சேனா என்ற அமைப்பால் ஏற்பாடு செய்யபட்டிருந்த அந்த ஊடகவியலாளர் சந்திப்புக்குத் தமக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை என்று தெரிவித்தே பொது பல சேனா அமைப்பினர் குழப்பத்தில் ஈடுபட்டனர்.



ஊடக சந்திப்பில் ஏற்பட்ட குழப்பத்தின் போது

நேற்றுக் கொம்பனித் தெருப் பகுதியில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் வட்டரெக்க விஜித தேரர் உட்பட ஏனைய மதங்களை சேர்ந்த பிரதிநிதிகள் இதில் கலந்து கொண்டிருந்தனர். அப்போது அங்கு திடீரென நுழைந்த பொதுபல சேனா அமைப்பின் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் உட்பட அந்த அமைப் பின் பிரதிநிதிகள் தமக்கும் அந்த ஊடக சந்திப்பில் கலந்து கொள்ள சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தினார். எனினும் அதை ஜாதிக பல சேனா அமைப்பினர் நிராகரித்ததை அடுத்து இரு தரப்பினருக்கும் இடையே கடும் வாக்குவாதம் ஏற்பட்டது.
இவ்வாறானதொரு ஊடகவியலாளர் சந்திப்பை ஏற்பாடு செய்தமைக்காக வட்டரெக்க தேரர் மன்னிப்புக் கோர வேண்டும் என்று வாக்குவாதத் தின் போது வலியுறுத்திய பொது பல சேனா அமைப்பினர், அங்கிருந்த முஸ்லிம் மதத்தலைவர்களுடனும் பலத்த தர்க்கத்தின் ஈடுபட்டனர்.
அதையடுத்து அங்கிருந்த பொலிஸார் இருதரப்பினரையும் சமாதானப்படுத்தியதுடன், பொது பல சேனா அமைப்பினரையும் அங்கிருந்து ஒருவாறு அகற்றியுள்ளனர். (ற-14)

## திருட்டுச் சந்தேகத்தில் ஐவர் மானிப்பாய் பொலிஸாரால் கைது

யாழ்ப்பாணம், ஏப்.10
குடாநாட்டின் பல்வேறு இடங்களிலும் இடம்பெற்ற வெவ்வேறு திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய 5 பேர் கொண்ட கும்பல் மானிப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றின் உத்தரவுக்கமைய விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.
குறித்த கும்பலிடம் இருந்து கணினிகள், நீர் பம்பிகள் மற்றும் வியாபார நிலையங்களில் திருடப்பட்ட உணவுப் பொருள்கள் என்பவற்றை மீட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.
மானிப்பாய், சாவகச்சேரி, வட்டுக்கோட்டை, கோப்பாய், தெல்லிப்பழை, சுன்னாகம் மற்றும் கிளிநொச்சி ஆகிய பொலிஸ் பிரிவுகளில் இடம்பெற்ற திருட்டுக்கள் தொடர்பில் கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டுக்கமைய விசாரணை மேற் கொள்ளப்பட்டதையடுத்து குறித்த கும்பலைத் தாம் மடக்கியதாக பொலிஸார் தெரிவித்தனர்.
சில நாள்களுக்கு முன்னர் சுன்னாகம் பொலிஸார் 12 பேரைக் கைது செய்ததோடு திருடப்பட்ட பல லட்சம் ரூபா பெறுமதியான பொருள் களையும் மீட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ-4)

## நாலாம் சடங்கு வீட்டில் திருடர்கள் கைவரிசை

### மணப்பெண்ணின் தாலி உட்பட 27 பவுண் நகைகள் திருட்டு

யாழ்ப்பாணம், ஏப். 10
திருமணம் முடிந்து நாலாம் நாள் சடங்கு இடம்பெற்ற வீட்டினுள் புகுந்த திருடர்கள் மணப்பெண்ணின் 15 பவுண் தாலிக்கொடியையும் 12 பவுண் தங்க நகைகளையும் திருடிச் சென்றுள்ளனர் என்று கோப்பாய் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.
இந்தச் சம்பவம் உரும்பிராயில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது.
சம்பவதினத்தன்று அதிகாலை 2.30 அளவில் குறித்த வீட்டுக்குள் புகுந்த திருடர்கள் தமது கைவரிசையைக் காட்டியுள்ளனர். இதன்போது மணப்பெண்ணின் 15 பவுண் தாலிக் கொடியையும் ஏனைய 12 பவுண் நகைகளையும் திருடர்கள் சுருட்டிக்கொண்டு மாயமகி உள்ளனர். மறுநாள் காலை எழுந்து பார்த்தபோதே நகைகள் திருடப்பட்டமை தெரிய வந்தது. இது தொடர்பில் கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகத் தெரிவித்தனர். (ஐ-4)

## இளம்பெண்ணை கடத்த முயற்சி

கிளிநொச்சி, ஏப். 10
கிளிநொச்சி அம்பாள்புரம் பகுதியில் வீதியில் சென்ற இளம் பெண் ஒருவரை ஓட்டோவில் வந்தவர்கள் கடத்திச் செல்ல முற்பட்டதால் பரபரப்பு ஏற்பட்டது.
இந்தச் சம்பவம் நேற்று மதியம் 12 மணியளவில் இடம்பெற்றுள்ளது. ஓட்டோவில் வந்தவர்கள் குறித்த இளம் பெண்ணை மறித்து வேறு முகவரி ஒன்றை விசாரித்து விட்டு அவரை ஓட்டோவில் ஏற்ற முயற்சித்துள்ளனர். எனினும் அந்தப் பெண் கூக்குரல் இட்டதால் ஓட்டோவில் வந்தவர்கள் தப்பிச்சென்று விட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-426)


## சர்வதேசம் சொல்வதை செவிமடுக்க வேண்டும்

### இலங்கைக்குப் பிரிட்டன் அறிவுரை

லண்டன், ஏப். 10
சர்வதேச சமூகம் சொல்வதை இலங்கை செவிமடுக்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ள பிரிட்டன், ஐக்கிய நாடுகள் சபையுடன் இலங்கை இணைந்து செயற்பட வேண்டும் என்றும் தெரிவித்துள்ளது.
பிரிட்டன் நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க் கிழமை இடம்பெற்ற விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய, அந்த நாட்டு வெளிவிவகார அமைச்சர் ஸுவைர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.
இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,
சர்வதேச சமூகம் ஐக்கிய நாடுகள் சபையினூடாகவே இலங்கை அரசுடன் பேசுகின்றது. அதை இலங்கை அரசு செவிமடுக்க வேண்டும். சர்வதேச சமூகம் என்ன கேட்கின்றது என்பதையும் புரிந்து கொள்ள வேண்டும். சர்வதேச சமூகம், ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தினூடாக விசாரணையைக் கோரியிருப்பது இலங்கையை நல்ல நிலைமைக்கு கொண்டு செல்வதற்கே.
இலங்கைக்கு எதிரான பிரேரணை ஜெனீவாவில் நிறைவேற்றப்படுவதில் எமது பிரதமரும் முன்னின்று செயற்பட்டார். நாம் பொதுநலவாய மாநாடு நடைபெற்ற போது எதனைக் கூறினோமோ அதையே செய்து முடித்திருக்கின்றோம்"- என்று தெரிவித்துள்ளார். (ற-5)

## பாகிஸ்தான் தளபதி யாழ். வருகை

யாழ்ப்பாணம், ஏப்.10
பாகிஸ்தான் இராணுவத் தளபதி இன்று யாழ்.குடாநாட்டிற்கு வருகின்றார். 05 நாள் பயணமாக இலங்கை வந்துள்ள அவர் இன்று குடாநாட்டிற்கு வருவதோடு இங்குள்ள நிலைமைகளையும் நேரில் பார்வையிடுவார் என்று கூறப்படுகின்றது. (ற-110)



இலங்கை வந்த பாகிஸ்தான் பாதுகாப்புப் படைகளின் தலைமை அதிகாரி ஜெனரல் ரஷாட் மொஹமூட் நேற்றுமுன்தினம் நாடாளுமன்ற கட்டடத் தொகுதியிலுள்ள படையினரின் நினைவுத் தூபிக்கு அஞ்சலி செலுத்தினார்.

## பரந்தனில் மீட்கப்பட்ட சடலத்தை உறவினர் அடையாளம் காட்டினர்

யாழ்ப்பாணம், ஏப். 10
பரந்தனில் மீட்கப்பட்ட சடலம் நேற்று உறவினர்களால் அடையாளம் காட்டப்பட்டது. இதன்படி சடலம் கண்டி, கலவெலவைச் சேர்ந்த சி.ரமேஷ் (வயது -21) என்பவருடையது எனத் தெரிய வந்துள்ளது.
கிளிநொச்சி, பரந்தன் ரயில் நிலையத் தண்டவாளத்துக்கு அருகில் பற்றையினுள்ளிருந்து குறித்த சடலம் கடந்த மாதம் 13 ஆம் திகதி மீட்கப்பட்டிருந்தது. சடலம் கிளிநொச்சி வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டிருந்த நிலையில் இரு வாரங்களுக்கு முன்னர் உடற் கூற்றுப் பரிசோதனை செய்யப் பட்டிருந்தது.இதன் போது ஜீன்ஸ் பொக்கெட்டிலிருந்து சிம் அட்டை மீட்கப்பட்டிருந்தது. குறித்த சிம் அட்டையை வைத்து தேடுதல் நடத்திய பொலிஸார், உறவினர்களை அடையாளம்கண்டு அழைத்து வந்து சடலத்தை காட்டினர். உறவினர்களும் சடலத்தை அடையாளம் காட்டியதைத் தொடர்ந்து அவர்களிடம் சடலம் நேற்று ஒப்படைக்கப்பட்டது.
இதேவேளை குறித்த நபருக்கு எதிராக நீதிமன்றங்களில் திருட்டு குற்றச்சாட்டு தொடர்பாக மூன்று வழக்குகள் நிலுவையிலுள்ளன என்றும் குறித்த நபர் கடந்த மார்ச் 5 ஆம் திகதி கிளிநொச்சி நீதிமன்றினால் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தார் என்றும் தெரியவந்துள்ளது. (ஐ-5)

## புத்தாண்டை முன்னிட்டு கைதிகளைப் பார்க்க வாய்ப்பு

கொழும்பு.ஏப்.10
சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு 13ஆம், 14 ஆம் திகதிகளில், கைதிகளை பார்வையிடுவதற்கு அனைவருக்கும் அனுமதியளிக்கப்படவுள்ளது என்று சிறைச்சாலைகள்திணைக்களம் தெரிவித்துள்ளது.
கைதிகளை பார்வையிடுவதற்கான விசேட தினங்களாக இந்த இரண்டு நாள்களும் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது என்று சிறைச் சாலைகள் ஆணையாளர் சந்திரரத்ன பல்லேகம கூறினார். இந்த இரண்டு விசேட தினங்களிலும் கைதிகள் விரும்பும் எந்தவொரு உணவையும், வழங்க முடியும் என்றும் அவர் தெரிவித்தார். (ச)

## குடும்பத் தலைவர் நஞ்சருந்திச் சாவு

### கடன் தொல்லையால் விபரீத முடிவு

யாழ்ப்பாணம், ஏப். 10
யாழ். நகரைச் சேர்ந்த இளங் குடும்பத் தலைவர் ஒருவர் திடீரென உயிர்துறந்தார். யாழ். நகரில் வசிக்கும் 28 வயதான அவர், கடன் தொல்லை தாளா மல் தற்கொலைசெய்து கொண்டார் என்று அவரது உறவி னர்கள் தெரிவித்தனர்.
திருமணமாகி இரண்டு வருடங்களேயாகும் அவருக்கு ஒரு ஆண் குழந்தையும் உள்ளது.
கடைத்தொகுதி ஒன்றைக் கட்டுவதற்காகப் பெற்ற கடனை அடைக்க முடியாத நிலையால் ஏற்பட்ட மன அழுத்தம் காரணமாகவே அவர் தற்கொலை செய்துகொண்டிருக்கலாம் என்று உறவினர்கள் தெரிவித்தனர்.
விசத்தை அருந்திவிட்டுப் படுத்துவிட்டார் என்றும் பல மணிநேரத்தின் பின்னரும் அவர் எழுந்திருக்காததை அவதானித்த பின்னரே அவர் இறந்து போயிருந்தமை தமக்குத் தெரியவந்தது எனவும் உறவினர்கள் கூறினர். யாழ் போதனா வைத்திய சாலைக்கு எடுத்து வரப்பட்ட அவரது சடலம் உடற்கூற்றுப் பரிசோதனை செய்யப்பட்ட பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் விசாரணைகளை நடத்தினார். (உ-4)

## ஆசிரியர்களுக்கான முற்கொடுப்பனவு நிதி இன்மையால் இழுபறி நிலையில்?

யாழ்ப்பாணம், ஏப்.10
ஆசிரியர்களுக்கான புது வருட முற்பணக் கொடுப்பனவு வழங்குவதற்கு வட மாகாண சபையால் போதிய நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.
இதனால் ஆசிரியர்களுக்கான முற்கொடுப்பனவு வழங்குவதில் இழுபறி நிலை ஏற்பட்டுள்ளதாக குற்றம் சாட்டப்படுகிறது.
வட மாகாணத்திலுள்ள ஆசிரியர்களுக்கான புது வருட முற்கொடுப்பனவு வழங்குவதற்கு 65 மில்லியன் ரூபா நிதி தேவைப்பட்ட போதும் வட மாகாண சபையால் 50 மில்லியன் ரூபா நிதியே ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
ஒதுக்கப்பட்டுள்ள நிதி மூலம் வவுனியா மன்னார் ஆகிய மாவட்டங்களில் உள்ள ஆசிரியர்களுக்கு முற்பணக் கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது. எனி னும் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் 80 வீதமான வர்களுக்கே நிதி போதுமானதாக உள்ளது. இதனால் ஆசிரியர்களுக்கு சீராக முற்பணம் வழங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என தெரிவிக்கப்படுகிறது.
கிளிநொச்சி மாவட்டத்துக்கு 8.5 மில்லியன் ரூபா நிதி தேவைப்படும் நிலையில் 6 மில்லியன் ரூபா நிதியே ஒதுக்கப்பட்டுள்ளது.
இதேவேளை புது வருட முற்பணக் கொடுப்பனவு கடந்த மார்ச் மாதச் சம்பளத்துடன் வழங்கு வதாக தெரிவிக்கப்பட்டு இறுதி நேரத்தில் நிறுத்தப்பட்டது. பின்னர் ஏப்ரல் மாதத்துக் கான சம்பளத்துடன் முற்பணமும் வழங்கப்படும் என பாடசாலை அதிபர்களுக்கு அறிவிக்கப்பட்டது.
இந்த நிலையில் நேற்று தமக்கு வழங்கப்பட்ட சம்பளப் பட்டியலில் இந்த முற்பணக் கொடுப்பனவு சேர்க்கப்படவில்லை என்று ஆசிரியர்கள் தெரிவிக்கின்றனர். (இது தொடர்புடைய செய்தி மேலும் ஒரு 3 ஆம் பக்கத்தில்)
(ஐ-4-410)

## ஓட்டோவுக்கு கல் எறிந்து சேதம் ஏற்படுத்திய இருவருக்கு பிணை

தென்மராட்சி, ஏப்.10
வீதியில் வந்த ஓட்டோ மீது கற்களை எறிந்து 37 ஆயிரம் ரூபா பெறுமதியான உதிரிப்பாகங்களுக்கு சேதம் ஏற்படுத்திய இரு வரை தலா 15 ஆயிரம் ரூபா பெறுமதியான ஆள்பிணையில் விடுவித்தது சாவகச்சேரி நீதிமன்றம்.
சாவகச்சேரி தனங்கிளப்பு வீதியில் இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பாக சாவகச்சேரி பொலிஸார் இரு வரைக் கைது செய்திருந்தனர்.
இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது இருவரையும் தலா 15 ஆயிரம் ரூபா வீதம் ஆள்பிணையில் செல்ல அனுமதித்த நீதிவான் பிரதி சனிக்கிழமைகளில் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் கையொப்பமிடல் வேண்டும் என்றும் உத்தரவிட்டார். (வ-9)

## வேம்பிராய் பகுதியில் அதிகரித்துவரும் திருட்டுக்கள்

தென்மராட்சி, ஏப்.10
மீசாலை வடக்கு வேம்பிராய்ப் பகுதியில் தொடரும் திருட்டுக்களால் அந்தப் பகுதி மக்கள் தாம் இரவு வேளைகளை அச்சத்துடன் கழிக்க நேர்ந்துள்ளதாகத் தெரிவித்தனர்.
முகமூடியணிந்த நிலையில் இரவு வேளைகளில் தொடர்ச்சியாகப் பல வீடுகளுக்குச் செல்லும் திருடர்கள் வீடுகளில் உள்ளவர்களை கத்தி முனையில் பய முறுத்தி அங்கிருந்து நகைகள், பணம் உட்பட பெறுமதிமிக்க பொருள்களை அபகரித்துச் செல்வதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.
கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு வேம்பிராய் சந்திக்கு அருகில் உள்ள இரு வீடுகளுக்குள் நுழைந்த திருடர்கள் ஒரு வீட்டில் தாலிக் கொடியையும் இன்னொரு வீட்டில் 15 ஆயிரம் ரூபா பணத்தையும் திருடிச் சென்றுள்ளனர்.
இடம்பெறும் திருட்டுச் சம்பவங்கள் தொடர்பாகக் கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்படுவதாகவும் அவர்கள் தெரிவித்தனர். (வ-9)

## அழ்கியல் கண்காட்சி

யாழ்ப்பாணம், ஏப். 10
வடமாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் யாழ். மாவட்ட மகளிர் அபிவிருத்தி நிலையங்களின் ஆடை வடிவமைத்தல், அழகியல், மனையியல் கண்காட்சி நாளை வெள்ளிக்கிழமை, யாழ். மத்திய கல்லூரியில் காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது.
மாவட்ட உத்தியோகத்தர் திருமதி நவமணி அலோசியஸ் ஜெயராஜன் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக, யாழ். மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் கலந்துகொள்ளவுள்ளார். (வ-5)

# பண்டிகைக் காலத்தையொட்டி முற்கொடுப்பனவு வழங்குக

### இலங்கை ஆசிரியர் சங்கம் வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளரிடம் கோரிக்கை

அச்சுவேலி, ஏப்.10
"வடக்கு மாகாணத்தில் கடமை புரியும் அதிபர், ஆசிரியர்களுக்கான பண்டிகைக் கால விசேட முற்பணக் கொடுப்பனவை உடனடியாக வழங்க வேண்டும்" என்று வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் மற்றும் வடக்கு மாகாணக் கணக்காளர் ஆகியோரிடம் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் தலைவர் யோசப் ஸ்ரானின் கோரிக்கை விடுத்துள்ளார்.
பண்டிகைக் கால விசேட முற்பணக் கொடுப்பனவு 8 ஆம் திகதி வரை வழங்கப்படவில்லை என்பதற்குக் கண்டனம் தெரிவித்திருப்பதோடு கொடுப்பனவை உடனடியாக வழங்குமாறு அவர் கோரியுள்ளார்.

> வடக்கு மாகாணத்தில் ஏப்ரல் மாதச் சம்பளத்துடன் கூட வழங்கப்படவில்லை. இது கண்டனத்துக்குரிய செயற்பாடாகும்.


இது தொடர்பாகக் கடிதங்களை அனுப்பி இருப்பதோடு தொலைபேசி மூலமும் வலியுறுத்தியுள்ளார்.
இது தொடர்பாகச் சங்கத்தின் தலைவர் தகவல் தெரிவிக்கையில்;
"நாடளாவிய ரீதியில் ஏனைய 8 மாகாணங்களிலும் பண்டிகைக் கால விசேட முற்பணக் கொடுப்பனவு மார்ச் மாத சம்பளத்துடன் வழங்கப்பட்டுள்ளது.
அதேவேளை வடக்கு மாகாணத்தில் ஏப்ரல் மாதச் சம்பளத்துடன் கூட அது வழங்கப்படவில்லை.
இது கண்டனத்துக்குரிய செயற்பாடாகும்.
வடக்கு மாகாண உயர் அதிகாரிகள் சாதாரணமாக அரச ஊழியர்களுக்குக் கிடைக்கக் கூடிய நன்மைகள், சலுகைகளை வழங்குவதில் இழுத்தடித்து வருகின்றனர்"- என்று தெரிவித்துள்ளார். (வ-11)



புத்தாண்டுச் சந்தையைப் பார்வையிட்டு பயனடையும் மக்கள்.

## வாழ்வின் எழுச்சி புத்தாண்டு சந்தை காரைநகரில் ஆரம்பம்

காரைநகர், ஏப்.10
காரைநகர் பிரதேச செயலர் பிரிவின் வாழ்வின் எழுச்சிப் புத்தாண்டுச் சந்தை நேற்று புதன்கிழமை காலை சுப்பிரமணிய வித்தியாசாலையில் ஆரம்பமானது.
காரைநகர் பிரதேச செயலர் திருமதி தே. பாபு தலைமையில் நடைபெற்ற ஆரம்ப நிகழ்வில் ஈழத்துச் சிதம்பர பிரதம சிவாச்சாரியார் சிவஸ்ரீ வீ. ஈஸ்வரக் குருக்கள் நாடா வெட்டி சந்தையை ஆரம்பித்து வைத்தார். நிகழ்வில் சமநல சேவைகள் திணைக்கள உதவி ஆணையாளர் எஸ். பற்றிக் நிரஞ்சன், யாழ். மாவட்ட சமுர்த்தி இணைப்பாளர் எஸ். ரகுநாதன், காரைநகர் பிரதேச சபை உறுப்பினர் வீ. கண்ணன், பிரதேச சபைத் தலைவர் வே. ஆனைமுகன் உள்ளிட்ட பலர் கலந்து கொண் டனர்.
புத்தாண்டுச் சந்தையில் பெருமளவு மக்கள் கலந்து கொண்டு பயன் பெற்றனர். இந்தப் புத்தாண்டு விற்பனைச் சந்தை தொடர்ந்து இரண்டு தினங்கள் இடம்பெற உள்ளது. (வ-250)



நீண்ட காலமாகச் சுத்தம் செய்யப்படாததால் கழிவு நீர் தேங்கிய நிலையில் வாய்க்கால்

## கழிவு நீர் கால்வாய் கவனிக்கப்படுமா?

கொழும்புத்துறை, ஏப்.10
யாழ். தாதியர் பயிற்சிக் கல்லூரிக்கு முன்பாகவும் பருத்தித்துறை வீதிக்கு அருகிலும் அமைந்துள்ள கழிவு நீர் கால்வாய் நீண்ட காலமாகச் சுத்தம் செய்யப்படாததால் பல இடங்களிலும் கழிவு நீர் தேங்கிக் காணப்படுகிறது.
கழிவுநீர் தொடர்ச்சியாக தேங்கி நிற்பதால் நுளம்புப் பெருக்கம் அதிகரித்துக் காணப்படுவதுடன் துர்நாற்றம் வீசுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.
தாதியர் பயிற்சிக் கல்லூரியில் பெருமளவு பயிற்சித் தாதியர் தங்கியிருந்து கல்வி கற்று வருவதுடன் குறித்த சூழலில் வங்கிகள், விற்பனை நிலையங்களும் இயங்கி வருகின்றன.
பழைமை வாய்ந்த குறித்த கழிவு நீர் கால்வாயின் தூர்வை மண் அகற்றப்பட்டு கழிவுநீர் இலகுவாகக் கடலுக்கு வடிந்தோட வசதியாக வடிகால் அமைப்புக்கள் சீர்செய்யப்பட வேண்டியதன் அவசியத்தை மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.
யாழ். நகரில் இருந்து கழிவு நீரைக் கடலுக்குக் கொண்டு செல்லும் கால்வாய்கள் பலவற்றிலும் இதேபோன்று நிலை காணப்படுகிறது. யாழ்ப்பாணத்தை அழகுபடுத்தும் வேலைத் திட்டத்தை மேற்கொள்ளும்போது கழிவுநீர் வடிகால்களின் சுத்தம் பேணலுக்கு முன்னுரிமை வழங்க வேண்டும் என்று சமூக ஆர்வலர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர். (வ-135)



தென்னிலங்கை நடைபாதை வியாபாரிகளிடம் பொருள் கொள்வனவில் மக்கள்

## சாவகச்சேரி சந்தைக்கு வெளியே களைகட்டும் நடைபாதை வியாபாரம்

### நகரசபை திண்டாட்டம்

சித்திரைப் புத்தாண்டு வியாபாரத்துக்காக இங்கு வரும் தென்னிலங்கை நடைபாதை வியாபாரிகளுக்கு இடம் ஒதுக்கிக் கொடுப்பதில் சாவகச்சேரி நகரசபை திக்கு முக்காடி வருகின்றது. இருந்த போதிலும் சந்தைக்கு வெளியே பொருள்கள் விற்பனையில் நடை பாதை வியாபாரிகள் ஈடுபட்டு வருகின்றனர். சாவகச்சேரி கைத்தொழில்வணிகர்மன்றத்தினரின் வேண்டுகோளின் படி சந்தைக்குள் வெளியூர் வியாபாரிகளுக்கு இடம் கொடுக்காமல் கடந்த சித்திரைப் புத்தாண்டு வியாபாரத்துக்காக பொது விளையாட்டு மைதானத்தையும் தீபாவளி வியாபாரத்துக்காக நகரசபை அலுவலகத்துக்கு முன்பாக உள்ள காணியையும் வெளியூர் வியாபாரிகளுக்கு ஒதுக்கியிருந்தனர்.
தற்போது பொது மைதானத்தில் மாலை வேளைகளில் கிரிக்கெட் சுற்றுப்போட்டி நடத்தப்படுவதாலும் அலுவலகத்துக்கு முன்பாக உள்ள காணியில் ரயில் பாதை அமைப்பதற்கான கிரவல் மண் பறிக்கப்பட்டுள்ளதாலும் வெளியூர் நடைபாதை வியாபாரிகளுக்கு இடம் ஒதுக்கிக் கொடுப்பதில் பெரும்சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன.
இருப்பினும் தற்போது வருகை தந்துள்ள வெளியூர் வியாபாரிகள் சந்தைக்கு வெளியே பொருள்கள் விற்பனையில் ஈடுபட்டு வருகின்றனர். நடைபாதை வியாபாரிகளிடம் பொருள்களை வாங்குவதில் மக்களும் ஆர்வமாக உள்ளனர். (வ)

# நுளம்பு ஒழிப்பு செயற்பாடுகள் வடக்கில் இம்முறை பாதிப்பு

### சமூக அமைப்புகள் தெரிவிப்பு

வலி. வடக்கு, ஏப். 10
சுகாதார அமைச்சால் முன்னெடுக்கப்பட்ட நுளம்பு ஒழிப்பு வார செயற்பாடுகள் வட மாகாணத்தில் கடந்த காலங்களைப் போன்று முழுமையான அளவில் வெற்றியளிக்கவில்லை என்றுபிரதேசமட்ட சமூகஅமைப்புக்கள் தெரிவிக்கின்றன.
கடந்த ஒரு வாரகாலமாக இடம் பெற்ற நுளம்பு ஒழிப்பு வார செயற்பாடுகள் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமையுடன் நிறைவு பெற்ற நிலையில் சமூக அமைப்புக்கள் இதனை தெரிவித்துள்ளன.
குறிப்பாக வட மாகாணத்தில் கடமையாற்றும் பொது சுகாதார பரிசோதகர்கள் தமது வெளிக்கள கடமையைப் புறக்கணித்துள்ளமை மற்றும் மருத்துவ மாதுகள் அகில இலங்கை ரீதியாகப் பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளமை போன்ற நடவடிக்கைகளுடன் வட மாகாண பிரதேச சபைகளின் சுகாதார ஊழியர்களும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களுடன் இணைந்து போராட்டங்களில் ஈடுபட்டுள்ளமை நுளம்புஒழிப்புநடவடிக்கையில் பின்னடைவுக்கு உள்ளாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

> வட மாகாண பிரதேச சபைகளின் சுகாதார ஊழியர்களும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களுடன் இணைந்து போராட்டங்களில் ஈடபட்டுள்ளமையால் பின்னடைவுக்கு உள்ளாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த காலங்களில் வீடு வீடாகச் சென்று விழிப்புணர்வு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டதாகவும் பொதுச் சுகாதார பரிசோதகர்களும் மருத்துவ மாதுகளும் ஒரு வார காலத்துக்கு திட்டத்தை ஒரு வாரத்துடன் நிறுத்திக் கொள்ளாமல் தொடர்ந்து இரண்டு வார காலம் வரை இந்த செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது. இந்த முறை குறிப்பிட்ட அலுவலர்கள் தமது பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டமையால் பாதிப்பு ஏற்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்படுகிறது. (வ-86)

## ராஜபக்ஷவுக்கு அனுசரணையாக பி.ஜே.பியும் நடந்து கொள்ளுமா?

**ஜூனியர் விகடனில் வெளியாகும் கழுகார் பதில்கள் பகுதியில் இவ்வாறு தெரிவிப்பு**

பி.ஜே.பி. மத்தியில் ஆட்சிக்கு வந்தால் தமிழீழம் என்ற பேச்சுக்கே இடமில்லை என்று கூறும் பொன்.ராதாகிருஷ்ணன், ஈழத்தில் நடந்த இனப் படுகொலைகளுக்குக் காரணமான இலங்கை ஜனாதிபதி ராஜபக்ஷவுக்கு ஆதரவாக காங்கிரஸைப்போல பி.ஜே.பியும் நடந்து கொள்ளுமா, இல்லையா என்ற கேள்விக்கு பதில் வழங்க வேண்டும்.

இவ்வாறு ஜூனியர் விகடனில் வெளியாகும் கழுகார் பதில்கள் பக்கத்தில் பிரசுரமாகியுள்ளது. குறித்த பகுதியில் வெளியாகிய மேலும் தகவல்கள் வருமாறு:-

தனித் தமிழீழம் என்பது பி. ஜே.பியின் கொள்கை அல்ல என்பதை அந்தக் கட்சி பல முறை விளக்கிவிட்டது.

இப்போது பிரச்சினை, தனித் தமிழீழம் அமைக்க இந்தியா ஆதரவு தரவேண்டும் என்பது அல்ல. ஈழத்தில் நடைபெற்ற இனப் படுகொலைகளுக்குக் காரணமான ராஜபக்ஷவுக்கு அனுசரணையாக காங்கிரஸைப் போல பி.ஜே.பியும் நடந்து கொள்ளுமா, இல்லையா என்பதுதான்.

1983 ஆம் ஆண்டு முதல் இலங்கைக் கடற்படையால் தொடர்ந்து தாக்கப்பட்டு வரும் தமிழ்நாட்டு மீனவர்களின் பாதுகாப்புக்கு பி.ஜே.பி. என்ன செய்யப்போகிறது.

கச்சதீவு விவகாரத்தில் பி.ஜே.பியின் நிலைப்பாடு என்ன என்பதுதான் இப்போதைய கேள்விகள். அதனைபொன்.ராதாகிருஷ்ணன் தெளிவுபடுத்த வேண்டும்"-என்றுள்ளது. (வ)

# தேசிய நலன் கருதியே தீர்மானம் புறக்கணிப்பு

## காங்.பேச்சாளர் அபிசேக் சிங்வி தெரிவிப்பு

டில்லி, ஏப்.10

இலங்கைக்கு எதிராக ஐ.நா. மனித உரிமைகள் சபையில் கொண்டு வரப்பட்ட தீர்மானத்தை, தேசிய நலன் மற்றும் அயல் நாடுகளுடனான உறவுகளைக் கருத்தில் கொண்டே புறக்கணிக்க முடிவெடுக்கப்பட்டது என்று காங்கிரஸ் கட்சியின் செய்தித் தொடர்பாளர் அபிசேக் சிங்வி தெரிவித்துள்ளார்.



அபிசேக் சிங்வி

சென்னையில் நேற்று முன்தினம் செய்தியாளர்களிடம் பேசியபோதே அவர் இவ் வாறு கூறியுள்ளார். இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"இலங்கையில் வாழும் தமிழர்களுக்கு 4 ஆயிரம் கோடி ரூபா நலத்திட்டங்களை இந்திய அரசு செயற்படுத்தி வருகிறது.

எந்தவொரு ஆட்சியிலும் இலங்கைத் தமிழர்களுக்கு வழங்கப்படாத உதவிகளை காங்கிரஸ் அரசு வழங்கி வருகிறது.

தேசிய நலன் மற்றும் அயல் நாடுகளுடனான உறவுகளை கருத்தில் கொண்டு, ஜெனிவா தீர்மானத்தை இந்தியா புறக்கணித்துள்ளது. இதன் அர்த்தம், இந்த தீர்மானத்தை நாம் ஏற்கவுமில்லை -நிராகரிக்கவுமில்லை". முன்னதாக இலங்கையில் வாழும் தமிழர்கள் மற்றும் தமிழ்நாட்டு மீனவர்களின் நலன்களைக் கருத்தில் கொண்டே, ஜெனிவா தீர்மானத்தை ஆதரிக்க முடிவெடுக்கப்பட்டதாக இந்திய வெளிவிவகாரச் செயலர் சுஜாதா சிங் குறிப்பிட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (வ)

# செந்தூரனைப் பார்வையிட அவரது மனைவிக்கு அனுமதி

வேலூர், ஏப்.10

வேலூர் சிறையில் உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த நிலையில், மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ள ஈழ அகதி செந்தூரனைச் சந்திக்க அவரது குடும்பத்தாருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

சென்னை மேல் நீதிமன்றம் இதற்கான அனுமதியை வழங்கி இருக்கிறது.

செந்தூரன் கடந்த மார்ச் மாதம் 7 ஆம் திகதி முதல் தமது விடுதலைக்காக உணவு தவிர்ப்புப் போராட்டத்தை மேற் கொண்டு வந்தார்.

இந்த நிலையில் மயக்கமடைந்ததைத் தொடர்ந்து வேலூர் அரச மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டிருந்த போதும், அவரை பார்ப்பதற்கு அவரது குடும்பத்தாருக்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கவில்லை.

இந்த நிலையில் செந்தூரனின் மனைவி மங்கையர்க்கரசி, சென்னை மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்த ஆள்கொணர்வு மனுவின் அடிப்படையில், இதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை தமது கணவருக்குச் சாதகமாக இந்த வழக்கினை மாற்றி எழுதுவதற்கு, சிறைச்சாலை அதிகாரிகள் தம்மிடம் 2 லட்சம் ரூபாய்களை லஞ்சமாகக் கேட்டதாகவும், அதற்கு மறுத்ததால் அவருக்கு எதிராக வெளிநாட்டு நபர்கள் தொடர்பான வழக்கை பதிவு செய்ததாகவும் தெரிவித்து, மங்கையர்க்கரசி தனி ஒரு மனுவைத் தாக்கல் செய்திருந்தார்.

அந்த மனு தொடர்பில் விசாரணை நடத்தி இரண்டு வாரங்களில் அறிக்கைப்படுத்த வேண்டும் என்று, தமிழக காவற்துறை திணைக் களத்துக்கு சென்னை மேல் நீதிமன்றம் உத்தரவிட்டது. (வ)

# இந்தியாவுக்கு எதிராக சீனாவை பயன்படுத்துவதை நிறுத்துங்கள்

## அரசிடம் கேட்கிறது ஐ.தே.க.

கொழும்பு,ஏப்.10

இந்தியாவுக்கு எதிராக சீனாவைப் பயன்படுத்துவதை இலங்கை அரசு நிறுத்திக் கொள்ள வேண்டும் என்று ஐக்கிய தேசியக்கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரான காமினி ஜெயவிக்கிரம பெரேரா, கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்றுக்கு கருத்து வெளியிடும்போதே இவ்வாறு கூறினார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

> **" அனைத்துலக விசாரணையின் கடுமையான விளைவுகளில் இருந்து, இராஜதந்திரம் மட்டும்தான் நாட்டையும் மக்களையும் காப்பாற்றும்.**

இந்தியாவுக்கு எதிராக சீனாவைப் பயன்படுத்துவதை இலங்கை அரசு நிறுத்திக் கொள்ளாவிட்டால், அது நாட்டில் குழப்பங்களையே உருவாக்கும்.

உள்ளூர் வாக்காளர்களைக் கவர்வதற்காக வீராவேசமான அறிக்கைகளை வெளியிட்ட போதிலும், ராஜபக்ஷ அரசு எல்லா முனைகளிலும் பிரச்சினைகளுக்குள் சிக்கியுள்ளது.

இலங்கை போன்ற அபிவிருத்தி அடைந்து வரும் நாட்டுக்கு, இந்தியாவும், சீனாவும் தேவையானவை.

இலங்கை அரசு உடனடியாக தனது வெளிவிவகாரக் கொள்கையை மீள்மதிப்பீடு செய்து கொண்டு, உண்மையான அணிசேராக் கொள்கைக்குத் திரும்ப வேண்டும்.

இலங்கையிலும் ஏனைய இந்தியப் பெருங்கடல் நாடுகளிலும் சீனாவின் தலையீடுகள் அதிகரிப்பது குறித்து இந்தியா கவலை கொண்டுள்ளது.

அதன்காரணமாகவே, காணாமற்போன மலேசிய விமானத்தைத் தேடுவதற்கு சீனக் கப்பல்களை தமது கடற்பரப்புக்குள் இந்தியா அனுமதிக்கவில்லை.

இது காட்டமான அறிக்கைகளை வெளியிடுவதற்கான தருணமல்ல.

அனைத்துலக விசாரணையின் கடுமையான விளைவுகளில் இருந்து, இராஜதந்திரம் மட்டும்தான் நாட்டையும் மக்களையும் காப்பாற்றும்.

தற்போதைய ஆட்சியாளர்களின் அணுகு முறையினால், இலங்கையின் வெளிவிவகாரக் கொள்கை குழம்பியுள்ளது.

இதுபோன்ற நிலை, முன்னொரு போதும் ஏற்பட்டதில்லை.

இந்தக் கட்டத்தில் இந்தியாவின் ஆலோசனையை கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

பொறுப்புக்கூறல் விவகாரங்கள் தொடர்பாக, சுதந்திரமான உள்நாட்டு விசாரணையை, ஐ.நா. மனிதஉரிமை ஆணையாளர் பணியகத்துடன் இணைந்து முன்னெடுக்க வேண்டும்.

விவேகமான அணுகுமுறையை அரசு கடைப் பிடிக்காது போனால், நிலைமைகள் மோசமடையும்-என்றார். (ச)

# கற்றல் நடவடிக்கைகளின் போது இடிந்து விழுந்த பாடசாலை சுவர்

## சேதமின்றித் தப்பினர் மாணவர்கள்

வலி.தென்மேற்கு.10

கற்றல் நடவடிக்கை இடம் பெற்றுக்கொண்டிருந்த வேளை பாடசாலையின் சுவர் திடீரென இடிந்து விழுந்து சேதத்துக்குள்ளானது. அங்கிருந்த மாணவர்கள் தெய்வாதீனமாக எதுவித காயமுமின்றித் தப்பித்துக் கொண்டனர்.

வலி.தென்மேற்குப் பிரதேசத்தில் உள்ள கட்டுடை சைவ வித்தியாசாலையில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

நூறு வருடங்களுக்கு மேல் பழைமை வாய்ந்த குறித்த பாடசாலையின் கட்டடத்தில் பல இடங்களில் வெடிப்பு ஏற்பட்டதால் இடிந்து விழும் நிலையில் இருந்தது. பாடசாலையின் நிலை குறித்து வலி.தென்மேற்குப் பிரதேச சபையின் தவிசாளர் எஸ். சிவகுமார் சம்பந்தப்பட்டவர்களின் கவனத்துக்குக் கொண்டு வந்த போதிலும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

கல்விமான்கள் பலரை உருவாக்கிய இந்தப் பாடசாலை தற்போது தரம் ஒன்றிலிருந்து தரம் 5 வரையான வகுப்புக்களுடன் இயங்கி வருகின்றது.

இந்தப் பகுதியிலுள்ள வறுமைக் கோட்டுக்குட்பட்ட மாணவர்கள் இங்கு கல்வி கற்று வருகின்றனர். இந்த நிலையில் குறித்த பாட சாலை அபிவிருத்தி செய்யப்படாதமை குறித்து பெற்றோர் விசனம் தெரிவித்துள்ளனர்.

இந்தப் பாடசாலையில் கல்வி கற்கும் ஏழை மாணவர்களின் கல்வி வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு சேதமடைந்த நிலையிலுள்ள பாடசாலைக் கட்டடத்தைப் புனரமைக்குமாறு கல்விச் சமூகம் கோரியுள்ளது.

(வ-115)





| | பழைய விலை | தள்ளுபடி விலை |
|---|---|---|
| சோபா செற் | 40,400/- | 35,820/- |
| அலுமாரி | 13,260/- | 9,900/- |
| கட்டில் | 8,750/- | 5,900/- |
| கணனி மேசை | 3,940/- | 3,180/- |
| TV ஸ்ராண்ட் | 6,265/- | 3,980/- |
| கணனி கதிரை | 4,390/- | 3,690/- |
| கண்ணாடிச் சாப்பாட்டு மேசை | 31,500/- | 22,900/- |


## மரண அறிவித்தல்

### கிட்ணபிள்ளை மாணிக்கராசா



அராலி தெற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திரு. கி. மாணிக்கராசா நேற்று (09.04.2014) புதன்கிழமை இறைபத மடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கிட்ணபிள்ளை - அம்பிகைப்பிள்ளை தம்பதியரின் அன்புமகனும் காலஞ்சென்றவர்களான மார்க்கண்டு - பார்வதிப்பிள்ளை தம்பதியரின் மருமகனும் சிவமலரின் அன்புக்கணவரும் விஜிதன், ஜீவிதா, நாகவதனி, உமாராஜ் ஆகியோரின் அன்புத் தந்தையும் பார்த்தீபனின் மாமனாரும் நடராசா, துரையப்பா, செல்வராசா, சித்திரவேலாயுதம், பாக்கியவதி காலஞ்சென்ற பரமேஸ்வரி ஆகியோரின் பாசமிகு சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.01.2014) வியாழக்கிழமை பி.ப. 2 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அராலி கிழக்கு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

## தவறிவிட்டது

நீர்வேலி தெற்கைச் சேர்ந்த தி.மதிவர்ணன் என்பவருடைய தே.அ.அட்டை (921312369V), காப்புறுதிப் பத்திரம், வாகனஅனுமதிப்பத்திரம் ஆகியவை நேற்று கொக்குவிலுக்கும், மாசியப்பிட்டிற்கும் இடையில் தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் பின்வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு வழங்கி உதவவும் சன்மானம் வழங்கப்படும். தொடர்பு : 077 5762631, 077 5361300.

## தரம் 05 மாணவர்களுக்கான புலமைப்பரிசில் கல்விக்கருத்தரங்கு

சண் கல்வி நிறுவனம் - உரும்பிராய், சாய் அறிவகம் - ஊரெழு ஒன்றிணைவில் சதா புவனேஸ்வரன் - விரிவுரையாளர், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை, S.வினோத்குமார் - ஞானோதயம் நூல் வெளியீட்டு ஆசிரியர்களின் வழிகாட்டலில்

காலம் : 11.04.2014 (வெள்ளிக்கிழமை)
நேரம் : பிற்பகல் 1 மணி
இடம் : காமாட்சி அம்மன் மணி மண்டபம் (பலாலி வீதி, காளி கோவிலடி, உரும்பிராய்)
அனுமதிக்கட்டணம் : நூறு ரூபாய் (கையேடு இலவசம்)

## நினைவலைகள்

13 ஆம் ஆண்டு — 12 ஆம் ஆண்டு







23.02.1924 பிறப்பு 03.02.1930
19.12.2001 இறப்பு 25.03.2002

அமரர் சுவாமிநாதர் பாலசிங்கம் — திருமதி சிவபாக்கியம் பாலசிங்கம்

(சுவாமியார் வீதி, கொழும்புத்துறை)

திதி 10.04.2014 (வியாழன்)

**என்றும் உங்கள் நினைவுகளுடன்**

நீர்வேலி தெற்கு, நீர்வேலி — குடும்பத்தினர்.

# புதிய இன வாழையால் பொருளாதார இழப்பு

## விவசாயிகள் கவலை

அச்சுவேலி, ஏப். 10
புதிதாக அறிமுகம் செய்யப்பட்ட கெவண்டீஸ் இன வாழைச் செய்கை மூலம் அறுவடை செய்யப்படும் வாழைக்குலை மற்றும் வாழைப் பழத்தைச் சந்தைப்படுத்த முடியாத நிலையால் தாம் பொருளாதார இழப்புக்கு உள்ளாகி இருப்பதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

> கெவண்டீஸ் வாழைப்பழம் யாழ்ப்பாண வாழை இனங்களின் சுவையிலும் மாறுபட்டது. இனிப்புத் தன்மை இவற்றில் மிக மிகக் குறைவு.

இழைய வளர்ப்பு முறையில் வெளி மாவட்டங்களில் உற்பத்தி செய்யப்பட்ட கெவிண்டீஸ் இன வாழை நாற்றுக்கள் தனியார் நிறுவனங்களால் கவர்ச்சிகரமான விளம்பரத்துடன் யாழ். மாவட்டத்தில் விற்பனை செய்யப்பட்டன. சிறிய அளவிலான பைகளில் நடுகை செய்யப்பட்டு ஒன்று 125 ரூபாவுக்கு மேல் 175 ரூபா வரையும் விற்பனை செய்யப்பட்டன. உயரம் குறைவானதும் காற்றுக்கு சாயாததும் நிறை கூடிய குலைகளை தரும் என்ற கவர்ச்சியான விளம்பரத்தை நம்பி விவசாயிகள் தமது தோட்டங்களிலும் பலர் வீடுகளிலும் அவற்றை நடுகை செய்தனர்.

ஆனால் அறுவடை செய்யப்படும் கெவண்டீஸ் வாழைக் குலைகளை யாழ்ப்பாணத்தில் நல்ல விலைக்கு விற்க முடியாத நிலையில் செய்கையாளர்கள் உள்ளனர். உள்ளூர் கதலி வாழைக் குலையிலும் குறை வான விலையில் ஒரு கிலோ 15 ரூபாவுக்குக் குறைவாகவே விற்கக் கூடியதாக உள்ளது.

கெவண்டீஸ் வாழைப்பழம் சுவையிலும் மாறுபட்டதாக உள்ளது. இனிப்புத் தன்மை இவற்றில் மிக மிகக் குறைவு. பழம் பச்சை நிறம் கொண்டது. சாதாரண வாழைப் பழங்களிலும் பார்க்க நீளமானது. இதனை உள்ளூர் மக்கள் விரும்பிக் கொள்வனவு செய்வதில்லை. ஆனால் வெளி மாவட்டங்களுக்கும் எடுத்துச் செல்லத் தயங்குகின்றனர்.

யாழ். மாவட்டத்தின் வெப்ப நிலை வீச்சு வறட்சிக்கு தாக்குப் பிடிக்க முடியாத நிலையில் மிகக் குறைந்த காலத்தில் கெவிண்டீஸ் வாழை குருத்தடைப்பு மற்றும் வெள்ளைக் குருத்து நோய்களுக்கு உள்ளாகி வருவதாகவும் கூறப்படுகின்றது.

யாழ். மாவட்டத்தில் புதிய பயிர் இனங்களை அறிமுகம் செய்யும்போது மாவட்ட நிலையை கருத்தில் கொள்ளாமலும் விவசாயிகளின் நலனை மற்றும் சந்தைப்படுத்தல் வசதிகளை கருத்தில் கொள்ளாமலும், அறிமுகம் செய்யப்படுவதால் விவசாயிகள் பெருமளவில் பாதிப்புக்கு உள்ளாவதாக விசனம் தெரிவிக்கப்படுகின்றது. (வ-11)

## 12 மாணவரின் கல்விச் செலவை பொறுப்பேற்ற மாணவர் சங்கம்

தென்மராட்சி, ஏப். 10
அண்மையில் வெளியாகிய ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சையில் சித்தி பெற்று சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் இணையவுள்ள மாணவர்களில் வறுமை நிலையில் உள்ள 12 மாணவர்களின் கல்விச் செலவை கல்லூரி பழைய மாணவர் சங்கம் ஏற்றுள்ளது.

வறிய மாணவர்களின் கல்வி நிலையை மேம்படுத்தும் நோக்குடன் கல்லூரியில் ஆரம்பிக்கப்படவுள்ள கணித, விஞ்ஞான, கலை, வர்த்தகம் ஆகிய பாடநெறிகளில் இணையும் மாணவர்களில் 12 பேர் தெரிவு செய்து கல்லூரியில் உயர் கல்வி முடியும் வரை கல்வி உதவி நிதி வழங்கப்படவுள்ளது.

தகைமையுள்ள மாணவர்கள் கல்லூரி அலுவலகத்தில் உரிய விண்ணப்பப் படிவத்தைப் பெற்று எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்னர் கையளிக்குமாறு அதிபர் க. அருந்தவபாலன் அறிவித்துள்ளார். (வ-9)

## சாவகச்சேரி மத்தியஸ்தர் சபை தவிசாளர் பதவி விலகல்

தென்மராட்சி, ஏப்.10
சாவகச்சேரி மத்தியஸ்தர் சபையின் தவிசாளராகக் கடமையாற்றிய ப.நடராசா தமது பதவியிலிருந்து விலகியுள்ளார். தாம் வெளிநாடு செல்லவுள்ளதால் மார்ச் 31 ஆம் திகதியுடன் பதவி விலகுவதாக மத்தியஸ்தர் சபையின் செயலாளருக்கு கடிதம் அனுப்பியிருந்தார்.

அவரது பதவி விலகலை ஆணைக்குழு ஏற்றுள்ளதாக ஆணைக்குழுவின் பதில் செயலாளர் வாசனா டி சில்வா கடிதம் அனுப்பியுள்ளார்.

தவிசாளரின் பதவி விலகலை அடுத்து பதில் தவிசாளராக செ.சபாரத்தினம் பணியாற்றி வருகிறார். (வ-9)

## அனலைதீவில் மக்கள் பங்கேற்பு அபிவிருத்தித் திட்டம்

ஊர்காவற்றுறை, ஏப்.10
ஊர்காவற்றுறை பிரதேச சபையின் மக்கள் பங்கேற்பு அபிவிருத்தித் திட்டம் தயாரிக்கும் நடவடிக்கை இறுதிக் கட்டதை எட்டியுள்ளதாக பிரதேச சபையின் தவிசாளர் ம.ஜெயகாந்தன் அறிவித்துள்ளார்.

இதற்கமைய மக்கள் பங்கேற்பு அபிவிருத்தித் திட்டத்தின் இறுதிக்கட்ட கலந்துரையாடல்கள் அனலைதீவு வடக்கு ஜே/37, அனலைதீவு தெற்கு ஜே/38 கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்தவர்களுக்கு நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை மாலை 6 மணிக்கு பிரதேசசபை உப அலுவலகத்திலும் -

எதிர்வரும் சனிக்கிழமை எழுவைதீவு ஜே/39 கிராம சேவையாளர் பிரிவைச் சேர்ந்தவர்களுக்கு பிற்பகல் 3 மணிக்கு எழுவைதீவு பொது நோக்கு மண்டபத்திலும் நடைபெறவுள்ளன. (ஒ)

## நாற்பது வருடங்களாக புனரமைக்கப்படாத வீதி

யாழ்ப்பாணம், ஏப்.10
புங்குடுதீவில் கேரதீவு, இறுப்பிட்டி ஆகிய பகுதிகளுக்குச் செல்லும் சங்குமாவடி வீதி மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. கடந்த 40 வருடங்களுக்கு மேலாக திருத்த வேலைகள் எதையும் காணாத வீதிஎன்ற பெயரை அவ்வீதி பெற்றுள்ளதாக அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இரண்டு மயானங்கள் உள்ள பிரதேசமாகவும் காணப்படுவதால் சடலங்களை தகனத்துக்காக எடுத்துச் செல்ல முடியாத அளவுக்கு வீதி மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

மேலும் புங்குடுதீவு அந்தோனியார் கோயில் வீதி, சவேரியார் கோயில் வீதி, றோ.க. பாடசாலை முன்வீதி என்பனவும் மோசமான நிலையில் காணப்படுவதாகவும் இவற்றைத் திருத்தியமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (வ-7)



போக்குவரத்துப் பாதையொன்றைக் கடந்து செல்வதற்கு ரயில் பாதையருகே சமிக்ஞை விளக்குகள் பொருத்தப்பட்டு வருகின்றன. சாவகச்சேரி ஆதார மருத்துவமனை முன்பாகவுள்ள கந்தையா வீதியில் பொருத்தப்பட்டுள்ள சமிக்ஞை விளக்குகளைக் காணலாம். (வ-9)

## பயனாளிகளிடம் நிதி அறவீடுகளை மேற்கொள்ளும் சமுர்த்தி வங்கிகள்

சமுர்த்திப் பயனாளிகளுக்கு வழங்கப்படும் கொடுப்பனவில் எதுவித அறவீடுகளையும் மேற்கொள்ளக் கூடாதென்று யாழ். மாவட்டச் செயலகம் அறிவித்தல் விடுத்திருந்தும் ஒரு சில சமுர்த்தி வங்கிகள் அவ்வாறான அறவீடுகளை தொடர்ச்சியாக மேற்கொண்டு வருவதாகச் சமுர்த்திப் பயனாளிகள் தெரிவிக்கின்றனர்.

சமுர்த்திப் பயனாளிகளுக்குரிய கொடுப்பனவுகள் தற்போது சமுர்த்தி வங்கிகளின் ஊடாக வழங்கப்பட்டு வருகின்றன. கடந்த டிசெம்பர் மாதத்திலிருந்து ஏப்ரல் மாதம் வரையிலான கொடுப்பனவு வழங்கப்பட்டு வருகின்றது. இந்தக் கொடுப்பனவுகள் வழங்கப்படும் போது, சமுர்த்திப் பயனாளிகள் வங்கியில் பெற்ற கடனுக்குரிய கட்டுப்பணத் தொகையைக் கழிப்பதோ அல்லது பயனாளியின் சேமிப்புக்குரிய தொகையை கழிப்பதோ மேற்கொள்ளப்படக்கூடாதென்று அறிவுறுத்தப்பட்டிருந்தது.

மாவட்டச் செயலகத்தால் விடுக்கப்பட்ட இந்த அறிவுறுத்தலை மீறி ஒரு சில சமுர்த்தி வங்கிகள் இந்தக் கொடுப்பனவுகள் வழங்கப்படும் போது அறவீடுகள் செய்து வருவதாகப் பயனாளிகள் குற்றஞ் சுமத்தியுள்ளனர்.

இது தொடர்பில் யாழ். மாவட்ட சமுர்த்தி உதவி ஆணையாளரைத் தொடர்பு கொண்டு கேட்டபோது, குறித்த சமுர்த்தி வங்கிகளை இனங்காணும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர்கள் மீது உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் தெரிவித்தார். (வ- 5)

## லான்ட்மாஸ்டரை மோதியது கார்- 5 பேர் காயம்

தென்மராட்சி, ஏப்.10
பழுதடைந்த மோட்டார் சைக்கிளை ஏற்றி வந்த லான்ட்மாஸ்டர் வாகனம் மீது வேக மாக அதே திசையில் வந்தகாரொன்று மோதிக் கொண்டது. இதனால் லான்ட்மாஸ்டருக்குள் மோட்டார் சைக்கிளைப் பிடித்துக் கொண்டு நின்ற மூவரும் லான்ட்மாஸ்டர் மற்றும் கார் ஆகியவற்றின் சாரதிகளும் காயமடைந்தனர். மூன்று வாகனங்களும் பலத்த சேதமடைந்தன.

கைதடி- நுணாவில் வைரவர் கோயில் சந்திக்கு அருகில் ஏ-9 வீதியில் திங்கட்கிழமை இரவு 8 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றது.

விபத்தில் காயமடைந்த ஐந்து பேரும் சாவகச்சேரி ஆதார மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டு அவர்களில் ஒருவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார். மட்டுவில் தெற்கைச் சேர்ந்த கிருஷ்ணன் நிரோஜன் (வயது-21), கனகலிங்கம் திவாகர் (வயது-26), பொன்னர் தேவராஜா (வயது-62), லான்ட்மாஸ்டர் சாரதியான தனபாலசிங்கம் தர்மகுலசிங்கம் (வயது-43), கார்ச் சாரதியான யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த நடராஜா தமிழ் அழகன் (வயது-49) ஆகியோர் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு அவர்களில் த.தர்மகுலசிங்கம் என்பவர் யாழ். போதனா மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டார். சாவகச்சேரி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை மதிய உணவருந்த மோட்டார் சைக்கிளில் வீட்டுக்குச் சென்ற அரச உத்தியோகத்தர் வீதியைக் கடக்க முற்பட்ட வேளையில் ஏ-9 வீதியில் வந்த மற்றொரு மோட்டார் சைக்கிளுடன் மோதுண்டு காயமடைந்தார். இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் பகல் சாவகச்சேரி புகையிரத நிலைய வீதிச் சந்தியில் இடம்பெற்றது.

சாவகச்சேரி கல்வயலைச் சேர்ந்த சின்னத்தம்பி ஆனந்தகுமார் (வயது-36) என்பவர் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். (வ-9)

## மூடப்பட்ட சனசமூக நிலையத்தை இயங்க வைக்குமாறு கோரிக்கை

வலி.தென்மேற்கு, ஏப்.10
குறிப்பிட்ட சில இளைஞர்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள கருத்து முரண்பாட்டாலும் ஒற்றுமையின்மையாலும் பல வருடங்களாகச் சிறப்பாக இயங்கி வந்த சுதுமலை வடக்கு நாமகள் சனசமூக நிலையம் கடந்த ஒரு மாதத்துக்கு மேலாக மூடப்பட்டுள்ளது.

இந்த நிலை குறித்து விசனம் தெரிவித்துள்ள வாசகர்கள் குறித்த சனசமூக நிலையத்தைத் தொடர்ந்தும் இயங்க வைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு வலி. தென்மேற்கு சனசமூக நிலையங்களின் சமாசத்தையும் அபிவிருத்தி உத்தியோகத்தரையும் கோரியுள்ளனர்.

குறைபாடுகளுடன் இயங்கி வந்த மேற்படி சனசமூக நிலையம் அந்தப் பகுதியைச் சேர்ந்த இளைஞர்கள் எடுத்துக் கொண்ட விடாமுயற்சியால் பல இலட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டு புதுப்பொலிவுடன் இயங்கி வந்தது.

வாசகர்களின் விருப்பத்தைப் பூர்த்தி செய்யும் வகையில் ஒரு குறையுமின்றி பல வருடங்களாக இயங்கி வந்த சனசமூக நிலையம் குறித்து ஒரு சில இளைஞர்கள் மத்தியில் ஏற்பட்ட கருத்து முரண்பாட்டாலும் ஒற்றுமையின்மையாலும் கழிவு ஒயில் வீச்சுக்கு இலக்கானது.

அதையடுத்து கடந்த ஒரு மாதத்துக்கு மேலாக குறிப்பிட்ட சனசமூக நிலையம் மூடப்பட்டுள்ளது.

கழிவு ஒயில் வீச்சுக்கு இலக்கான குறித்த கட்டடத்தில் முன்பள்ளி மட்டும் இயங்கி வருகின்றது.

இந்த நிலை குறித்து கவலை தெரிவித்துள்ள வாசகர்கள் சனசமூக நிலையத்தைத் தொடர்ந்து இயங்க வைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்டவர்களைக் கோரியுள்ளனர். (வ-115)

## கன்னத்தில் அறைந்தவருடன் கெஜ்ரிவால் நேற்றுச் சந்திப்பு

டில்லியில் தேர்தல் பிரசாரத்தின்போது ஆம் ஆத்மி கட்சியின் தேசிய அமைப்பாளர் அர்விந்த் கெஜ்ரிவாலை ஓட்டோச் சாரதி ஒருவர் கடந்த செவ்வாய்க்கிழமை கன்னத்தில் அறைந்த சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியது.

இந்நிலையில், நேற்றுத் தன்னைக் கன்னத்தில் அறைந்த ஓட்டோச் சாரதியின் வீட்டுக்குச் சென்றார் அரவிந்த் கெஜ்ரிவால்.

தன்னை நேரில் சந்திக்க வந்த அரவிந்த் கெஜ்ரிவாலைக் கண்டு நெகிழ்ந்த ஓட்டோச் சாரதி, தான் செய்தது மிகப் பெரிய தவறு என்றும், தன்னை மன்னிக்க வேண்டும் என்றும் கைகூப்பிக் கேட்டுக்கொண்டார்.

டில்லி புறநகர் பகுதியில் உள்ள ஓட்டோ சாரதி லாலியைச் சந்தித்த பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய கெஜ்ரிவால், நான் அவரை மன்னித்துவிட்டேன் என்றார்.

டில்லி சுல்தான்புரியில் அவர் பிரசாரம் செய்தபோது, தொண்டர்களுடன் நின்றிருந்த லாலி என்ற ஓட்டோச் சாரதி, ஜீப்பில் ஏறி கெஜ்ரிவாலுக்கு மாலை அணிவித்தார். மாலையைக் கெஜ்ரிவால் ஏற்கும்போதே, திடீரென அவரது கன்னத்தில் அறைந்தார் லாலி.

தனது தாக்குதலுக்கு காரணம் தெரிவித்த லாலி, டில்லியில் ஓட்டோக்காரர்களுக்கு அளித்த வாக்குறுதிகளைக் கெஜ்ரிவால் நிறைவேற்றாததால் தான் அவரைத் தாம் அறைந்ததாகக் கூறினார்.

இதனிடையே, இது போன்ற தாக்குதல் சம்பவங்கள் நடந்தாலும், மற்றத் தலைவர்களைப் போல் தனது பாதுகாப்பைப் பலப்படுத்திக்கொள்ளப் போவதில்லை என்று அரவிந்த் கெஜ்ரிவால் திட்டவட்டமாக தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (கு)

# ஸ்ராலினுடனான உறவை யாருமே பிரிக்கமுடியாது

## மு.க. அழகிரி அந்தர் பல்டி

சென்னை,ஏப் 10

மு.க.ஸ்ராலினுடனான தனது உறவை யாராலும் பிரிக்க முடியாது. கொள்கையால் மட்டுமே பிரிந்துள்ளோம் என்று, சகோதரச் சண்டையால் தி.மு.கவில் இருந்து நிரந்தரமாகவே நீக்கப்பட்ட மு.க. அழகிரி கூறியுள்ளார்.

தேனி மாவட்டம் கம்பம் பகுதியில் நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொள்வதற்காக சென்ற அழகிரி, செய்தியாளர்களிடம் பேசுகையில்,



மு.க. அழகிரி

மு.க.ஸ்ராலின் எனது சகோதரர். அவருடனான எனது உறவை யாராலும் பிரிக்க முடியாது. கொள்கையால் மட்டுமே நாம் பிரிந்துள்ளோம் என்று கூறினார்.

மேலும், கருணாநிதி இல்லை என்றால், தி.மு.கவே இல்லை என்றும், புதிய கட்சி ஆரம்பிக்கும் எண்ணம் எதுவும் தனக்கு இல்லை என்றும் அவர் கூறினார்.

நிகழ்ச்சியின்போது, ம.தி.மு.க வேட்பாளர் அழகு சுந்தரம் மற்றும் காங்கிரஸ் வேட்பாளர் ஜே.எம். ஆருண் ஆகியோர் அழகிரியைச் சந்தித்து ஆதரவு கோரினர். (கு)

# மும்முனைப் போட்டியில் 3 மத்திய அமைச்சர்கள்

புதுடில்லி,ஏப் 10

மக்களவைத் தேர்தலுக்காக டில்லியில் இருக்கும் ஏழு தொகுதிகளில் பரப்புரைகள் யாவும் நேற்றுமுன்தினம் செவ்வாய்கிழமை மாலையுடன் ஒய்ந்தன. இங்கு காங்கிரஸ் சார்பில் போட்டி யிடும் மூன்று மத்திய அமைச்சர்கள் மும்முனைப் போட்டியில் சிக்கியுள்ளனர்.

கடந்த தேர்தலில் பாரதிய ஜனதாவுடனான நேரடிப்போட்டியில் அனைத்து ஏழு தொகுதிகளையும் வென்ற காங்கிரசுக்கு இந்த முறை ஆம் ஆத்மி கட்சியும் போட்டியில் இணைந்ததால் மும்முனைப் போட்டியாக மாறியுள்ளது.


இதில், மூன்றாவது முறையாக அதே தொகுதிகளில் போட்டியிடும் மத்திய சட்டத்துறை அமைச்சரான கபில் சிபல், மகளிர் மற்றும் குழந்தைகள் நலத்துறையின் கிருஷ்ணா தீர்த் மற்றும் முன்னாள் அமைச்சரான அஜய் மாக்கன் ஆகியோரும்விடுபட்டிருக்கவில்லை.

டில்லியின் சாந்தினி சவுக்கில் போட்டியிடும் கபில் சிபல், கடந்த 2004 தேர்தலில் பா.ஜ.கவில் போட்டியிட்ட தொலைக்காட்சித் தொடரின் நடிகையான ஸ்மிருதி ராணியை வென்றார். அதன் பிறகு, பா.ஜ.க சார்பில் அதன் மாநில தலைவரான விஜய்கோயலை வென்றார். இந்தமுறை அவருக்கு ஆம் ஆத்மி சார்பில் போட்டியிடும் முன்னாள் பத்திரிகையாளரான அசுதோஷும் கடும்போட்டியாளராக இருக்கிறார்.

புதுடில்லி தொகுதியில் போட்டியிடும் அஜய் மாக்கன், கடந்த தேர்தலில், பா.ஜ.கவில் மத்திய அமைச்சராகவிருந்த ஜெக்மோகனை 2004 இல் முதன் முறையாகவும், இரண்டாவதாக விஜய் கோயலையும் தோற்கடித்தார். இந்தமுறை அவரை பாஜகவிற்காக எதிர்க்கும் அதன் தேசியத் தொடர்பாளரான மீனாட்சி லேக்கி, அப்பகுதியில் மிகவும் பிரபலமானவர். ஆம் ஆத்மி சார்பில் நரேந்தர் மோடியை, இளம் பெண்ணின் கைப்பேசி ஒட்டு கேட்கும் வழக்கில் சிக்க வைத்த பத்திரிகையாளர் ஆஷிஷ் கெஹதான் மூன்றாவது முனை போட்டியாளராக இருக்கிறார்.

தனி தொகுதியான வடமேற்கு டில்லியில் கிருஷ்னா தீர்த், அமித் ஆர்யாவையும், அதற்கு முன்பாக மீரா காவரியாவையும் பா.ஜ.க சார்பில் தோற்கடித்திருந்தார். இம்முறை இவரை பா.ஜ. கவில் தலித் சமூகத்தின் தலைவரான உதித்ராஜ் எதிர்க்கிறார். இவர், தாம் தனியாக நடத்தி வந்த கட்சியைக் கலைத்துவிட்டு பா.ஜ.கவில் இணைந்தவர். இங்கு, ஆம் ஆத்மி சார்பில் மற்றொரு முன்னாள் பத்திரிகையாளரான ராக்கி பித்லான் போட்டியில் உள்ளார். இவர், டெல்லியில் 49 நாள் ஆட்சி செய்த அக்கட்சியின் அர்விந்த் கேஜ்ரிவாலின் அமைச்சரவையில் உறுப்பினராக இருந்தவர்.

இவர்களுடன், மற்றத் தொகுதிகளில் நம் தேசத் தந்தையில் ஆம் ஆத்மி சார்பில் கொள்ளுப் பேரன் ராஜ்மோகன் காந்தி, பா.ஜ.கவில் போஜ்புரி நடிகரான மனோஜ் திவாரி ஆகியோரும் போட்டியிடுகின்றனர். (கு)



குஜராத் மாநிலம், வடோதராவில் நேற்று வேட்பு மனுத் தாக்கல் செய்தார் பா.ஜ.கவின் பிரதமர் வேட்பாளர் நரேந்திர மோடி.(கு)

## பத்ம பட்டத்தை பரப்புரையின்போது வேட்பாளர் பயன்படுத்தத் தடை

புதுடில்லி,ஏப் 10

தேர்தல்களில் போட்டியிடும் வேட்பாளர்கள் பத்ம' பட்டம் பெற்றிருந்தால், பரப்புரையின் போது அதைப் பயன்படுத்துவதை தவிர்க்க வேண்டும் என்று தேர்தல் ஆணையம் அறிவுறுத்தியுள்ளது. 2004ஆம் ஆண்டு பத்மஸ்ரீ' பட்டம் பெற்ற இந்திய ஹொக்கி அணியின் முன்னாள் தலைவரும், ஒடிஸா மாநில சுந்தர்கர் தொகுதியின் பிஜூ ஜனதா தள வேட்பாளருமான திலீப் திர்கிக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் இது குறித்து மாவட்ட தேர்தல் அதிகாரி பூபேந்திர சிங் பூனியா தெரிவித்துள்ளதாவது:-

தேர்தல் பிரசாரச் சுவரொட்டிகளிலோ, விளம்பரப் பலகைகளிலோ, துண்டுப் பிரசுரங்களிலோ இதர பிரசார முறைகளிலோ பத்ம' பட்டம் பயன்படுத்தப்படுவதைத் தவிர்க்க வேண்டும் என்றுள்ளது. (கு)

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு
இளவரசி சேலைச் சோலை ஸ்தாபனம்
வழங்கும்
மாபெரும் மலிவு விற்பனை
கொட்டன் சாறி 500/=
வேக் சாறி 1,000/=
சூரக் சாறி W/B 750/=
சேட் 500/=
44" கொட்டன் சீத்தைகள் 1M - 150/=
36" கொட்டன் சீத்தைகள் 1M - 100/=
மேலும் பல விலைக்கழிவுகள்
இளவரசி சேலைச் சோலை ஸ்தாபனம்
125, மின்சார நிலைய விதி,
யாழ்ப்பாணம். (C/13463)(7.6.3)

வேலை ஆள்கள் தேவை
எமது ஸ்தாபனத்திற்கு கொழும்பில் தங்கியிருந்து வேலை செய்வதற்கு விற்பனையாளர் தேவை. தங்குமிட வசதியும், மூன்று நேர உணவும் வழங்கப்படும். ஆரம்ப வேதனம் ரூபா 10000/= இலிருந்து வழங்கப்படும்.
ஆண்கள் மட்டும் வயது 18-22 வரை
தொடர்பு : 11-A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
T.P : 021 222 3857 (46644)(7.6.3)

வேலை ஆள்கள் தேவை
எமது ஸ்தாபனத்திற்கு பொதி செய்வதற்கு பெண் பிள்ளைகள் தேவை. நாள் ஒன்றுக்கு ரூபா 300/= இலிருந்து 350/= வரை வழங்கப்படும். வயது 18 தொடக்கம் 30 வரை. வேலை நேரம் காலை 8 மணி முதல் மாலை 5.30 மணி வரை.
தொடர்பு : 11-A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
T.P : 021 222 3857 (46645)(7.6.3)

12.04.2014 முதல் ஆரம்பமாகின்றது
நில அளவைக் கள உதவியாளர் தரம் III கமநல சேவைகள்
எழுதுநர் சேவை III ஆம் வகுப்பிற்கு
நியமனம் செய்வதற்கான போட்டிப் பரீட்சைக்கான தயார்படுத்தல் வகுப்புகள்
சித்திரை 12 ஆம் திகதி முதல் பிரதி சனி, ஞாயிறு தினங்களில்
பதிவுகளை முன்கூட்டியே மேற்கொள்ளவும்.
தொழில்முறை மற்றும் பட்டப்படிப்பகம்
SCHOOL OF PROFFESSIONAL AND DEGREE STUDIES [Pvt] Ltd
Bharathiar University (India)
தொடர்புகளுக்கு: இல. 65, அம்மன் வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். 077 177 7061, 021 221 9793 (C/13467)(7.6.3)

பதிவுகளுக்கு முந்துங்கள்! பாரதியார் பல்கலைக் கழகம்- தொலைதூரக்கல்வி
கலை,விஞ்ஞான,வர்த்தகத் துறைகளில் இளமாணி,முதுமாணி,பட்டய மற்றும் பட்டமேற்பட்டய கற்கைகளுக்கான பதிவுகள் 14.04.2014 ஆரம்பம்
தொடர்புகளுக்கு – தொழிற்துறை மற்றும் பட்டப்படிப்பகம்,இல.65,அம்மன் வீதி கந்தர்மடம் யாழ்ப்பாணம்
Phone-0212219793, Hot Line-0771777061,Email-spads.edu@gmail.com,Web-www.spads.edu.lk (C/13466)

# மாயமான விமானத்திலிருந்து மீண்டும் சிக்னல்

பேர்த்.ஏப் .10
மாயமான விமானத்தில் இருந்து மீண்டும் சிக்னல்கள் கண்டறியப்பட்டன. இதனால், தேடலில் முன்னேற்றம் உள்ளதாக ஆஸ்திரேலியக் கடற்படை அதிகாரிகள் தெரிவித்தனர்.
இது குறித்து ஆஸ்திரேலியக் கடற்படை அதிகாரி அங்கஸ் ஹுஸ்டன் கூறுகையில், ஆஸ்திரேலிய கடற்படையின் நீர்மூழ்கி கப்பலின் நீள் உருளை வடிவிலான சோனார் கருவி நேற்று இரண்டு சிக்னல்களைக் கண்டறிந்துள்ளது.
இதன் அடிப்படையில் நாம் சரியான தேடுதல் பாதையில் தற்போது உள்ளோம் என்பது தெளிவாகியுள்ளது. எனினும் விமானம் தொடர்பாகத் தடயங்கள் தென்படும்வரை அதிகாரப்பூர்வமாக முன்னேற்றத்தைத் தெரிவிக்க இயலாது. விமானம் தொடர்பான உறுதியான தகவல்கள் கிடைக்கும் என்று உறுதியுடன் எதிர்பார்க்கிறோம்.



சில தினங்களில் விமானம் அல்லது விமானத்தின் எஞ்சிய பாகங்கள் தொடர்பான தகவல் கிடைக்கும் என்பதை நம்பிக்கையுடன் கூறலாம். விமானம் விழுந்த பகுதியை எமது குழுவினர் நெருங்கிவிட்டனர். சிக்னல் தொடர்பாக அதிகாரப்பூர்வச் சான்றுகள் ஆராய்ச்சியாளர்களிடமிருந்து கிடைத்த பிறகு அவை வெளியிடப்படும் என்றார் அவர்.
கடந்த சனிக்கிழமை அன்று முதன்முறையாக சிக்னல் ஒன்றை இங்கிலாந்தின் கண்காணிப்புக் கருவி பதிவு செய்தது. இதனை அடுத்து சிக்னல் கிடைக்கப்பட்ட இடத்துக்கு ஆளில்லா சோனார் நீர்மூழ்கி இயந்திரம் விரைந்தது.
இந்த நிலையில், நேற்று மீண்டும் சிக்னல்கள் கிடைத்துள்ளமை தேடலில் முன்னேற்றமாகப் பார்க்கப்படுகிறது. தற்போது சிக்னல்கள் கிடைத்த இடத்தை மையமாகக் கொண்டு கடற்படை ஆராய்ச்சியாளர்கள் தங்களது பணியைத் தொடர உள்ளனர். (த)

## இந்தோனேசியாவில் தேர்தல்

ஜகார்த்தா.ஏப் .10
இந்தோனேசியாவில் தேசிய மற்றும் பிராந்திய நாடாளுமன்ற உறுப்பினர்களை தெரிவு செய்வதற்கான தேர்தல் நேற்றுப் புதன்கிழமை முதல் நடைபெற்றது.
560 தேசிய நாடாளுமன்ற ஆசனங்கள் உட்பட சுமார் 19,000 ஆசனங்களுக்காக வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்.
இந்தோனேசியாவில் எதிர்வரும் ஜுலை மாதம் 09ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கு வேட்பாளர்களை நியமிக்கக்கூடிய கட்சிகள் எவையென இந்தத் தேர்தல் தீர்மானிக்குமென்று அந்த நாட்டுச் செய்திகள் தெரிவிக்கின்றன.
எதிர்க்கட்சியான ஜனநாயகக் கட்சி கூடுதல் ஆசனங்களைப் பெறுமென்று எதிர்பார்க்கப்படுகின்றது. இந்தக் கட்சியின் வேட்பாளரான ஜோகோ விடோடோ என்பவர் அடுத்த ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்படலாமென்று இந்தோனேசியப் பிரஜைகள் பலர் எதிர்பார்க்கின்றனர்.
இந்தோனேசியாவானது உலகில் அதிகளவான முஸ்லிம்களைக் கொண்டுள்ள நாடாகும். அத்துடன், தென்கிழக்கு ஆசியாவில் ஆகவும் கூடிய பொருளாதாரத்தை உடைய நாடாகும்.
இந்தத் தேர்தலில் சுமார் 187 மில்லியன் இந்தோனேசியப் பிரஜைகள் வாக்களிப்பதற்குத் தகுதி பெற்றுள்ளனர். கிட்டத்தட்ட 22 மில்லியன் மக்கள் முதல் தடவையாக வாக்களிக்கின்றனர்.
வாக்களிப்பை அதிகரிக்கும் வகையில் நேற்றுப் புதன்கிழமையை பொது விடுமுறையாக இந்தோனேசியாவில் அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் அந்த நாட்டுச் செய்திகள் தெரிவிக்கின்றன. (த)

# இஸ்லாமாபாத் சந்தையில் நேற்றுக் குண்டு வெடிப்பு

## 20 பேர் பரிதாபச் சாவு

இஸ்லாமாபாத்.ஏப் .10
பாகிஸ்தான் தலைநகரான இஸ்லாமாபாத்தின் புறநகர்ப் பகுதியில் நேற்றுப் புதன்கிழமை அதிகாலை இடம்பெற்ற மிகவும் சக்தி வாய்ந்த குண்டு வெடிப்பில் குறைந்தபட்சம் 20 பேர் கொல் லப்பட்டுள்ளதுடன், 100 பேர் காயமடைந்துள்ளதாக அந்த நாட்டுப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
இஸ்லாமாபாத்தின் புறநகர்ப் பகுதியில் சன நடமாட்டம் அதிகமுள்ள பழங்கள் மற்றும் மரக்கறிகள் விற்பனை செய்யும் சந்தையிலேயே இந்தக் குண்டு வெடிப்பு இடம்பெற்றுள்ளது.
இதனால் அங்கு பெரு உயிர்ச்சேதம், பொருள் சேதம் என்பன ஏற்பட்டதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.
அரசுடன் தற்போது மோதல் நிறுத்த உடன்பாட்டில் இருக்கும் பாகிஸ்தானிய தலிபான்கள், தமக்கும் இந்தத் தாக்குதலுக்கும் தொடர்பில்லை என்றும், பொதுமக்களை இலக்கு வைத்துத் தாக்குவது இஸ்லாமியச் சட்டங்களுக்கு முரணானவை என்றும் கூறியுள்ளனர்.
இது இவ்வாறிருக்க, பாகிஸ்தானின் பலுசிஸ்தான் மாகாணத்தில் ரயில் மீது தீவிரவாதிகள் நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை மேற்கொண்ட குண்டுத் தாக்குதலில்



13 பேர் கொல்லப்பட்டதுடன், 37 பேர் காயமடைந்தனர்.
ராவல்பிண்டி நோக்கிச் செல்வதற்காக வந்த ஜபார் எக்ஸ்பிரஸ் மீது ஷிபி ரயில் நிலையத்தில் இத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. (த)



பிரிட்டன் இளவரசர் வில்லியம், இளவரசி கதே மிடில்டன் ஆகியோர் தமது மகனுடன் நியூசிலாந்தைச் சென்றடைந்தனர். அவர்களுக்கு நியூஸிலாந்தில் பாரம்பரிய முறையில் வரவேற்பு அளிக்கப்பட்டது. (த)

## ரஷ்ய ஆதரவாளர்களிடமிருந்து கட்டடங்கள் மீளக் கைப்பற்றல்

கார்கிவ்.ஏப் .10
உக்ரைய்ன் கிழக்கின் கார்கிவ் பிரதேசத்தில் ரஷ்ய ஆதரவாளர்கள் முற்றுகையிட்டிருந்த கட்டடங்களை உக்ரைய்ன் படையினர் மீண்டும் கைப்பற்றியுள்ளனர்.
அதேபோன்று ரஷ்ய ஆதரவாளர்கள் கட்டடங்களை கைப்பற்றியுள்ள லுஹான்ஸ்க் மற்றும் டொனெட்க்ஸ் ஆகிய இடங்களையும் உக்ரைய்ன் படையினர் விரைவில் விடுவிப்பர் என்று உக்ரைய்ன் அரசு தெரிவித்துள்ளது.
நேற்று முன்தினம் ரஷ்ய ஆதரவாளர்கள் குறித்த நகரங்களில் உள்ள அரச கட்டடங்களை முற்றுகையிட்டு அண்மையில் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட்டு ரஷ்யாவுடன் சேர்ந்த கிரைமியாவை போன்று தமது நகரங்களும் ரஷ்யாவுடன் இணைக்கப்படவேண்டும் என்று கோரிக்கை விடுத்தனர்.
இதேவேளை ஆயிரக்கணக்கான ரஷ்யப் படையினர் உக்ரைய்ன் எல்லைப்புறத்தில் அணிவகுப்பை நடத்தி வருவதாக மேற்கு நாடுகள் குற்றம் சுமத்தியுள்ளன. (த)

# ஹிட்லரின் மனைவி யூதப் பெண்

## மரபணுச் சோதனையில் வெளியான மர்மம்

பேர்லின்.ஏப் .10
மில்லியன் கணக்கான யூதர்களைக் கொன்றொழித்த ஜேர்மனியின் சர்வாதிகாரியான ஹிட்லரின் மனைவி ஈவா பிரோன் ஒரு யூத இனத்தைச் சேர்ந்தவர் என மரபணுச் சோதனை மூலம் தெரிய வந்துள்ளது.
2ஆம் உலகப் போரின் இறுதிக் கட்டத்தில் பதுங்கு குழியில் வைத்து ஹிட்லரும் அவரது 40 மணித்தியால மனைவியுமான ஈவாவும் தற்கொலை செய்ததாக நம்பப்படுகிறது. 23ஆவது வயதிலிருந்து 12 வருடங்கள் ஹிட்லரின் துணையாக வாழ்ந்த ஈவா வெறும் 40 மணித்தியாலங்களே மனைவியாக வாழ்ந்தமை குறிப்பிடத்தக்கது.
இவர்கள் இறந்து சுமார் 69 ஆண்டுகள் எதிர்வரும் ஏப்ரல் 30ஆம் திகதி பூர்த்தியாக வுள்ள நிலையில் ஹிட்லரின் காதல் மனைவி, அவர் ஒரு யூதப் பெண் என்பதை மறைத்து ஹிட்லருடன் வாழ்ந்திருக்கலாம் எனக் கூறப்படுகின்றது.
ஹிட்லரின் சொகுசு வீடொன்றிலிருந்து கண்டுபிடிக்கப்பட்ட சீப்பிலிருந்து பெறப்பட்ட தலைமுடியிலிருந்தே ஈவா ஒரு யூதப் பெண் என மரபணு ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.



இத்தகவல் கடந்த சனிக்கிழமை வெளியானது.
மரபணுவின் என்1பீ1 சோதனையிலிருந்து அஷ்கெனாசி யூதர்களினுடைய பரம்பரை அலகுகளுடன் நெருங்கிய தொடர்புள்ளதாகவும் உலக யூத சனத்தொகையில் 80 வீதமானவர்கள் அஷ்கெனாசி இனத்தவர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. 19ஆம் நூற்றாண்டில் இவ்வினத்திலிருந்து பல ஜேர்மனியர்கள் கதோலிக்கத்துக்கு மாற்ற மடைந்துள்ளனர்.
இவ்வாறானதொரு அபரிமிதமான முடிவினை நான் கண்டுபிடிப்பேன் என நான் ஒரு போதும் கனவுகாணவில்லை' என சி 4 நிகழ்ச்சித் தொகுப்பாளர் மார் இவன்ஸ் தெரிவித்துள்ளார்.
1945ஆம் ஆண்டு அமெரிக்கப் படைத் தளபதி போல் என்பவர் ஈவாவின் தனியான வீட்டிலிருந்து மீட்ட பொருள்களை அவரது மகன் அலன் ரெஷ்னிக் ஒபுக்கு விற்பனை செய்துள்ளார். இவரிடமிருந்தே சுமார் 2.6 இலட்சத்துக்கு 8 மயிர்களை இவன்ஸ் வாங்கி சோதனைக் குட்படுத்தச் செய்துள்ளார்.
இந்த மயிர்கள் யூதருடையது என நிச்சயிக்கப்பட்ட போதிலும் இது ஈவா பிரோனினுடையதா என சந்தேகிக்கப்படுகின்றது. இதனால் தற்போது ஈவாவின் பரம்பரையைச் சேர்ந்த உயிருடனுள்ள இரு பெண்களிடம் மரபணுச் சோதனைக்கு முயற்சித்தபோது அவர்கள் இருவரும் மறுத்துள்ளனர். எனவே இது குறித்த மர்மம் தொடர்ந்தும் நீடிக்கின்றது. (த)

# ஸ்ரீ பரமானந்தா சிறுவர் முதியோர் இல்லம்

## வதிரி–கரவெட்டி.

**நிர்வாகத்தைக்கொண்டு நடத்தும் தர்மகர்த்தா சபையினரின் பட்டியல்**

தலைவர்: லயன் S.N. கதிரவேலு S.T.F. Consultant (இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம்)

உபதலைவர்: மா.சிவசண்முகம் (சமூக சேவையாளர்)

செயலாளர்: ஐ.உமாபதி கயிலாயநாதன் (ஓய்வுபெற்ற E.C.C.Gr. I அரச ஊழியர்)

உபசெயலாளர்: வே.விக்கவலிங்கர் (ஓய்வுபெற்ற அரசாங்க அதிபர் - மன்னார்)

பொருளாளர்: ஆ. சிவசுவாமி (ஓய்வுபெற்ற பிரதமசெயலாளர் வடமாகாணம்)

மற்றைய உறுப்பினர்கள்:

செ. சிறீநிவாசன் S.L.A.S. (மேலதிக அரச அதிபர், கிளிநொச்சி)

உ. அன்னலிங்கம் (பட்டயக்கணக்காளர்)

கீ. கனகரத்தினம் (ஓய்வுபெற்ற E.C.C.Gr.I அரச ஊழியர்)

செல்வி சரோஜா தர்பு (ஓய்வுபெற்ற உதவிக் கல்விப்பணிப்பாளர் சங்கீதம்)

திருமதி சிவரஞ்சினி விஜயகுமாரன் (ஆரம்பக்கல்வி ஆசிரிய ஆலோசகர் வடமராட்சி வலயம்)

டாக்டர் மா. யோகீஸ்வரதேவன் (ஓய்வுபெற்ற R.M.O)




## ஸ்ரீ பரமானந்தா சுவாமிகளின் 19ஆவது குருபூசைத் தின சிறப்பு மலர் - 10.04.2014

### அரசாங்க அதிபரின் வாழ்த்துச்செய்தி

இலங்கைத்தீவின் சிரசு எனப் போற்றப்படும் யாழ்ப்பாணத்தின் வடபால் அமைந்துள்ள வடமராட்சிப் பிரதேசத்தில் பல்வேறு மகத்தான பணிகளை ஆற்றிவரும் ஸ்ரீ பரமானந்தா சிறுவர் முதியோர் ஆச்சிரமம் அன்பிற்கும், கருணைக்கும் இருப்பிடமாகத் திகழ்கின்றது.

ஸ்ரீ பரமானந்தா சுவாமிகளின் அருள் முயற்சியினால் 1969 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட இந்த ஆச்சிரமம் வடமராட்சி மட்டுமன்றி இலங்கையின் பல்வேறு மாவட்டங்களிலும் தன்னாலான பணிகளை ஆற்றிவருவது குறிப்பிடத்தக்கது.

இந்த ஆச்சிரமத்தினை ஸ்தாபித்த சுவாமிகளது 19ஆவது குருபூசைத் தினம் நடைபெறுவது சுவாமிகளது ஆசிகள் என்றும் இம்மண்ணுக்கு கிடைத்துக் கொண்டிருப்பதற்குச் சான்றாகின்றது. இந்து சமயத்தில் குருலிங்க சங்கம வழிபாடு மிக உன்னத நிலையில் போற்றப்படுவது குறிப் பிடத்தக்கது.மேலும் குருவின் ஆசிகள் என்றும் கிடைக்கவும் இந்த ஆச்சிரமத்தின் பணிகள் மேலும் சிறப்புற நடைபெறவும் சுவாமி களின் குருபூசை தினத்தில்வேண்டிக் கொண்டு எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

சுந்தரம் அருமைநாயகம்.
அரசாங்க அதிபர்/ மாவட்டச்செயலர், யாழ்ப்பாண மாவட்டம்.

### கரவெட்டி பிரதேச செயலாளரின் வாழ்த்துச்செய்தி

வதிரி ஸ்ரீ பரமானந்தா இல்லம்1969 ஆம் ஆண்டு சின்னையா திருக்கேதீஸ்வரர் என்ற இயற்பெயரை உடைய ஸ்ரீ பரமானந்தா சுவாமிகளின் தூரநோக்கும் தூய நோக்கும் சேர்ந்து உருவாக்கப் பட்டதாகும். எமது பிரதேசத்தின் பெருமைக்கு சான்றாக ஆதரவற்றோர்க்கு அபயக்கரம் நீட்டி இவ் இல்லம் அன்பு செய்கின் றது. இங்கு இருந்து கற்றவர்கள் பலர் உயர் நிலைகளில் இருந்து பெருமை சேர்த்துக்கொண்டிருக்கின்றார்கள். காலத்தின் தேவைக்கு கருணை செய்யும் இல்லமாய் இது மிளிர்கின்றது. சுவாமிகள் 1995 இல் சமாதி அடைந்தாலும் உயர்ந்த நிர்வாகக் கட்டமைப்பில் தளராது தன் பணியை இல்லம் செய்து வருவதுமகிழ்ச்சிக்குரியது. சுவாமிகளின் 19ஆவது குருபூசைத் தினத்தில் அவரின் சமூக நோக்கு இணைந்த சமயப் பணியையும், உயர்வையும் சிந்தித்து வணங்குவதுடன் இப்பணி என்றும் தொடரவும் வாழ்த்துகின்றேன்.

ச.சிவஸ்ரீ
பிரதேசசெயலாளர், பிரதேசசெயலகம், கரவெட்டி.

### வாழ்த்துச்செய்தி

வடமராட்சியின் வதிரிப் பதியில் தோன்றி இன்றுவரை சமூகத்துக்குப் பெருந்தொண்டாற்றி வருகின்ற வதிரி ஸ்ரீ பரமானந்தா சிறுவர் முதியோர் இல்லம் தனது 44ஆம் வயதில் காலடி எடுத்து வைத்து சிறப்புற இயங்கி வருவது யாவரும் அறிந்ததே. மேற்படி ஸ்ரீ பரமானந்தா சிறுவர் முதியோர்இல்ல ஸ்தாபகரான ஸ்ரீ பரமசுவாமிகளின் 19ஆவது குருபூசைத்தினம் இன்று கொண்டாடப்படவுள்ளது என்பது மிக மகிழ்ச்சியான செய்தி.

ஒரு மிகப்பெரிய மனித நேயப்பணியை முன்னெடுக்கும்இவ் இல்லம் ஆதரவற்றோரை ஆதரித்து அவர்களுக்கு ஒளியேற்றுவதுடன் எதிர்கால இளைய தலைமுறைக்கு நல்வழிகாட்டும் கலங்கரைவிளக்கமாக விளங்குகின்றது என்றால் மிகையில்லை. இல்லத்தின் நிர்வாக சபை ஒரு சிறந்த நிர்வாகத்துக்கு எடுத்துக்காட்டாக விளங்குகின்றது.இவ் இல்லம் சிறப்புற செழித்து உயர்ந்து ஓங்க எல்லாம் வல்ல இறையருளை இறைஞ்சுகின்றேன். இல்ல ஸ்தாபகரான ஸ்ரீ பரமசுவாமிகளின் 19 ஆம் குருபூசையில் அவரை நினைவு கூருவதுடன் அவரின் ஆத்ம சக்தியின் ஆசீர்வாதத்தில் இவ் இல்லம் தளைத்தோங்க எமது வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் வழங்கிப்பணிகின்றேன்.

இ.த.ஜெயசீலன், பிரதேசசெயலாளர்,பருத்தித்துறை.

### ஆசிச்செய்தி

ஈழத்திரு நாட்டின் வடபுல வடமராட்சி கரவெட்டியில் வதிரிப் பிரதேசத்தில் "**ஸ்ரீ பரமானந்தா சுவாமி**" அவர்களால் ஸ்தாபிக்கப்பட்ட "**ஸ்ரீ பரமானந்தா சிறுவர் முதியோர் இல்லம்**" ஸ்தாபிக்கபட்ட நாளிலிருந்து இன்றுவரையும் அளப்பரிய சேவையையும் தொண்டினையும் ஆற்றி வருவது பற்றி நான் நன்கு அறிந்ததே.

குறித்தஇவ்வில்லமானது பெற்றோரை இழந்து அநாதையாக்கப்பட்ட பிள்ளைகளையும் 3தசாப்தகாலமாக நடைபெற்றுவந்த உள்நாட்டுப் போரினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களினையும் பொறுப்பேற்று அவர்களின் வாழ்க்கையில் ஒளிமயமான எதிர்காலத்தினை காட்டுவதற்கு ஓர் கருவியாகவும் சேவையாற்றுகின்றது என்பதும் மறுக்கத்தகாததே. இன்றைய காலத்தின் கோலத்திற்கேற்ப பெற்றெடுத்த பிள்ளைகளால் பாதுகாத்து பராமரிக்க முடியாது கைவிடப்பட்ட பெற்றோர்களின் நிறைவான நிம்மதியான வாழ்க்கையின் அமைவிடமாக ஓர் ஆதரவாளனாக விளங்குகின்றது என்பதும் கண் கூடு. அது மட்டுமன்றி இறந்தவர்களுக்காக வருடாவருடம் செய்கின்ற பிதிர் கடன்களிலன்று பலர் இவ்வில்லத்திலேயே தானதருமங்களினை நடத்துவதற்கேற்ற இடமாக அமைந்திருப்பதுவும் யான் அறிந்ததே. இப்பணி தொடர்ந்தும் நடைபெற எல்லாம்வல்ல இறைவன் அருள் புரிய வேண்டுமென பிரார்த்திக்கின்றேன்.

'லங்காபுத்ர' 'விஸ்வ அபிமான்ய' 'சாமசிறீ தேசமான்ய'
கலாநிதி எம்.எஸ்.எம் நவீர்
சமாதான நீதிவான்,நீதிமன்றப் பதிவாளர் சேவை,
பிரதிப் பிஸ்கால்,மொழிபெயர்ப்பாளர்,
மாவட்ட நீதிமன்றம், பருத்தித்துறை.

(சி/13440)(5.6.3)

### தலைவரின் ஆசிச்செய்தி

அழுந்தோறும் அணைக்கும் அன்னை
அறிவில்லாது ஆடி ஓடி
விழுந்தோறும் எடுக்கும் அப்பன்
விளையாடும் போது தோழன்
தொழுந்தோறும் காக்கும் தெய்வம்
சொந்தமாய் எடுப்பார்க்கெல்லாம் குழந்தை
இப்படி உலாவும் குருநாதன் வாழ்க

ஸ்ரீ பரமானந்தா சுவாமிகள் எனத் தீட்சா நாமம் பெற்ற திருக்கேதீஸ்வரர் கல்வியில் சிறந்து விளங்கி அரச நிறுவன எழுதுவினைஞராகவும் கொழும்பு வனபரிபாலன திணைக்கள அதிகாரியாகவும் ஓய்வுபெற்ற பின்னர் இல்லற ஞானியாகி அறப்பணி ஆற்றத்தொடங்கினார். ஆன்மீக நாட்டங்கொண்டு இந்தியாவின் கன்னியாகுமரி முதல் இமயம் வரையுள்ள தொண்டு நிறுவனங்கள், ஆச்சிரமங்கள் தோறும் அலைந்து திரிந்து தனது ஆன்மீகப் பணியைத் தீர்த்துக்கொண்டார். இறுதியில் பம்பாய்க்குச் சென்று ஸ்ரீ முத்தானந்த பரமகம்சரின் ஆசிபெற்று ஸ்ரீபரமானந்தா சுவாமிகள் எனும் தீட்சா நாமத்துடன் இலங்கையில் தனது சொந்த இருப்பிடத்திற்கு திரும்பி வந்தார். அவர் இங்கு கண்டகாட்சியோ மிகக் கொடுமையானது. அது அவரது உள்ளத்தை உருக்கியது. மக்களெல்லாம் அல்லற்படுவதைக்காண அவருக்கு சகிக்க முடியவில்லை. மக்கள் பணியே மகேசன் பணியென்னும் நோக்கத்துடன் தான் பிறந்த நாட்டில் நாதியற்றவர்கள் எவருமே இருக்கக்கூடாதுஎன்ற குறிக்கோளுடன் ஓர் தற்காலிக ஓலைக்கொட்டகை அமைத்தார். இன்று இவ் வாச்சிரமத்தின் வளர்ச்சியை நாம் அனைவரும் காணக்கூடியதாக இருக்கின்றது. ஆலவிருட்சமாக வளர்ந்து பரந்து கிளை பரப்பி நூற்றுக்கணக்கானோருக்கு புகலிடம் அளிக்கின்றது.

சுடர் விளக்காக இருப்பினும் தூண்டுவதற்கு ஒரு குச்சி தேவைப்படும் அல்லவா. அதுபோலவே இந்த ஆச்சிரமத்தையும் திறம்பட இயக்குதற்கென அமைக்கப்பட்டுள்ள நிர்வாகசபை உறுப்பினர்களின் பூரண ஒத்துழைப்பும், ஊழியர்களின் பரித்தியாகசெயற்பாடுகளும் தான் காரணமென்பதை தலைவர் என்று கூறிக்கொள்வதில் பெருமைப்படுகின்றேன். மேன்மேலும் ஸ்ரீ பரமானந்தா ஆச்சிரமத்தின் பணிகள் செழித்தோங்க திருவருள் துணை நிற்பதாக.

லயன் சி.ந.கதிர்வேலு J/P
S.T.F.CONSULTANT, இலங்கை காப்புறுதி.
தலைவர், ஸ்ரீ பரமானந்தா ஆச்சிரமம், வதிரி, கரவெட்டி.

### ஸ்ரீ பரமானந்தா சுவாமிகளின் 19 ஆவதுகுருபூசை

ஸ்ரீ பரமானந்தா சிறுவர் இல்லத்தை ஸ்தாபித்த தவத்திரு ஸ்ரீ பரமானந்தா சுவாமிகளுடன் அடியேனுக்கு தொடர்பு உண்டு. சுவாமி அவர்கள் இல்லறத்திலிருந்து பின்பு ஒரு உன்னதமான துறவியிடமிருந்து சந்நியாதீட்சை பெற்றார். சுவாமிகளது சமாதி ஸ்தாபிதம் செய்து முதல் வழிபாடு செய்யும் பாக்கியம் அடியேனுக்குக் கிடைத்தது. இவரைப்போற்றி நிறைவுபெறுவோம்.

அன்புள்ள அன்னையின் அடியவள்.

### முன்னை நாள் தலைவரின் ஆசிச்செய்தி

சிறுதுளி பெருவெள்ளம் என்பதற்கிணங்க வதிரி ஸ்ரீ பரமானந்தா சுவாமிகளின் உள்ளத்தின் சிறுதுளியான அறப்பணி ஆதரவற்ற எம் உறவுகளை ஆதரிக்கும் ஆலமர நிழலாக நாற்பது ஆண்டுகளைக் கடந்தும் தொடர்வது இறைவனின் அருட்கடாட்சம் ஆகும். உறவுக்கு ஏங்கும் சிறுவர்களையும் ஆதரவற்ற முதியோர்களையும் ஆதரித்து மணிமேகலை கூறும் ஆற்றா மக்கள் அரும்பசியைக்களையும் அறப்பணி தொடர கருணை உள்ளம் கொண்ட முகாமையாளரின் அறப்பணி தொடர்வதால் எம்பணி தொடர்கிறது. தாய் வழிப்பணியை தொடர்வதற்கு எனக்கு உடல்வலுவும், மன உறுதியும், சிறுபொழுதையும் அருளிய இறைவனை நினைத்து பெருமை அடைகின்றேன்.

இன்றைய காலத்தின் தேவையை தீர்க்கதரிசனமாகக் கொண்ட பணிக்கு அடித்தளமிட்ட சுவாமிகளின் பணியைப் போற்றுகின்றேன். அன்பு, ஆதரவு, அறிவூட்டல் தொழிற்பயிற்சியெனப் பல பணியாற்றும் ஆச்சிரமத்திற்கு மாவட்ட நீதிபதி, சிறுவர் நீதிமன்றம், பிரதேசசெயலர், நன்னடத்தை அதிகாரி ஆகியோரின் வழிகாட்டுதலில் நற்பணி ஒளி வீசுகிறது. அறப்பணியைத் தொடர ஆதரவு அளித்து பிறவிப்பயனை எய்துமாறு அறப்பணியாளர்களை வேண்டுகின்றேன்.

திருமதி சிவரஞ்சினி விஜயகுமாரன்
ஆரம்பக்கல்வி ஆசிரிய ஆலோசகர், வடமராட்சி,
முன்னைநாள் தலைவர்
ஸ்ரீபரமானந்தா ஆச்சிரமம், வதிரி, கரவெட்டி.

### ஆதரவற்றோரை அரவணைக்கும் இல்லம்

ஈழவள நாட்டின் வடமராட்சி மண்ணில் இயற்கை எழில் நிறைந்த வதிரி ஊரிலே சேற்றில் மூளைத்த செந்தாமரை போல் மனிதருள் மாணிக்கமாக உதித்த திருக்கேதீஸ்வரர் என்ற இயற்பெயர் கொண்ட ஸ்ரீபரமானந்தா சுவாமியின் உள்ளத்தில் அன்பு, இரக்கம், கருணை, மனிதநேயம் ஊற்றெடுக்க தான் பிறந்து வளர்ந்த மண்ணில் ஆதரவற்ற எதிர்கால சிற்பிகளையும், அறிவுப்பொக்கிஷங்களையும் ஒன்றாக ஆதரித்து ஒற்றுமையாக வாழ வேண்டும் என்ற அவர்தம் எண்ணக் கருவில் ஸ்தாபிக்கப்பட்ட ஸ்ரீ பரமானந்தா சிறுவர், முதியோர் இல்லம் இன்று நாற்பத்தைந்து வருடங்கள் நிறைவு செய்ததையிட்டு பெரு மகிழ்ச்சியடைகின்றோம். ஸ்தாபகர் ஸ்ரீ பரமானந்தா சுவாமிகளின் 19ஆவது குருபூசை நன்னாளில் இவரது திருவடிகளில் சாஷ்டாங்கமாக வீழ்ந்து வணங்குவதில் பெருமையடைகின்றோம்.

பணியாளர்கள், ஸ்ரீபரமானந்தா ஆச்சிரமம்.

### ஆதரவற்றவர்களுக்கான நற்பணி தொடரட்டும்.

ஸ்ரீ பரமானந்தா சுவாமிகளின் தூரநோக்கு சிந்தனையுடனும் தூய மனதுடனும் 1969 ஆம் ஆண்டில் ஆரம்பித்து வைக்கப்பட்ட வதிரி ஸ்ரீ பரமானந்தா சிறுவர் முதியோர் இல்லத்திற்கு இன்று அகவை 45 ஆகின்றது.

ஸ்ரீ பரமானந்தா சுவாமிகள் 1995 இல் இறைபதம் எய்திய போதிலும் தர்மகர்த்தாசபையினரது சிறப்பான நிர்வாகத்துடனும் நீதிமன்ற மற்றும் சிறுவர் நன்னடத்தைத் திணைக்கள மேற்பார்வையிலும் பணிபுரிவோரின் அர்ப்பணமான சேவையுடனும் கொடை வள்ளல்களின் பெருந்தன்மையினாலும் இவ் இல்லம் சிறப்பாக இயங்கி வருவது போற்றுதற்குரியது. எதிர்காலத்தில் ஆதவற்றவர்களை சமூகமயப்படுத்துவதற்கும் சமூகத்தொண்டுகள் புரிவதற்கும் வாழ்த்தி அனைவருக்கும் இறையாசி வேண்டியமைகின்றேன்.

ஆர்.வரதீஸ்வரன்,
செயலாளர், மீன்பிடி, போக்குவரத்து,
கிராம அபிவிருத்தி மற்றும் வர்த்தக, வாணிப அமைச்சு (வ.மா)

### வடமாகாண கல்வி அமைச்சு செயலாளரின் வாழ்த்துச் செய்தி

வடமராட்சிப் பிரதேசத்தில் அமைந்துள்ள ஸ்ரீபரமானந்தா சிறுவர், முதியோர் இல்லம் ஸ்ரீபரமானந்தா சுவாமிகளின் நல்ல எண்ணத்தாலும் தூய மனத்தாலும் 43 ஆண்டுகளிற்கு மேலாக சிறுவர் முதியோர்களைப் பராமரிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது. இந்த இல்லம் ஆதரவற்ற சிறுவர் முதியோர்களுக்கும் அடைக்கலம் கொடுத்து அவர்களை சிறந்த முறையில் பராமரித்து வழிநடத்தி வருவதுடன் வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழ்கின்ற குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்கள் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகும் போது அவர்களிற்கு புலமைப் பரிசில்களையும் வழங்கி வருகின்றது. இந்நிறுவனம் சமயப்பணி, சமூகப்பணி, கல்விப்பணி, ஆன்மீகப்பணி என்பவற்றை ஒருங்கிணைத்து செயற்படுத்தி வருவது குறிப்பிடத்தக்கதாகும். இந்த இல்லம் மேன்மேலும் சிறப்படைய பிரார்த்திப்பதுடன் எனது நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

கி.சத்தியசீலன்.
செயலாளர்,கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு வடமாகாணம், யாழ்ப்பாணம்.

### வாழ்த்துச் செய்தி

இயற்கை எழில் கொழிக்கின்ற யாழ் மாவட்டத்தின் வடமராட்சி பிரதேசத்தில் வதிரி கரவெட்டியில் அன்பு, அமைதி, பாதுகாப்பு இம் மூன்றையும் தனது ஆசியாக வழங்கி, ஸ்ரீ பரமானந்தா சைவச் சிறுவர் முதியோர், இல்லத்தினை சி.திருக்கேதீஸ்வரர் அவர்கள் ஸ்தாபித்தார். இவருடைய பத்தொன்பதாவது குருபூசைக்கான வாழ்த்துச் செய்தியினை வழங்குகின்ற சந்தர்ப்பமானது எனக்குக் கிடைத்தமையினையிட்டு நான் பெருமகிழ்வடைகின்றேன். இந்த இல்லமானது ஆதரவற்ற நிர்க்கதியற்ற சிறுவர்களின் நலனைப் பேணுகின்ற நோக்கத்தோடு, அச்சிறுவர்களின் ஆன்மீக கல்வி மற்றும் பல கலைகளை வழங்குகின்ற ஓர் உன்னதமான இல்லமாக பல ஆண்டு காலமாக திகழ்ந்து வருகின்றது. நாட்டில் ஏற்பட்ட அசாதாரணமான சூழ்நிலைகளிலும் தனது சேவையினை அயராது வழங்கி வந்த இல்லம் என்று கூறுகையில் அது மிகையாகாது.

ஸ்தாபகரின் வழியில் நின்று, நிகழ்கால சவால்களையும், எதிர்கால முன்னேற்றங்களையும் மனதில் நிறுத்தி இச்சேவை மேன்மேலும் தொடர தம்மை ஈடுபடுத்தி அயராது உழைத்துக் கொண்டிருக்கும் இந்த இல்லத்தின் நிர்வாகத்தினர் மற்றும் அனைவரையும் மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றேன்.

தி.விஸ்வரூபன்
ஆணையாளர், நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களம், வடமாகாணம்.

### ஸ்ரீ பரமானந்தா இல்லத்தின் தோற்றம்

வளமான வதிரியம்பதியில் மதிப்பும் மரியாதையும் வாய்ந்தவர் சின்னையா திருக்கேதீஸ்வரர், அரச ஊழியராகப் பதவியாற்றிய போதும் ஆன்மீகத் துறையை நாடியது அவரது உள்ளம். அதன் விளைவு தான் இச் ஸ்ரீ பரமானந்தா சிறுவர் முதியோர் இல்லம், நாதியற்றவரை இந்நாட்டில் இல்லாதொழிப்பேன் என்ற தளராத மன உறுதியுடன் இவ் வில்லத்தினை 1969 ஆம் ஆண்டளவில் ஆரம்பித்தார்.

உள்ளூரிலும் யாழ். பிரதேசங்களிலும் வெளி மாவட்டங்களிலும் தர்ம சிந்தனை கொண்ட பொது மக்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தினார். இதன் பிரதிபலனாக 1969 ஆம் ஆண்டிலேயே மிகக் குறைவான வசதிகளுடன் இந்தச் ஸ்ரீபரமானந்தா சிறுவர் முதியோர் இல்லம் அமைக்கப்பட்டது. விரைவாகவே அநாதரவான சிறுவர் முதியோர் நூற்றுக்கணக்கிற் சேரத்தொடங்கினர். நன்கொடைகளை அதிகரிப்பதற்குப் பல்வேறு வழிவகைகளைக் கடைப்பிடித்து பெரும் சிரமங்களுக்கு மத்தியில் இவர் ஆற்றிய பணி அளப்பரியது. முக்கியமாக இரவு பகலாக வன்னிப் பகுதிகளுக்குத் தானே சென்று மக்களிடமிருந்து சேர்க்கப்பட்ட நெல், தானியங்கள், மரக்கறி வகைகள் முதலியவற்றைக் கொண்டு வந்து உணவாக்கி இல்லத்தில் உள்ளவர்களுக்கு வழங்கியமை அந்நேரத்தில் ஒரு பெரும் சாதனையாகக் கொள்ளப்பட்டது.

சுவாமிகளால் 1969 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு, தற்போது பல்வேறு வளங்களுடனும் வசதிகளுடனும் இயங்கி வருவதையிட்டு செயலாளர் என்ற வகையில் பெருமிதமடைவதுடன் இவ்வாச்சிரமம் மேலும் மேலும் வளர எனது நல்லாசிகள் உரித்தாகுக.

ஐ.உமாபதிகயிலாயநாதன், செயலாளர்.

## இலவச கண் பரிசோதனை முகாம்

முல்லைத்தீவு உடையார் கட்டு பகுதியில் இலவச கண் பரிசோதனை முகாம் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது. உடையார்கட்டு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் இடம்பெற்ற இந்த முகாமில் உடையார்கட்டு, இருட்டுமடு, குரவயல், சுதந்திரபுரம், மூங்கிலாறு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 150 பேருக்கும் அதிகமானோர் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.

திருமதி சிவசுந்தரம் குணலட்சுமி ஞாபகார்த்தமாக சிதம்பரப்பிள்ளை தவசீலனின் நிதிப்பங்களிப்பில் வடமாகாண சபை உறுப்பினர் வைத்திய கலாநிதி சி. சிவமோகன் தலைமையில் இந்த மருத்துவ முகாம் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ-402)



அக்கராயன் குளத்தின் கீழ் சிறுபோக நெற் செய்கை கைவிடப்பட்ட நிலையில் வலது கரை தண்ணீர் விநியோக வாய்க்கால் வறண்டு காணப்படுகின்றது. (ஐ-18)

## இளைஞர்கள் தொல்லை

கிளிநொச்சி, ஏப்.10

கிளிநொச்சி பூநகரி கிராஞ்சி சந்தைப் பகுதியில் தினமும் கூடும் இளைஞர்கள், சந்தைக்குப் பொருள்கள் வாங்க வந்து செல்வோருக்குத் தொல்லைகள் கொடுத்து வருவதாகக் குற்றஞ் சாட்டப்படுகின்றது.

குறிப்பாக இளம் பெண்களை இடை மறிக்கும் இவர்கள் அநாகரிகமான வார்த்தைப் பிரயோகங்களை மேற்கொள்வதாகவும் தெரிவிக்கப்படுகிறது. எனவே சந்தை நிர்வாகம் சந்தைகூடும் வேளைகளில் குறித்த இளைஞர்கள் குழுவைச் சந்தைப் பகுதியிலிருந்து வெளியேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ஐ-18)

## கிளிநொச்சி விவசாயிகளுக்கு விதை நிலக்கடலை வழங்கல்



*வடமாகாண விவசாய அமைச்சர் பொ. ஐங்கரநேசன் விவசாயிகளுக்கு விதை நிலக்கடலைகளை வழங்குகிறார்.*

கிளிநொச்சி, ஏப்.10

கிளிநொச்சி மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட ஆயிரத்து 230 பயனாளிகளுக்குச் சுமார் 16,000 கிலோ விதை நிலக் கடலையை உலக உணவு விவசாய ஸ்தாபனம் வழங்கியுள்ளது.

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் நிலக்கடலைச் செய்கையை ஊக்குவிக்கும் பொருட்டு உலக உணவு விவசாய நிறுவனம் திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றது.

இதன்படி கிளிநொச்சி மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட விவசாயிகளுக்கு விதை நிலக்கடலை வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு கிளிநொச்சி மாவட்ட விவசாய விரிவாக்க அலுவலகத்தில் நடைபெற்றது.

அதன் பிரதித் திட்டப் பணிப்பாளர் அ.செல்வராசா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் வடமாகாண விவசாய அமைச்சர் பொ. ஐங்கரநேசன் கலந்து கொண்டு பயனாளிகளுக்கு விதை நிலக்கடலையை வழங்கி வைத்தார்.

கிளிநொச்சி மாவட்டத்தின் விவசாயப் போதனாசிரியர் பிரிவுகளில் இருந்து தெரிவு செய்யப்பட்ட சுமார் 1,230 பயனாளிகள் இதன்போது பயன் பெற்றனர். (ஐ-55-18)

# மாணவர்கள் மத்தியில் மரங்களை நடும் ஆர்வத்தை ஊக்குவிக்கவும்

### *கிளிநொச்சி பிரதிக் கல்விப் பணிப்பாளர் வேண்டுகோள்*

கிளிநொச்சி, ஏப்.10

மாணவர்கள் மத்தியில் மரங்களை நடும் ஆர்வத்தை ஊக்குவிக்க வேண்டும். இவ்வாறு கிளிநொச்சிக் கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.இதயராஜ் தெரிவித்தார்.

கிளிநொச்சி வலயக் கல்விப் பணிமனையில் நேற்று முன்தினம் கிளிநொச்சியைத் தளமாகக் கொண்டு இயங்கும் "எதிர்காலத்தின் பசுமை உலகம்" அமைப்பினரும், வலயக் கல்விப் பணிமனையின் முறைசாராக் கல்விப் பிரிவும் இணைந்து கத்தரி, பப்பாசி மரக்கன்றுகளைச் சிறப்புத் தேவையுடைய மாணவர்களுக்கு வழங்கும் நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு உரையாற்றுகையில்:



*கிளிநொச்சி பிரதிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.இதயராஜ் மாணவன் ஒருவருக்கு மரக்கன்றுகளை வழங்குகிறார்.*

மரங்களைச் சிறப்புத் தேவையுடைய மாணவர்களுக்கு வழங்குவது நம்பிக்கையான செயற்பாடுகளை ஊக்குவிக்கும்.

எமது முன்னோர்கள் எமது வாழ்வுக்காக விட்டுச் சென்ற எச்சங்களை நாம் சரியாகப் பயன்படுத்த வேண்டும்.

மரங்களை நட்டுப் பயன்பெற வேண்டும். எமது மாணவர்கள் மத்தியில் மரங்களை வளர்க்கும் செயற்றிறன் ஊக்குவிக்கப்பட வேண்டும் - என்றார்.

கிளிநொச்சி வலய முறைசாராக் கல்விப் பிரிவின் உதவிக் கல்விப் பணிப்பாளர் த.பேரின்பராசா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் எதிர்காலத்தின் பசுமை உலகம் அமைப்பின் தலைவர் சு.பகீரதன் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

விசேட தேவையுடைய மாணவர்களாகக் கல்வி பயலும் 16 மாணவர்களுக்கு இங்கு மரக்கன்றுகள் வழங்கப்பட்டன. (க-18)



மன்னார் - யாழ்ப்பாணம் ஏ - 32 வீதியின் இருமருங்கிலும் காணப்படும் பற்றைக்காடுகளை அகற்றும் பணியில் பெருந்தெருக்கள் அதிகார சபை ஈடுபட்டுள்ளது. மன்னார் மாந்தை மேற்கு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பாப்பாமோட்டை பகுதியில் குறித்த வீதியின் இரு மருங்கிலும் காணப்படும் பற்றைக்காடுகள் அகற்றப்பட்டு வருகின்றன. (ஐ)

## மழை வேண்டி பிரார்த்தனை

கிளிநொச்சி, ஏப்.10

வறட்சி காரணமாக குளங்கள், கிணறுகள் வற்றித் தண்ணீருக்காக மக்கள் பல்வேறு அவலங்களை எதிர்கொண்டு வருகின்றனர். இதனைப் போக்கும் வகையில் மழை வேண்டி கோயில்களில் பிரார்த்தனைகள் நடைபெற்று வருகின்றன.

வட்டக்கச்சி ஸ்ரீ ரங்கநாதப் பெருமாள் கோயிலில் கடந்த செவ்வாய்க்கிழமை 108 நீர் குடம் நீர் கொண்டு அபிஷேகம் நடைபெற்றது.

இதேபோன்று கிளிநொச்சி முருகன் கோயில், கனகாம்பிகை அம்பாள் கோயில், உருத்திரபுரம் சிவாலயம், புளியம்பொக்கணை நாதம்பிரான் கோயில், முழங்காவில், அக்கராயன் பகுதிகளில் உள்ள கோயில்களிலும் மழை வேண்டி அபிஷேகம் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றன. (ஐ-18)

## இரணைமடு அபிவிருத்தி அரசியல் ஆகக் கூடாது

### *வடக்கு விவசாய அமைச்சர் கோரிக்கை*

கிளிநொச்சி.ஏப்.10

அரசின் அரசியல் சூழ்ச்சியாகவே இரணைமடு யாழ்ப்பாண குடிதண்ணீர் திட்டம் அமைந்துள்ளது. எனவே இதனை நாம் ஒரு போதும் ஏற்க முடியாது என வடமாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தெரிவித்தார்.

உலக உணவு விவசாய நிறுவனத்தின் உதவியுடன் கிளிநொச்சி விவசாய திணைக்களத்தில் நடைபெற்ற விதை நிலக் கடலை வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எங்களுடைய மண்ணின் பெருமையை நிலை நாட்டக் கூடியதாகவும், விவசாயப் பண்பாட்டுக்கு வலுச்சேர்க்கும் வகையிலும் விதைகளுக்கு தமிழில் பெயர் வைக்க வேண்டும்.

இயற்கையால் ஏற்படும் பாதிப்புக்களை ஒருபுறமும் அரசு எமக்கு கொடுக்கும் பெரும் கஷ்டங்களை ஒரு புறமுமாக நாம் எதிர்கொண்டு வருகின்றோம். ஆனாலும் தடைகளையும் தாண்டி எமது விவசாயிகள் வெற்றி கண்டுள்ளனர்.

> கடந்த நான்கு தினங்களுக்கு முன்னர் யாழ்.பல்கலைக்கழகத்தில் இரணை மடுகுளத்திலிருந்து யாழ்ப்பாணத்துக்குக் குடிதண்ணீர் கொண்டு செல்வது தொடர்பான ஓர் அரங்க நிகழ்ச்சி ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

கடந்த நான்கு தினங்களுக்கு முன்னர் யாழ்.பல்கலைக்கழகத்தில் இரணைமடு குளத்திலிருந்து யாழ்ப்பாணத்துக்குக் குடி தண்ணீர் கொண்டு செல்வது தொடர்பான ஓர் அரங்க நிகழ்ச்சி ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. அந்த நிகழ்வுக்கு தலைமை தாங்கியவர் கூட்டத்தில் அரசியல் பேசாமல் திட்டத்தை மட்டும் பேசும்படி கோரியிருந்தார். பல்கலைக்கழக மாணவர்களும் பேராசிரியர்களும் இதனைக் கடுமையாக எதிர்த்தார்கள். இப்போது எல்லாமே அரசியல்மயப்படுத்தப்பட்டுள்ள சூழலில் அரசின் திட்டங்களில் புதைந்திருக்கும் அரசியல் நோக்கங்கள் குறித்து நாம் பேசாது இருப்போமானால் நாம் இன மூழ்கடிப்புக்கு உள்ளாக்கப்படுவோம் என்பதை உணரவேண்டும். அரசியலையும் அபிவிருத்தியையும், அரசியலையும் அறிவியலலையும் ஒன்றிலிருந்து ஒன்று வேறாகப் பிரிக்க முடியாது.

வடக்குக்கு மகாவலி திட்டம் திசை திருப்பப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டு இதன் மூலம் உணவு உற்பத்தியை அதிகரித்தல், அதிகளவு மக்களை குடியமர்த்தல், மின்சாரம் கூடுதலாகப் பெறுதல் போன்ற காரணங்கள் கூறப்பட்டன. ஆனாலும் இன விகிதாசாரத்தை மாற்றுவதே அதன் உள்ளார்ந்த நோக்கம். எனவே இவ்வாறான செயற்பாடுகளுக்கு நாம் இடமளிக்க முடியாது.

இரணைமடு குளப் புனரமைப்பு, யாழ்ப்பாணத்துக்கான குடிதண்ணீர் விநியோகம், யாழ்ப்பாணத்தில் நீர் முகாமைத்துவம் என்பவற்றைத் தனித்தனியாக நோக்க வேண்டும். எல்லாவற்றையும் ஒன்றோடொன்று தொடர்புபடுத்துவதால்தான் நெருக்கடிகள் ஏற்படுகின்றன. வட மாகாண முதலமைச்சர் இதனைத்தான் விரிவாக விளக்கியுள்ளார். இது குறித்து ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் எடுத்துக் கூறப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட மக்களின் விவசாய தேவைக்குப் பயன்படும் தண்ணீரை யாழ்ப்பாணத்துக்குக் குடிதண்ணீராக கொண்டு வாருங்கள் என்று கோரும் உரிமை யாருக்கும் இல்லை. அப்படி எவரும் கோரவும் இல்லை. ஆனால் இரணைமடுத் திட்டத்தை அரசியல் ஆக்குவதை நாம் ஒரு போதும் ஏற்க முடியாது என்பதே உண்மை - என்றார். (ஐ-18)

# ஆயுதப் போராட்டம் மௌனித்தும் வடக்கு, கிழக்கில் இராணுவ ஆட்சி

## கிழக்கு மாகாண சபை உறுப்பினர் குற்றச்சாட்டு

எருவில்.ஏப்.10

நாட்டில் ஆயுதப் போராட்டம் மௌனிக்கப்பட்ட பின்னரும், அரசு வடக்கையும் கிழக்கையும் இராணுவ ஆட்சிக்குள்ளே வைத்துக் கொண்டிருக்கின்றது என்று கிழக்கு மாகாண சபை உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் படுவான்கரை, இளைஞர் விவசாயத்திட்டம் என்ற கிராமத்தில் மக்கள் சந்திப்பு ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் கூட்டாக மக்களிடம் நேரில் தேடிச் சென்று அவர்களின் குறைபாடுகளைக் கேட்டறியும் போதுதான் மக்களால் தெரிவு செய்யப்பட்டு அகிம்சை ரீதியாக போராடிக் கொண்டிருக்கின்ற எங்களுக்கும் எமது மக்களுக்குமிடையேயான ஒரு நெருங்கிய உறவு ஏற்படும்.

கடந்த காலங்களில் எமது மக்கள் குண்டு வெடிச் சத்தங்களுக்குள் பயந்து கொண்டிருந்தார்கள். ஆனால் தற்போது மட்டக்களப்பு மாவட்டத்தின் படுவான்கரை வாழ் பொதுமக்கள் காட்டு யானைகளினால் பல தாக்குதல்களுக்கும் பீதிக்கும் உள்ளாகி வருகின்றனர்.

படுவான்கரை மக்கள் தங்களது வீடுகளையும் தமது வாழ்வாதாரப் பயிர்களையும் விட்டு இரவு வேளைகளில் இடம்பெயர்ந்து வாழும் சூழல் உருவாகியுள்ளது.



கருணாகரம்

பயங்கரவாதத்தைக் கட்டுப்படுத்தி விட்டோம்: குண்டுச் சத்தங்களை நிறுத்தி விட்டோம்; இந்த நாட்டில் ஜனநாயகம் நடக்கின்றது: மக்கள் சுதந்திரமாக இருக்கின்றார்கள். ஒரே தேசத்துக்குள் சிறுபான்மை இனம் இல்லை: நாங்கள் எல்லாம் ஒற்றுமையாக இருக்கின்றோம் என்று கூறிக்கொண்டு இந்த நாட்டு அரசு காட்டுப் பகுதியை அண்டிய தமிழ் கிராம மக்கள் படும் துன்பங்களைப் பார்த்துக் கொண்டு இருக்கின்றது.

யானையைக் கொன்றால் அவருக்கு அபராதம் 3 லட்சம் ரூபா. யானை அந்த மனிதரை அடித்துக் கொன்று விட்டால் அவருக்கு இழப்பீடு ஒரு லட்சம் ரூபா என்று கொடுக்கும் நாடுதான் இலங்கை.

இந்த நாட்டிலே போராடிய ஓர் இனம் இன்றும் அவர்களது உரிமைகளுக்காகப் போராடிக் கொண்டுதான் இருக்கின்றார்கள். சுதந்திரம் கிடைத்தது என்பது இந்தப் பேரினவாதிகள் கூறும் அவர்களது பசப்பு வார்த்தைகளில் மாத்திரம் தான் உள்ளது.

> “ வடக்கு கிழக்கு மக்கள் இராணுவப் பிடிக்குள்ளே இன்றும் அரசு வைத்துக் கொண்டிருக்கிறது.

கடந்தவாரம் பட்டிப்பளைப் பிரதேச செயலகத்துக்குரிய புதிய கட்டடத்தைத் திறந்து வைத்த கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர், சி.சந்திரகாந்தன் ஓர் அருமையான வார்த்தையைக் குறிப்பிட்டிருந்தார்.

இந்த நாட்டிலே பேரினவாதிகள் பட்டியலை எடுத்துக் கொண்டால் அதில் கிழக்கு மாகாண ஆளுநரின் பெயரும் இருக்கும் என்றார்.

இது சந்திரகாந்தனுக்கு ஏற்பட்டிருக்கும் காலம் கடந்த ஞானம். அவர் கிழக்கு மாகாண முதலமைச்சராக இருந்த போது, கிழக்கு மாகாண ஆளுநர் பேரினவாதி என்று அவருக்குத் தெரியாது. அவர் தற்போது பதவியை விட்டு வந்த பின்புதான் ஞானம் பிறந்திருக்கின்றது.

வடக்கு, கிழக்கு மக்களை இராணுவப் பிடிக்குள்ளே இன்றும் அரசு வைத்துக் கொண்டிருக்கிறது.

வடக்கில் முன்னாள் இராணுவ அதிகாரியை ஆளுநராகவும், கிழக்கில் முன்னாள் கடற்படை அதிகாரியை ஆளுநராகவும் அரசு வைத்துக்கொண்டுள்ளது -என்றார். (ச-31)

---

## மட்டக்களப்பில் துப்பாக்கி மீட்பு



மீட்கப்பட்ட துப்பாக்கி

வாழைச்சேனை.ஏப்.10

மட்டக்களப்பு.வாழைச்சேனை பொலிஸ் பிரிவில் வாகனேரி பகுதியில் நவீன முறையில் உள்ளூரில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கி ஒன்றை நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை வாழைச்சேனைப் பொலிஸார் மீட்டுள்ளனர்.

வாழைச்சேனைப் பொலிஸ் பிரிவில் வாகனேரி, குடாமுனைக்கல், மாந்திராறு என்னும் காட்டுப் பகுதியில் துப் பாக்கி ஒன்று உள்ளதாகப் பொலிஸாருக்கு கிடைத்த ரகசியத் தகவலையடுத்து, வாழைச்சேனை உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் லால் செனவிரத்னவின் வழிகாட்டலில் சோதனை மேற்கொண்ட பொலிஸ் குழுவொன்றினால் துப்பாக்கியும் துப்பாக்கி ரவைகளும் மீட்கப்பட்டுள்ளன. (ச)

---

# மரண அறிவித்தல்



## திருமதி இந்திராணி (லல்லா) வசந்தநாதன்

கொக்குவில் மேற்கு, கொக்குவில் முதலியார் கோயிலடியைப், பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இந்திராணி வசந்தநாதன் 06.04.2014 ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் வசந்தநாதனின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற செல்லையா-மனோன்மணி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற நடராஜா-பரமேஸ்வரி தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற சிவராஜா மற்றும் தவராணி, தவராஜா, விக்கினராஜா ஆகியோரின் சகோதரியும், சச்சிதானந்தன், சிவானந்தன், செல்வகுமாரி, ருக்குமணிதேவி, மோகனராணி (பபி) ஆகியோரின் மைத்துனியும், பரமேஸ், பாபு, சஞ்ஜீவன், கீதா ஆகியோரின் அன்புத் தாயும், விஜேந்திரன், உதயகுமாரி, பாலாம்பிகை, ராஜ்குமார் ஆகியோரின் அன்பு மாமியும், றம்மியா, யாமினி, அஸ்வினி, பிரியங்கா, லக்சனா, மோனிசா, பரத் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.04.2014) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, முற்பகல் 11.00 மணியளவில் தகனக்கிரியைக்காகப் பூதவுடல் கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

முதலியார் கோயில்,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

தகவல்: குடும்பத்தினர்.
T.P. 077 354 0632

(7.6.3)(46632)

---

# விநாயகபுரம் கிராமத்துக்குள் நுழைந்த முதலையைக் கட்டிப்போட்டனர் மக்கள்



பிடிக்கப்பட்ட முதலை

கிழக்கு மாகாணத்தில் தற்போது கடும் வறட்சி நிலவுவதால் நீர் நிலைகளும் சிறு குளங்களும் வற்றி வறண்டு வருகின்றன.

வெருகல் பிரதேசத்திலுள்ள சின்னக்குளம் வற்றி வருகின்ற நிலையில், அங்கிருந்த 10 அடி நீளமான முதலையொன்று குளத்திலிருந்து வெளியேறி அருகிலுள்ள விநாயகபுரம் ஊருக்குள் புகுந்துள்ளது.

வீடு ஒன்றுக்குள் முதலை புகுந்ததும் வீட்டிலிருந்தவர்கள் கூக்குரலிடவே மக்கள் திரண்டு வந்து முதலையைக் கட்டிப் போட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் குறித்து வெருகல் பொலிஸாருக்கும் வனஜீவராசிகள் திணைக்கள அதி காரிகளுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது என்று பிரதேசத்துக்குப் பொறுப்பான பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் சிவகலா சோமசுந்தரம் தெரிவித்தார். (ச)

---

# புதிதாக நியமனம் பெற்றவர்கள் கடமையை ஏற்கவிடாது தடுப்பு

## ஏமாற்றத்துடன் திரும்பினர் பட்டதாரிகள்

மட்டக்களப்பு,ஏப்.10

கிழக்கு மாகாண அரச அபிவிருத்தி உத்தியோகத்தர்களாக நியமிக்கப்பட்டு நேற்று முன்தினம் திங்கட்கிழமை தமது கடமையை ஏற்பதற்காக குறித்த அலுவலகங்களுக்குச் சென்றபோது கடமையை ஏற்கவிடாது பட்டதாரிகள் தடுக்கப்பட்டுள்ளனர்.

கிழக்கு மாகாண பிரதிப் பிரதம செயலரால் அனுப்பப்பட்ட நியமனக் கடிதங்களைப் பெற்றுக்கொண்டு கடமையை ஏற்குமாறு பணிக்கப்பட்டு அலுவலகங்களுக்குச் சென்ற பட்டதாரிகளுக்கே இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

கிழக்கு மாகாண அரச அபிவிருத்தி உத்தியோகத்தர்களாக கடந்த 3 ஆம் திகதி முதல் நியமிக்கப்பட்டுள்ளதாக பட்டதாரிகள் பலருக்கு கிழக்கு மாகாண நிர்வாக பிரதிப் பிரதம செயலர் திருமதி கலாமதி பத்மராஜாவால் நியமனக் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டிருந்தன.

இந்தக் கடிதத்தை பெற்ற பட்டதாரிகள் தாங்கள் நியமிக்கப்பட்டதாக கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்த அலுவலகங்களுக்கு நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை கடமையைப் பொறுப்பேற்கச் சென்றபோது கடமையைப் பொறுப்பேற்க விடாது அங்கு வைத்துத் திருப்பி அனுப்பப்பட்டுள்ளார்கள்.

தாங்கள் கடமையைப் பொறுப்பேற்க விடாமல் தடுக்கப்பட்டமைக்கான காரணமும் தங்களுக்குத் தெரியப்படுத்தப்படவில்லை என்று அவர்கள் கூறுகின்றனர். (ச)

## ரூ.5 பில்லியனை கோருகிறது அரசு

கொழும்பு,ஏப்.10
இலங்கையில் பல்வேறு செலவுகளுக்காக மேலதிகமாக 5 பில்லியன் ரூபா நிதி தேவைப்படுகிறது என்று அரசு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை அறிவித்துள்ளது.
இந்த நிதி அதி முக்கியஸ்தர்களுக்கான 206 மில்லியன் ரூபா பெறுமதியான வாகனக் கொள்வனவு உட்பட்ட செலவுகளுக்காகவும் கோரப்பட்டுள்ளது.
1.3 பில்லியன் ரூபா தேசத்தின் மகுடம் நிகழ்ச்சிக்காகவும் 2.2 பில்லியன் ரூபா வாழ்வெழுச்சித் திட்டத்துக்காகவும் கோரப்படவுள்ளது என்று அரசு நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளது. (ச)



மத்திய வங்கியின் 64 ஆவது ஆண்டறிக்கை மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ராலினால் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் நேற்றுமுன்தினம் மத்திய வங்கியின் கேட்போர் கூடத்தில் வைத்துக் கையளிக்கப்பட்டது. (ச)

## குடும்பங்களுக்கு இடையில் மோதல்; நால்வர் காயம்

கொழும்பு,ஏப்.10
கொரிய மொழிப் பரீட்சை தொடர்பில் இரண்டு குடும்பங்களுக்கு இடையில் இடம்பெற்ற மோதலில் நான்கு பேர் காயமடைந்தனர்.
ஒரு குடும்பத்தின் இளைஞர் குறித்த மொழிப் பரீட்சையில் சித்தியெய்திக் கொரிய வேலை வாய்ப்புக்குத் தெரிவானார். மற்றுமொரு இளைஞர் அதில் சித்தியெய்தவில்லை.
அதனையடுத்தே இரண்டு குடும்பங்களுக்கும் இடையில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை மோதல் ஏற்பட்டுள்ளது.
காலியில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் காயமடைந்தவர்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். இந்தச் சம்பவம் தொடர்பில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தாய், மகள், இரண்டு மகன்மார்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். (ச)

# விசாரணைகளைப் புறக்கணித்தால் விளைவுகளை எதிர்கொள்ள நேரிடும்

### அரசுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது ஐ.தே.க.

கொழும்பு,ஏப்.10
ஐ.நா. விசாரணைகளை இலங்கை அரசு புறக்கணிக்கக் கூடாது. இந்த விசாரணைகளுக்கு முகம் கொடுக்காது போனால், மோசமான விளைவுகளை எதிர்கொள்ள நேரிடும் என்று ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியெல்ல எச்சரிக்கை விடுத்துள்ளார்.


லக்ஸ்மன் கிரியெல்ல

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.
இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-
முன் மொழியப்பட்டுள்ள அனைத்துலக விசாரணைக்கு இலங்கை அரசு ஒத்துழைப்பு வழங்க வேண்டும். குற்றச்சாட்டுகள் அடிப்படையற்றவை என்று நிரூபிக்க வேண்டும்.
ஐ.நா. விசாரணைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குவதில்லை என்ற இலங்கை அரசின் முடிவு, குறுகிய பார்வை கொண்டது. அது தேசிய நலன்களுக்கு விரோதமானது.
இலங்கை அரசு இந்த விசாரணைகளுக்கு ஒத்துழைப்பு வழங்காது போனால், அனைத்துலக சமூகம் முன்னோக்கிச் சென்று, ஒருதலைப்பட்சமான விசாரணைகளை நடத்தும். அது நாட்டுக்கு எதிரான தீர்ப்பைக் கொண்டு வரும்.
அதற்குப் பதிலாக, இலங்கை அரசு விசாரணைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கி, போர்க் குற்றங்கள் தொடர்பான குற்றச்சாட்டுகள் அடிப்படையற்றவை என்பதற்கான ஆதாரங்களைச் சமர்ப்பித்து, அவை ஆதாரமற்றவை என்று நிரூபிப்பதற்கான வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.
ஐ.நா. மனிதஉரிமைகள் சபையின் அறிக்கை, ஐ.நா. பாதுகாப்புச் சபை, இலங்கை தலைவர்களின்பயணங்களுக்கானதடை, வங்கி கணக்குகளை முடக்குதல் உள்ளிட்ட தடைகளை விதிப்பதற்கு இட்டுச் செல்லக் கூடும். அத்தகைய நிலைக்கு முகம் கொடுக்க அரசு தயாராக உள்ளதா என்று தெரிவிக்க வேண்டும்-என்றார். (ச)

## பல்கலைக்கழக மாணவர்களுக்கு வகுப்புத் தடை

ராஜரட்ட பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவம் மற்றும் வர்த்தக பீடங்களைச் சேர்ந்த 13 மாணவர்களுக்கு வகுப்புத் தடை விதிக்கப்பட்டுள்ளது.
இந்த வகுப்புத் தடை ராஜரட்ட பல்கலைக்கழகத்தின் நான்காம் வருட மாணவர்கள் மீது தாக்குதல்களை நடத்தினார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் இந்தப் பீடங்களைச் சேர்ந்த இரண்டாம் மற்றும் மூன்றாம் வருட மாணவர்கள் 13 பேருக்கே விதிக்கப்பட்டுள்ளது. (ச)

# போதையில் வாகனம் செலுத்தும் சாரதிகளை கைது செய்யத் திட்டம்

### இன்று முதல் நடவடிக்கை என்கிறார் அஜித் ரோஹண

கொழும்பு,ஏப்.10
பண்டிகைக் காலத்தில் மது போதையில் வாகனம் செலுத்தும் சாரதிகளைக் கைது செய்வதற்காக இன்று வியாழக்கிழமை முதல் எதிர்வரும் 20 ஆம் திகதி வரை நாடு முழுவதும் விசேட தேடுதல் நடவடிக்கைகளைப் பொலிஸ்தலைமையகம் ஆரம்பிக்கவுள்ளது.
பண்டிகைச் சமயத்தில் மது போதையில் வாகனம் செலுத்துவதால் அதிகளவில் விபத்துகள் இடம்பெறுகின்றன.
அதனைத் தடுப்பதற்காக மது போதையில் வாகனம் செலுத்தும் சாரதிகளைக் கைது செய்ய பொலிஸ் தலைமையகம் விசேட திட்டமொன்றை இன்று முதல் ஆரம்பிக்கவுள்ளது என்று பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்தார்.


அஜித் ரோஹண

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-
இதேவேளை கடந்த 3 மாத காலத்தில் 492 விபத்துகள் இடம்பெற்றுள்ளன. கடந்த வருடத்தின் முதல் 3 மாதத்தில் 515 விபத்துகள் பதிவாகியுள்ளன. வாகன விபத்துக்களில் சிறிதளவு குறைவு ஏற்பட்டுள்ளது. 2013ஆம் ஆண்டில் விபத்துக்களினால் 2,300 பேர் உயிரிழந்துள்ளனர்.
கடந்த வருடம் 37,500 விபத்துக்கள் இடம்பெற்றுள்ளன. அவற்றில் அதிகமானவை போதையில் வாகனம் ஓட்டியதால் ஏற்பட்டவை என்று அடையாளம் காணப்பட்டுள்ளன.
பண்டிகைக் காலத்தில் விசேட போக்குவரத்துக் கட்டுப்பாடுகளை முன்னெடுக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது-என்றார். (ச)

# மக்கள் நலன்களை நாடிய வரிக் கொள்கை வேண்டும்

### பிரஜைகள் முன்னணியின் பொதுச் செயலர்

கொழும்பு,ஏப்.10
மக்கள் நலனை கருத்தில் கொண்ட வரிக் கொள்கைகள் நடைமுறைப்படுத்தப்படவேண்டும் என்று பிரஜைகள் முன்னணியின் பொதுச் செயலர் நாடாளுமன்ற உறுப்பினர் ஜே.சிறிரங்கா தெரிவித்தார்.
2020 ஆம் ஆண்டில் உலகில் உணவுப் பிரச்சினை ஏற்படும் என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இந்த விடயம் குறித்து அரசு கவனம் செலுத்தவில்லை என்று அவர் கூறினார்.


ஜே.சிறிரங்கா

விவசாய உற்பத்திகளுக்கான வரிகள் தொடர்ந் தும் அதிகரிக்கப்பட்டுள்ளன.
விவசாயிகளின் வாகனங்களுக்கே வரிச் சலுகை வழங்கப்பட வேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

நீங்கா நினைவலைகள்
13ஆம் ஆண்டு முதலாம் ஆண்டு



அமரர் முருகுப்பிள்ளை நாகலிங்கம் [முன்னாள் அதிபர்]
திருமதி தங்கச்சிப்பிள்ளை நாகலிங்கம்
20.10.1929 மலர்வு 06.08.1931
02.04.2001 உதிர்வு 23.03.2013
ஆண்டொன்று ஆனதே அம்மா ஆறவில்லை எங்கள் மனம்
பார்க்குமிடமெங்கும் உங்கள் முகம்
மறக்க முடியுமோ உங்கள் குணம்.
நல்ல தம்பதிகளாய் பூவுலகில் வாழ்ந்த நீங்கள்
ஐயாவைத் தேடி அவர் சென்ற
பூர்வபக்க பங்குனித் திங்கள் தசமி ஏகாதசி
திதிகளில் சென்றதெங்கே?
ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கும்,
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
077 939 6978
021 373 4304
வீரபத்திரர் கோயிலடி, உடுப்பிட்டி.
(33443)(7.6.3)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# கதைகளைவிட்டு காரியம் பாருங்கள்

மன்னார் திருக்கேதீஸ்வரத்தில் கண்டுபிடிக்கப்பட்ட மனித எலும்பு எச்சங்கள், இன்றைக்கு சுமார் 80 ஆண்டுகளுக்கும் முற்பட்டவை என்று தொல்பொருள் ஆய்வுத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் சேனாரத் திசநாயக்க தெரிவித்திருக்கிறார்.

நடத்தப்பட்ட ஆய்வுகளின் அடிப்படையில் கண்டுபிடிக்கப்பட்டது 1930ஆம் ஆண்டுகளில் இருந்து பயன்படுத்தப்பட்டு வந்த ஓர் இடுகாடு என்று அவர் திட்டவட்டமாகத் தெரிவித்திருக்கிறார். சடலங்களின் கைகள் அவற்றின் வயிற்றின் மீது வைக்கப்பட்டும் தலைகள் மேற்குப் புறமாக இருக்கத் தக்கதாகவுமே மீட்கப்பட்ட சடலங்கள் புதைக்கப்பட்டிருந்தன என்பதால் அது இடுகாடாகவே இருக்க முடியும் என்று அவர் நிறுவியிருக்கிறார்.

மனித எலும்புகள் கண்டறியப்பட்டால் அவை எந்தக் காலப்பகுதிக்குரியவை என்பதை துல்லியமாகக் கணிப்பதற்கு சர்வதேச நியமங்களுக்கு ஏற்ற கார்பன் சோதனை இருக்கிறது. தொல்பொருள் ஆய்வுத் திணைக்களத்தின் பணிப்பாளருக்கு இது தெரியாததல்ல. வரலாற்று ஆய்வுகள் பலவற்றில் அவர் இந்த கார்பன் சோதனை பற்றிப் படித்தும் பட்டறிந்தும் இருப்பார் என்பதில் ஐயமிருக்க முடியாது.

அப்படி இருக்கையில் திருக்கேதீஸ்வரத்தில் மீட்கப்பட்ட எலும்புகள் எந்தக் காலப்பகுதிக்கு உரியவை என்பதைக் கண்டறிவதற்குக் கார்பன் சோதனை ஒன்றுக்கு உத்தரவிடுமாறு மன்னார் நீதிவான் மன்றத்தைக் கேட்டிருக்கக் கூடியதே, ஆய்வறிஞர் என்ற வகையில் திசநாயக்க செய்திருக்கக்கூடிய அறிவுசார் முடிவு. அதனை விடுத்து, நீதிமன்றத்துக்கு அறிக்கையாகச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஒரு விடயத்தை ஊடகவியலாளர்களைக் கூட்டி வைத்து – அமைச்சரான அரசியல்வாதியையும் கூடவே வைத்துக் கொண்டு – அறிவிக்க வேண்டிய அவசியம் என்ன வந்தது என்று தெரியவில்லை!

மன்னார் புதைகுழி என்பது வெறுமனே வரலாற்று ஆய்வுக்கு எழுந்தமானமாக உட்படுத்தப்படக்கூடியது அல்ல என்பது நாம் சொல்லித்தான் தொல்பொருள் ஆய்வுத் திணைக்களப் பணிப்பாளருக்குத் தெரிய வேண்டும் என்பதல்ல. அது இந்த நாட்டில் புரையோடிப்போய் புயலாய் வீசி, இப்போது மந்தமாருதமாகியிருக்கும் இனப் பிரச்சினையுடன் இரண்டறக் கலந்துவிட்ட – அதிலும் இறுதிப் போரின்போது இடம்பெற்ற போர்க் குற்றங்களின் சாட்சியங்களோ என்ற அச்சத்தை ஏற்படுத்தும் – விடயம்.

அப்படிப்பட்ட ஒரு விவகாரத்தில் ஐயந்திரிபற ஆராய்ந்து, சாத்தியமான அனைத்து அறிவியல் வழிகளையும் பயன்படுத்தி இந்த விவகாரத்தில் ஒரு முடிவுக்கு வருவதே அறிஞர்கள் என்போருக்கு – அரசியல் அழுத்தங்களையும் தாண்டி – அழகு. அப்படிச் செய்யாமல் ஒரு சில துலங்கல்களை மட்டுமே வைத்துக் கொண்டு எழுந்தமானமான முடிவுகளை அறிவிப்பது இனங்களுக்கு இடையிலான பிளவுகளை மேலும் வலுப்படுத்தி, மோசமாக்குவதற்கே வழிவகுத்துவிடும்.


நீதி நிலைநாட்டப்படுவதைவிட நிலைநாட்டப்படுவதாகக் காட்டப்படுவது மிக அவசியம் என்கிறது ஜனநாயகக் கட்டமைப்பு. இந்த விடயத்திலும் அது மிக மிக முக்கியம். சாத்தியமான எல்லா அறிவியல் வழிகளையும் பயன்படுத்தி, நேர்மையான முறையில் இந்தப் புதைகுழி எந்தக் காலப்பகுதிக்குரியது என்று நிரூபிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அதில் தவறு நிகழும்பட்சத்தில் மற்றொரு இனப் புறந்தள்ளல் வடுவாக இந்த விவகாரமும் இலங்கை இனப் பிரச்சினை வரலாற்றில் பதிந்துபோய்விடும்.

உண்மையில் திருக்கேதீஸ்வரம் புதைகுழி இடுகாடே தான் என்றாலும்கூட அது தமிழ் மக்களுக்கு எந்தவிதச் சந்தேகங்களும் ஏற்படாத வகையில் – தெற்கின் அரசியல் நோக்கங்களுக்காக இந்த விடயம் திரிபுபடுத்தப்படவில்லை என்று தெட்டத் தெளிவாக நிரூபணமாகும் வகையில் – உறுதிப்படுத்தப்படுவது அவசியம். இதனைச் செய்து முடிக்கும் கடமை, இலங்கையை ஆளும் தெற்கு அரசுக்கும் நீதித்துறைக்கும் உண்டு.

வரலாறுகளை மீண்டும் மீண்டும் தவறுகளாலும் ஐயங்களாலுமே கட்டமைத்துக்கொண்டு போவது இலங்கையின் எதிர்காலத்துக்கும் அமைதிக்கும் ஒருபோதும் உதவப் போவதில்லை என்பதை மனதில் கொண்டு திருக்கேதீஸ்வரம் புதைகுழி விவகாரத்தில் உடனடியாக கார்பன் சோதனைக்கு உத்தரவிடப்பட வேண்டும். ஐயமற்ற நீதி நிலைநாட்டப்பட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

# இலங்கையிடம் பலிக்குமா இந்திய ராஜதந்திரம்


சிதம்பரம்


மு.கருணாநிதி


ஜெயலலிதா

ரெங்கன்

ஜெனீவாவில் அமெரிக்காவால் பிரேரிக்கப்பட்டு 23 வாக்குகளால் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்மீது இந்தியா சாதகமாக வாக்களிக்காமல் போனமை எந்த வகையில் பார்த்தாலும் தனது "மூலோபாய பங்காளியான" அமெரிக்காவின் முகத்தில் அறையப்பட்ட ஒரு செயல்தான் என்று எச்.எல்.டி.மஹிந்தபால என்ற கட்டுரையாளர் வர்ணித்துள்ளார்.

இந்தியாவின் செயற்பாடு தொடர்பாக உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் கடுமையாக விமர்சிக்கப்பட்டு வருகிறது. இந்திய அரசில் அங்கம் வகிப்பவர்களே உதாரணமாக, அமைச்சர் சிதம்பரம் உட்படப் பலர் இந்தச் செயலை ஆதரிக்கவில்லை. இந்திய அமைச்சரவையில் அப்படியான ஒரு முடிவு எடுக்கப்பட்டிருக்கவில்லையென்று அவர் கூறியுள்ளார். தமிழ் நாட்டில், முதலமைச்சர் ஜெயலலிதா, தி.மு.க. தலைவர் மு.கருணாநிதி போன்றவர்கள் மத்திய அரசின் இந்த நடவடிக்கையைக் கடுமையாகக் கண்டித்திருக்கும் நிலையில், காங்கிரஸ் தலைவர்களான ஞானதேசிகன், சுதர்சனம் நாச்சியப்பன் போன்றவர்கள் அது, இந்தியாவின் ராஜதந்திர நடவடிக்கை என்று சப்பைக் கட்டு கட்டியிருக்கிறார்கள்.

இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க் குற்றங்கள் தொடர்பாக சர்வதேச விசாரணை ஒன்று முன்னெடுக்கப்படுமானால், இந்திய அமைதி காக்கும் படைகள் இலங்கையில் மேற்கொண்டிருந்த போர்க் குற்றங்கள் தொடர்பான விசாரணையும் உள்ளடக்கப்பட வேண்டும் என்று இலங்கை தரப்பில் வலியுறுத்தப்படும் என்ற அச்சம் காரணமாகவும் இந்தியா இந்த நிலைப்பாட்டை எடுத்திருக்கலாம் என்றும் சிலர் விமர்சிக்கிறார்கள்.

அதைவிட அமெரிக்கா, இந்தியாவின் துணைத் தூதுவர் தேவயானி கொப்ரகடே விடயத்தில் அவரை நடத்திய முறை குறித்து இந்தியா அதிருப்தி கொண்டிருந்தமையும், இந்தியாவில் இருந்த அமெரிக்க தூதுவர் இப்போது தேர்தலில் அடுத்த பிரதமராக வரக்கூடும் என்று கருதப்படும் பா.ஜ.கட்சியின் வேட்பாளர் நரேந்திரமோடியைச் சந்தித்துப் பேசியிருந்தமையும் காங்கிரஸ் அரசுக்கு ஆத்திரத்தை மூட்டியிருக்கலாம் என்றும் கூடப் பேசப்படுகின்றது. இலங்கை இந்தியாவின் அண்டை நாடாக இருந்த போதிலும், ஒருபோதும் இந்தியாவுடன் இணங்கிப் போனதில்லை. இந்திய அரசமைப்புக்கும் இலங்கை அரசமைப்புக்கும் இடையிலேயே பலத்த வேறுபாடுகள் உண்டு.

அங்கே பல்வேறு இனங்கள், மொழிகள் கலாசாரங்கள் ஏன், மாநிலங்கள் கூட இருக்கின்றன. அங்கு வாழும் எந்த ஒரு மனிதனும் மக்கள் ஆதரவு பெற்று மத்தியில் பிரதமராகவோ, ஜனாதிபதியாகவோ பதவி ஏற்க முடியும்.

**இலங்கையில் ஒருபோதும் அவ்வாறு எதுவும் நடைபெற முடியாது. சிறுபான்மையோர், பெரும்பான்மையினர் விரும்பினால் அன்றி எந்த ஒரு முக்கிய** பதவியிலும் அமர முடியாது. அந்த வகையிலேயே அரசமைப்பு இருக்கின்றது. பெரும்பான்மை மக்களின் மனங்களும் அவ்வாறே பயிற்றப்பட்டுள்ளன.

இவை ஒரு புறமிருக்க, இலங்கை விவகாரங்களில் இந்திய அரசுக்கும், மக்களுக்கும் அதிக அக்கறை இருப்பதற்குப் பல காரணங்கள் உள்ளன. இந்திய மாநிலங்களில் ஒன்றான தமிழ் நாட்டுடன் இனம், சமயம், மொழி, கலாசாரம் முதலிய இன்னோரன்ன காரணங்களினால் மிக நெருக்கமான உறவைக் கொண்ட ஒரு மக்கள் சமுதாயம் வடக்கு, கிழக்கு மற்றும் மலையகத்தின் சில பகுதிகளில் செறிந்து வாழ்கின்றது. குறிப்பிட்ட அளவிலானவர்கள் ஏனைய பகுதிகளிலும் வாழ்கிறார்கள். இவர்களின் அரசியல், நில உடைமை மற்றும் சமய கலாசாரங்கள் அச்சுறுத்தப்படுவதும், ஆக்கிரமிக்கப்படுவதும் இந்திய பெரு நிலத்திலும் குறிப்பாக, தமிழ் நாட்டில் எதிரொலிக்கவே செய்கின்றன. அதனால் மத்திய அரசும் அதில் கவனம் செலுத்த வேண்டிய கட்டாயம் ஏற்படுகின்றது.


மஹிந்த ராஜபக்ஷ

**இந்திய அரசில் அங்கம் வகிப்பவர்களே உதாரணமாக. அமைச்சர் சிதம்பரம் உட்படப் பலர் இந்தச் செயலை ஆதரிக்கவில்லை. இந்திய அமைச்சரவையில் அப்படியான ஒரு முடிவு எடுக் கப்பட்டிருக்கவில்லையென்று அவர் கூறியுள்ளார்.**

இந்தக் கட்டாய நிலைமையை இந்திய மத்திய அரசு தனது ராஜரீக செயற்பாடுகளுக்கு பயன்படுத்திக் கொள்வதின் விளைவே கடந்த காலங்களில் பலவிதமான சிக்கல்களுக்கு வழிவகுத்தன.

எதுவானாலும், இப்போது இந்திய அரசு எடுத்துள்ள நிலைப்பாடானது இலங்கையிலுள்ள தமிழர்களுக்கு எந்த அளவில் பயன் அளிப்பதாக இருக்கும் என்று இப்போதைக்குச் சொல்ல முடியாது.

இலங்கை அரசு மீது சர்வதேச மட்டத்தில் அழுத்தம் ஒன்று ஏற்படுத்துவதற்கு ஜெனீவாத் தீர்மானம் உதவியாக இருக்கும் என்று தமிழ்த் தரப்பினர் அனைவரும் எதிர்பார்த்திருந்த வேளையில், இந்தியா– ஏற்கெனவே இரண்டு முறை இலங்கைக்கு எதிரான தீர்மானங்களை ஆதரித்திருந்தும் கூட இம்முறை கடைசி வரை தனது நிலைப்பாட்டை வெளிப்படுத்தாமல் இருந்து விட்டு, வாக்கெடுப்பின் போது அதில் கலந்து கொள்ளாமல் இருந்து விட்டது.

உண்மையில், இருக்கும் நிலைமைகளைப் பார்க்கும் போது, இந்தச் செய்கையின் மூலம் இந்தியா எதனை எதிர் பார்க்கிறது என்பது விளங்குகின்றது. இலங்கைக்கு இந்தியாவின் இந்தச் செய்கை மகிழ்ச்சியை அளித்திருப்பது ஒரு புறமிருக்க, எதிர்காலத்தில் இந்திய விருப்பங்களை இவர்கள் நிறைவேற்றுவார்கள் என்று எதிர்பார்ப்பது எந்த அளவில் சாத்தியமாகும் என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.


ஏற்கெனவே பல வாக்குறுதிகளைக் காற்றில் பறக்க விட்டுள்ள இலங்கைத் தலைவர்கள், இந்தியாவின் இந்தச் செய்கையை ஒரு நல்லெண்ணச் சமிக்ஞையாக மட்டுமன்றி எதிர்காலத்தில் சர்வதேச பிரச்சினைகளை எதிர்கொள்ளும்போது இந்தியாவைத் தம் பக்கம் வைத்துக்கொள்ள முடியும் என்று எண்ணிச் செயற்படுவார்களா என்பதும் இனிமேல் தான் தெரியவரும்.

இந்தியாவின் செயற்பாடு உண்மையில் ஒரு ராஜதந்திர நடவடிக்கைதானா என்பதும் அதன் மூலம் வெளிப்படும். அவ்வாறானால், இலங்கை அரசின், குறிப்பாக மஹிந்த ராஜபக்ஷ அரசின் தமிழர் தொடர்பான – தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தொடர்பான – ஏன் வடக்கு மாகாண சபை தொடர்பான கொள்கைகளும் கூட மாறலாம். அவ்வாறாயின் இந்த நாட்டில் இனங்களுக்கிடையிலும், மதங்கள், கலாசாரங்களுக்கிடையிலும் புதியதொரு நல்லிணக்கம் உருவாகமுடியும் – நடக்குமா? இல்லையேல் இந்தியாவின் ராஜதந்திரம் அம்மட்டோடு போய் விடுமா?


ஞான தேசிகன்


சுதர்சன நாச்சியப்பன்

# எங்கள் குருநாதன்



இன்று சிவ யோகர் சுவாமிகளின் 50 ஆவது குருபூசை தினம்

ஈழவள நாட்டின் வடபால் மாவிட்டபுரத்தில் அம்பலவாணர் என்னும் சைவப் பெரியார் இருந்தார். அவர் சைவநெறி தவறாத சின்னாச்சி அம்மையாரைத் திருமணம் செய்தார். சைவம் தழைக்க இங்குள்ளவர்கள் செய்த தவத்தினால் 1872 ஆம் ஆண்டு மே மாதம் 29 ஆம் திகதி அவிட்ட நட்சத்திரத்தில் அந்தத் தம்பதியினருக்கு யோகநாதன் ஏக புதல்வராக அவதரித்தார்.

அந்தக் காலத்தில் சைவப் பாடசாலைகள் அதிகம் இல்லை. வெள்ளையர்களின் ஆட்சியே காணப்பட்டது. யோகநாதன் சிறிய தகப்பனாருடன் கொழும்புத்துறையில் தங்கி கல்வி கற்றார். விடுமுறை நாள்களில் தாயார் இல்ல மாகிய மாவிட்டபுரத்திலும் வாழ்ந்து வந்தார். எட்டு வயதில் இவரது தாயார் இறந்து விட்டார். சிறிய தந்தையார் யோகநாதனை புனித சம்பத்தரிசியார் கல்லூரியில் ஆங்கிலக் கல்வி கற்பதற்கு கொண்டு போய்ச் சேர்த்தார். யோகநாதன் பின்னர் உத்தியோகம் பார்ப்பதற்காக கிளிநொச்சிப் பகுதியில் நீர்ப்பாசன இலாகாவில் தொழில் ஆற்றினார்.

தவப்புதல்வனாகிய சுவாமிகள் கிளிநொச்சியை விட்டு மாவிட்டபுரம் திரும்பினார். அடிக்கடி நல்லூருக்கு நடந்து வருவாராம். செல்லப்பா சுவாமியை முதல் முதற் கண்ட அனுபவத்தை சிவயோக சுவாமிகள் பின்வருமாறு சொல்கிறார்.

'கருத்தில் நினைந்து உருகிக் கை கூப்பும் தொண்டர் வருத்த மெல்லாம் தீர்க்கும் வடிவேல் திருத்தலத்தில் தேரடியில் தேசிகனைக் கண்டு தரிசித்தேன் ஆரடா நீ என்றான் அவன்'

அன்று முதல் அப்பன் செல்லப்பனை நினைத் துருகிப் பாடுவாராம். அவரையே தனது குருவாக ஏற்றுக் கொண்டார். நல்லூர் தேரடியில் பக்தர் குழாம் அதிகரித்தது. கதிரவேலுச் சாமியும் யோகர் சுவாமியும் செல்லப்பா சுவாமியின் அரிய சீடர்கள் கொழும்புத்துறை சுவாமியார் வீதி றோட்டுப் பக்கமாக ஓர் இலுப்பை மரம் நின்றது. அந்த இலுப்பை மரத்தின் கீழ் தான் சுவாமிகள் அருந்தவம் இருந்தார்கள். 1914 ஆண்டு முதல் அவ்விடத்தில் ஓலையால் வேய்ந்த குடிசை ஒன்றில் யோகர் சுவாமிகள் வாழ்ந்து வந்தார்.

சுவாமிகளிடம் பல கொள்கையுடையவர்க ளும் வருவார்கள். சுவாமிகள் ஒருவருடைய நம்பிக்கையையும் குழப்புவது கிடையாது. கிறிஸ்துநாதரின் மலைப் பிரசங்கம், நபி நாயகத்தின் போதனைகள். கௌதம புத்த பிரானின் போதனைகள் ஆகியவற்றை அடிக்கடி சொல்லுவார். யோகர்சுவாமியும் தமது குருவைப் போல் முற்றுந் துறந்த துறவியாயிருந்த போதிலும் யாழ்ப்பாணத் தார் மீது கொண்ட அன்பினால் தமது சுயரூபத்தை நமக்கும் காட்டியுள்ளார். சுவாமிகளின் வாழ்க்கையைநாம்உற்று நோக்கும் போது பிரதானமாகப் புலப்படுவது அவருடைய பூரணமான துறவு நிலையே. அன்பர்கள் கொடுக்கும் பொருள்களை மற்றவர்களுக்குக் கொடுப்பதே அவர் வழக்கம். பற்றற்றவர்களுக்கு எல்லாப் பொருள் களும் தாமாகவே வந்தடையும் என்னும் உண்மையைத் தான் சுவாமிகளிடம் காண்கிறோம்.

*செல்வி யோ. வினாசித்தம்பி*

## தவக்காலச் சிந்தனை



### பகிர்ந்தளித்தல் இல்லையென்றால் நோன்பினால் பயனில்லை

இயேசுவின் பாடுகள் நிறைந்த நாள்களில் நோன்பிருந்து இறையுணர்வுக்குள், இறையுறவுக்குள் வாழ்வது நல்லது. இது உடல், உள, ஆன்மிக வாழ்வைச் சீர்செய்வதுடன், இறைவனுடன் நெருங்கி வாழும் சந்தர்ப்பத்தையும் தருகின்றது.

தவக்காலத்தில் பல நிலைகளில் நோன்பிருந்து ஜெப சிந்தையோடு தர்மம் செய்து வாழ்வதும் சிறப்பானது. மனுக்குலத்தின் விடுதலைக்காக பாடுபட்ட இயேசுவுக்காக நாம் செய்யும் நோன்பு ஓர் அடையாளமாகலாம்.

ஆனால் நோன்பு என்பது பழைய ஏற்பாட்டுக்காலத்திலிருந்தே கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. ஆன்மாவை ஒடுக்க, உடலை ஒடுக்க, பாவங்களை நினைத்துப் புலம்ப, போரில் வெற்றிகொள்ள, வியாதியிலிருந்து சுகம் பெற, மனந்திருந்தி இறைவனிடம் வர, வேண்டுதல் நிறைவேற அன்றையவர்கள் நோன்பிருந்தார்கள்.

இயேசுவும் நோன்பிருந்து இறைவனின் விருப்பத்தை நிறைவேற்றினார். திருமுழுக்கு முனிவர் யோவானின் சீடர்களும் நோன்பிருந்தார்கள். சில நோக்கங்களுக்காகவும் நோன்பு மேற்கொள்ளப்பட்டது.

நோன்பை எப்படி மேற்கொள்ள வேண்டும், எப்படி மேற்கொள்ளக் கூடாது என்ற போதனையை இயேசு தருகின்றார்.

இன்று பகிர்ந்தளித்தல் இல்லாமல் மனுக்குலம் பல்வேறு செயல்களினால் பாதிக்கப்படுகிறது. சமயங்களின் பெயரால் நடக்கும் அநீதிகளை ஒழிக்க அரசியல், பொருளாதாரம், கலாசாரம் என்ற செயல்களினால் நடக்கும் வன்முறைகளை ஒழிக்க, பெண்ணடிமைத்தனத்தினால் ஏற்படும் அவலத்தை ஒழிக்க, சிறுவர்கள் பாலியல் துஷ்பிரயோகங்களை ஒழிக்க, ஊழல் நிலை வாழ்வை ஒழிக்க, எங்கும் எதிலும் மனித நேயத்தை, மனித மான்பைக் கொண்டுவர, தீமைகளை நன்மைகளால் வெல்ல உண்மையாக நோன்பிருக்க இந்நாள்களில் இறைவன் நமக்கு அறைகூவல் விடுக்கின்றார். உண்மையாம் உபவாசம் எதுவும் உண்ணாமல் இருப்பதா என்று சிந்திப்போம், செயற்படுவோம். இத் தவக்காலத்தில் இறைவன் விரும்பும் வகையில் செயற்பட்டு அவரது அருள் வரப்பிரசாதங்களைப் பெறுவோம்.

*அருட்பணி டி.எஸ். மதியாபரணம்.*

# வறிய குடும்பங்களுக்கு வழிகாட்டும் புங்குடுதீவு சர்வோதய அமைப்பு



லக்ஸ்மன்

மிகவும் கஷ்டமான சூழ்நிலையில், அன்றாட வாழ்வாதாரத்துக்கு அல்லற்படும் குடும்பங்கள் உள்ளூரில் கிடைக்கும் மூலவளங்களைப் பயன்படுத்தி வருமானம் ஈட்ட வேண்டும் என்ற நோக்குடன் புங்குடுதீவு சர்வோதய அமைப்பு செயற்படுவதை அங்கு தொழிற்பயிற்சி பெறும் பெண்களைக் காணும் போதே உறுதிப்படுத்திக் கொள்ள முடிகின்றது. ஆனால் தீவுப் பகுதியில் உள்ளூர் மூல வளங்களைப் பயன்படுத்தும் முறைமைகள் பெரிய அளவில் மேற்கொள்ளப்படுவதென்பது அரிதாகவே காணப்படுகின்றது.

ஆனால் புங்குடுதீவு சர்வோதய அமைப்பு, வறுமை நிலையில் உள்ள பெண்களைத் தனது உணவு பதனிடல் பகுதியில் இணைத்துள்ளது. அத்துடன் உள்ளூர் மூலப் பொருள்களைக் கொண்டு உணவுப் பொருள்களைத் தயாரித்து சிறப்பான சந்தைப்படுத்தலையும் முன்னெடுத்து வருகின்றது. பனை வளங்களைக் கொண்டு தயாரிக்கப்படும் பொருள்களுடன் தற்போது வேம்பில் இருந்து பெறக்கூடிய வேப்பம்பூ, வேப்பங்கொட்டை ஆகியவற்றையும் உள்ளடக்கி அந்தப் பகுதியில் 14 யுவதிகளுக்கு அவற்றின் மூலமாக உப உணவுப் பொருள்கள், எண்ணெய் ஆகியவற்றைத் தயாரிப்பதற்கான பயிற்சிகளை வழங்கி வருகின்றது. குடும்பத்தில் உள்ள ஆண்கள் வேப்பம் பூக்களைச் சேகரித்து வருகின்றனர். பெண்கள் அவற்றைப் பிரித்தெடுத்து பூக்களை உணவு பதனிடல் செயற்பாட்டில் சேர்த்துக் கொள்வதுடன், இலைகளைப் பசளைக்காகப் பயன்படுத்தக்கூடிய பயிற்சிகளும் வழங்கப்படுகின்றன.

தமது வறுமையைப் போக்கி வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்குடன் இளம் தாய்மார்களும் இந்தத் திட்டத்தில் இணைந்துள்ளனர். மேலும் உள்ளூர் மூலப் பொருளான பனை வளத்தைப் பயன்படுத்துவது தொடர்பான பயிற்சியில் 20 பெண்கள் இணைந்துள்ளனர். உணவு பதனிடல் பகுதியில் அந்தந்தக் காலத்தில் கிடைக்கக் கூடிய மூலப் பொருள்களைக் கொண்டு தயாரிப்புக்கள் இடம்பெறுகின்றன. யாழ்.நகரின் பல்வேறு பகுதிகளிலும் இருந்து இந்த உற்பத்திப் பொருள்களைப் பெற்றுக் கொள்ளவென மக்கள் அங்கு வருவதையும் அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

சர்வோதயத்தின் கீழ் இயங்கும் சமூகக் கற்கை நிலையத்தின் உறைபதனிடல் திட்டப் பிரிவில் வேலை செய்யும் மூன்று பிள்ளைகளின் தாயான ஜெகசீலன் தமிழினி என்பவர் இது தொடர்பாகத் தெரிவிக்கையில்;

இந்த முயற்சிகள் குடும்பப் பொருளாதாரத்தில் ஆரோக்கியமான வாழ்வுக்கு கைகொடுப்பதுடன் உளவியல் ரீதியான மகிழ்ச்சியையும் தருகின்றது. இதில் வேலை செய்யும் நாம் கிடைக்கும் இலாபத்தைப் பகிர்ந்து கொள்ளுகின்றோம். மாதம் தோறும் கணிசமான வருமானம் கிடைப்பதால் குடும்பத்திலும் சந்தோஷம் நிலவுகிறது எனக் கூறுகிறார்.

திருமதி ந. கணநிதி கூறுகையில்;

நான் பயிற்சி பெற்று உற்பத்தியாளராக மாறியுள்ளேன். யாழ். பனம் உற்பத்தி நிறுவனத்தின் பங்குதாரராகவும் உள்ளேன். நாளொன்றுக்கு 400 ரூபாவுக்கு மேலாக வருவாய் கிடைக்கின்றது. அதிகளவில் பொருள்களுக்கான கேள்விகள் கிடைப்பதால் வருமானம் கணிசமாக உள்ளது. தற்போது வீட்டுக் கஷ்டம் என்ற சுமையில் இருந்து விடுபட்டுள்ளேன்- என்றார்.

உணவு பதனிடல் திட்டம் தவிர்ந்த கைப்பணிப் பொருள்களின் உற்பத்திக்கான பயிற்சி நெறிகளும் இங்கு நடைமுறைப்படுத்தப்படுகின்றன. அனைத்துப் பயிற்சியாளர்களுமே தரமான பொருள்களைத் தயாரித்துள்ளமை தொடர்பாகக் கொள்வனவுக்கு வருபவர்கள் பாராட்டுகின்றனர். பயிற்சி நெறிகளின்போது வேலணைப் பிரதேச செயலர் திருமதி மஞ்சுளாதேவி சதீசன், தீவக வலய கல்விப் பணிப்பாளர் ரி.ஜோண் குயின்ரஸ், யூ.என்.டி.பி. உத்தியோகத்தர்கள் எனப் பலரும் ஆலோசனைகளையும், உதவிகளையும் வழங்கி வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

மேலும், இங்கு நிர்வாக அதிகாரியாகச் செயற்படும் செல்வி அ.ஜமுனாதேவி பயிற்சியாளர்களை உற்சாகப்படுத்தும் வகையில் தானும் ஒரு பயிற்சியாளர் போன்று அவர்களுடன் இணைந்து உற்சாகப்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

**இந்த முயற்சிகள் குடும்பப் பொருளாதாரத்தில் ஆரோக்கியமான வாழ்வுக்கு கைகொடுப்பதுடன் உளவியல் ரீதியான மகிழ்ச்சியையும் தருகின்றது. இதில் வேலை செய்யும் நாம் கிடைக்கும் இலாபத்தைப் பகிர்ந்து கொள்ளுகின்றோம்.**





# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்**: பதற்றத்தைத் தவிர்த்து நிதானத்தைக் கடைப்பிடியுங்கள். சில விரயங்கள் ஏற்பட்டாலும் அவை யாவுமே சுபச்செலவுகள் தான் என்பதை உணருங்கள். உங்கள் தன்னம்பிக்கை, திறமைத் திறன் அதிகரிக்கும். குடும்பத்தில் நல்ல சந்தோஷ தருணங்கள் ஏற்படும்.

**இடபம்**: விலகி நின்ற நட்பும் உறவுகளும் கை கொடுப்பார்கள். பிள்ளைகள் உயர்கல்விக்குச் செல்வதற்குண்டான வேலைகளை ஆரம்பிப்பது நல்லது. வேலை மாற்றம் வந்து சேரும் சம்பள உயர்வுடன் கூடிய பணி மாற்றம் உண்டு.

**மிதுனம்**: வெளிநாட்டில் பணிபுரியும் அன்பர்களுக்கு அரச அனுகூலம் உண்டு. வியாபாரிகளுக்கு புதிய திட்டங்களை செயற்படுத்திக் கொள்ள சிறப்பான சந்தர்ப்பம் அமையும். கலைத்துறையினருக்கு பகீரதப் பிரயத்தனம் செய்வதன் மூலமாகவே நல்ல முன்னேற்றம் ஏற்படும்.

**கடகம்**: சிறிது முயற்சி செய்வதன் மூலம் சிறந்த வாய்ப்புகள் கைகூடும். உங்கள் கௌரவம் அதிகரிக்கும். உத்தியோகத்தர்கள் புத்துணர்ச்சியுடன் எதையும் எதிர்கொள்வர்.

**சிங்கம்**: நீங்கள் சந்திக்கும் ஒவ்வொரு பிரச்சினைகளையும் மிகச்சாதுர்யமாக கையாளுவீர்கள். உங்களது யோசனைகளை மற்றவர்கள் கேட்டும் அனுசரித்தும் செல்வார்கள். உங்களை உதாசீனப்படுத்தியவர்கள் மீண்டும் திரும்பி வருவார்கள்.

**கன்னி**: உங்களின் செயற்பாட்டால் உங்கள் குடும்பத்துக்கு நன்மை ஏற்படும். குடியிருக்கும் வீட்டை மாற்றவும் சிலருக்கு வாய்ப்புண்டு. வேலை இழந்தவர்கள் மீண்டும் பணியில் சேர வாய்ப்புகள் வந்து சேரும்.

**துலாம்**:மேலிடத்தில் உள்ள அதிகாரிகள் உங்களுக்கு அனுசரணையாக நடந்து கொள்வார்கள். வேலை செய்யும் இடத்தில் உள்ள பிரச்சினைகளை நிதானமான அணுகுமுறையுடன் சமாளித்து வெற்றி காண்பீர்கள். தொழில் துறையாளர்களை வேலையாள்கள் அனுசரித்துப் போவார்கள்.

**விருச்சிகம்**: நற்பெயரும் கீர்த்தியும் வந்து சேரும். சிலருக்கு புதிய சொத்துக்கள் வாங்க பாக்கியம் ஏற்படும். தடைப்பட்டிருந்த அனைத்து காரியங்களும் அடுத்தடுத்து நடைபெறும். சுற்றியிருக்கும் சோம்பேறிகளிடமிருந்து உங்களை நீங்கள் விலக்கிக் கொள்ளுங்கள்.

**தனுசு**: உங்கள் பக்கமுள்ள நியாயம் ஓங்கும். விட்டுக்கொடுத்துப் போவீர்கள். தந்தையாருடன் இருந்த மனக்கசப்புகள் நீங்கும். குடும்பத்தில் இருந்து வந்த பிரச்சினைகள் தீரும். வருங்கால முன்னேற்றத்தைக் கருதி சில முயற்சிகளை எடுப்பீர்கள்.

**மகரம்**: முயற்சிகள் யாவும் வெற்றிகளைத் தரும். பயணங்களால் பொருள்சேர்க்கை ஏற்படும். சுயசார்பும் தன்னிறைவும் பெறுவீர்கள். தைரியம் பளிச்சிடும். புதிய வழக்குகளை சந்திக்க நேரிடலாம். நீண்ட நாள்களாக இருந்து வந்த பிரச்சினை நீங்கும்.

**கும்பம்**: உத்தியோகத்தர்களுக்கு பதவி உயர்வு கிடைக்கும். பயணம் தொடர்பான தொழில்களில் லாபம் கிடைக்கும். கலைத்துறையினருக்கு நன்[illegible]க்கும் நாள். வேலை நிமித்தமாக வெளிநாட்டுக்குப் பயணம் செல்ல வேண்டி வரலாம்.

**மீனம்**: அனைவருடனும் அனுசரித்துச் செல்வீர்கள். மனதில் உற்சாகம் பிறக்கும். சில மாற்றங்கள் வந்து சேரும். பதவி உயர்வுக்குரிய அறிவிப்பு வந்து சேரும். சிலருக்கு வெளியூருக்கு மாற்றலும் வரும்.

## நாளை

**பங்குனி-28 வெள்ளிக்கிழமை | 11.04.2014**

திதி: ஏகாதசி மு.ப.10.25 வரை
நட்சத்திரம்: மகம்
மா.06.33 வரை

சுபநேரம்; 06.06-07.36 வரை
இராகுகாலம்; 10.36-12.06 வரை
ஏகாதசி விரதம்

## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து...



### இந்துத் துறவி

சுவாமி விவேகானந்தர் என்ற இந்துத் துறவி சிறந்த சொற்பொழிவாளர். இந்த நாட்டின் பொது மேடைகளில் தோன்றிய சொற்பொழி வாளர்களை விடச் சிறந்தவர். அவரது இணையில்லாத சொல்வன்மை, ஆன்மிக விடயங்களில் அவருக்கு இருக்கும் ஆழ்ந்த அறிவு, வித்திறமை, பேரார்வம் இவை யாவும் சர்வமத மாநாட்டில் கூடியிருந்த உலகச் சிந்தனையாளர்களுடைய மனங்களையும் அவரது சொற்பொழிவைக் கேட்ட பல்லாயிரக்கணக்கான மக்களுடைய உள்ளங்களையும் கவர்ந்தன.

பேசும்போது அவர் இனிமையாகப் பேசுகிறார், ஆங்கில மொழியின் சிறந்த சொற்களை அவர் உபயோகிக்கிறார். மிக உயர்ந்த மேலை நாட்டுப் பெரு மக்களை ஒத்த பண்பும் பழக்கமும் உடையவர் அவர். வசீகரம் மிக்க தோழன். மேலை நாட்டில் எங்கும் இவரை மிஞ்சுபவர்களில்லை, என்று சொல்லத்தக்க முறையில் சொற்பொழிவாற்ற வல்லவர். ஆங்கில மொழியில் தெளிவாகப் பேசுகிறார். அது மட்டுமல்ல, சரளமாகவும் பேசுகிறார். அவரது கருத்துக்கள் புதியவை; பொறி பறப்பவை; அழகான மொழியில் பெருக்கெடுத்து வெள்ளமெனப் பொழிபவை.

சுவாமி விவேகானந்தர் மதத்தாலும் இளமைக் கல்வியாலும் பிராமணர். இந்து மதத்தைத் தழுவிய பிறகு தமது அந்தஸ்தை விட்டு அவரது நாட்டு வழக்கப்படி துறவியானார். இயற்கையின் அதியற்புதமான இரகசியங்களில் ஈடுபட்டார்; இறையுணர்வு பெற்றார். அந்தக் கீழை நாட்டின் உயரிய கல்லூரிகளில் மாணவராகவும், ஆசிரியராகவும் இருந்து உயரிய அறிவு பெற்றார். இவற்றால் இந்த நாள்களின் சீரிய சிந்தனை மிக்க அறிஞர்களில் சிறந்தவர் எனும் உலகப் புகழும் பெற்றுள்ளார் என சுவாமி விவேகானந்தர் அமெரிக்கர்களால் விமர்சிக்கப்பட்டார்.


## கங்காரு ரோபோவை உருவாக்கி ஜேர்மன் விஞ்ஞானிகள் சாதனை

முதன் முறையாக கங்காரு ரோபோவை உருவாக்கி ஜேர்மன் விஞ்ஞானிகள் சாதனை புரிந்துள்ளனர்.

BionicKangaroo என்று அழைக்கப்படும் இந்த ரோபோ ஜேர்மன் நிறுவனமான Festo வினால் வடிவமைப்பு செய்யப்பட்டுள்ளது.

இது உண்மையான கங்காருக்களைப் போன்று அசையக் கூடியதாகவும், அவற்றைப் போன்று பாயக்கூடியவாறும் வடிவமைக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இதன் மேம்படுத்தல் வேலைகள் தொடர்ந்தும் இடம்பெற்றுவருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



## செவ்வாய்க் கிரகத்தின் பிரகாச ஒளி குறித்து நாசா தகவல்

செவ்வாய்க் கிரகத்தில் பிரகாசமான மர்ம வெளிச்சம் தோன்றியுள்ளதாக நாசா தகவல் தெரிவித்துள்ளது.

சர்வதேச ஆய்வு மையமான அமெரிக்காவின் நாசா செவ்வாய்க்கிரகத்தில் உயிரினங்கள் வாழ முடியுமா என்பதை அறிவதற்கு கியூரியாசிட்டி என்ற விண்கலத்தைஅனுப்பியுள்ளது.

இந்த விண்கலம் கடந்தாண்டு ஒகஸ்ட் மாதம் செவ்வாய்க் கிரகத்தில் தரையிரங்கி ஆய்வு நடத்தியதில், கடந்த 6 ஆம் திகதி புகைப்படம் ஒன்றை அனுப்பி வைத்திருந்தது.

இந்தப் புகைப்படத்தில் நம்ப முடியாத அளவில் ஒரு பிரகாசமான ஒளி ஒன்று உள்ளதை கண்டு விஞ்ஞானிகள் அதிர்ச்சியில் ஆழ்ந்துள்ளனர். இதில் தெரியும் செயற்கை ஒளியானது தரைப் பகுதியில் இருந்து மேல் நோக்கி தெரிகின்றது.

ஆனால் இது சூரிய ஒளி போல் அல்லாது, மனிதர்கள் உற்பத்தி செய்யும் ஒளிபோல் இருப்பதால் இந்த விடயம் குறித்து நாசா அமைப்பினர் ஆய்வு செய்யவுள்ளனர்.

## சுடோக்கு

### எண் விளையாட்டு

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 5 | | 6 | | 9 | | | 8 |
| | | | | | 2 | | 9 | 7 |
| | | 2 | | 5 | 1 | 3 | | |
| 1 | | 5 | 4 | 3 | 8 | | | 2 |
| | | | 1 | | 5 | | | |
| 3 | | | 9 | 2 | 7 | 1 | | 5 |
| | | 1 | 8 | 9 | | 7 | | |
| 9 | 8 | | 5 | | | | | |
| 5 | | | 2 | | 6 | | 8 | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 6 | 4 | 7 | 8 | 2 | 1 | 3 | 5 |
| 5 | 2 | 8 | 4 | 1 | 3 | 6 | 7 | 9 |
| 7 | 3 | 1 | 5 | 6 | 9 | 8 | 2 | 4 |
| 1 | 4 | 6 | 3 | 9 | 8 | 7 | 5 | 2 |
| 8 | 7 | 9 | 6 | 2 | 5 | 4 | 1 | 3 |
| 3 | 5 | 2 | 1 | 4 | 7 | 9 | 6 | 8 |
| 4 | 9 | 5 | 2 | 7 | 6 | 3 | 8 | 1 |
| 6 | 8 | 3 | 9 | 5 | 1 | 2 | 4 | 7 |
| 2 | 1 | 7 | 8 | 3 | 4 | 5 | 9 | 6 |

## என்னோடு பேசிய மழைத்துளி...

வறண்டு போன நிலமதில்
பட்டுப்போன நெட்டை மரத்தில்
இருக்கும் சில குட்டைக் கிளைகளில்
ஏதோ ஒன்றில்
கயிற்றை போட்டு
நான் ஊஞ்சலாட
மனமோ ஊசலாடியது...


ஊஞ்(ஊ)சலாடிய படியே
தலையை உயர்த்தி
கண்ணை நிமிர்த்தி
பரந்த வெளியை உற்றுப்
பார்க்கின்றேன்....

அழகிய நீலத்தில் வானம்
அதில் தொடர்ந்து ஓடும் மேகம்
எலி ஓட பூனை - அதை
துரத்தியடி பின்னேயே
ஓடுவது போன்று
ஓடிக் கொண்டேயிருக்கிறது
மேகம்...

ஏதோ ஒரு
வான் மூலையில்
ஏழு நிறங்களின்
அணி வகுப்பு
வளை வகுப்பு...
ஒவ்வொருவர் வாழ்வும்

ஒவ்வொரு விதம்
அதுவும் ஏதோ
ஒரு நிறம்
என புரிய வைக்க
வருண பகவானின்
திருவிளையாடலோ
பெரு விளையாடலோ
யாருக்குத் தெரியும்....?

வான் பரப்பு திடீரென
கத்துகிறது
முழங்குகிறது இரைகிறது
என் கண்ணீரை மறைக்க
அது அழுகிறதோ?



ஊஞ்(ஊ)சலாடும்
என் கையில்
முதலில் நீர்த்துளி
பின் நீர்த்துளிகள்
எனக்குள் ஒரு மகிழ்வு
ஒரு விடிவு
வறண்ட நிலத்தின்
வறட்சி துரத்தப்படும்
பட்டுப்போன நெட்டை மரமும்
அதில் உள்ள குட்டைக் கிளைகளும்
ஒரு புதுவாழ்வு பெறும்...

திடீரென ஒரு எண்ணம்
வீட்டில் ஒரேயொரு கொடி
அதில் ஒரேயொரு ஆடை
என் ஊஞ்(ஊ)சலாட்டம்
நிற்கிறது....

*ஜெ.யூட்டனிஸ்வரன்.*



## சமூகச் சீர்கேட்டுக்கான காரணம் தகவல் தொழில்நுட்பம்

தற்போது சமூகம் சீரழிந்து செல்வதற்கு மிக முக்கிய காரணமாக தகவல் தொழில்நுட்பமே விளங்குகிறது. அண்மையில் யாழ்.மாவட்டத்தில் தற்கொலை செய்துகொண்ட ஒருவர் தான் உயிரிழக்கும் தருணத்தில் கூட தனது காதலியின் உண்மையான சுயரூபத்தை எல்லோரும் அறிய வேண்டும் என்பதற்காக அவளது படங்களை முகப்புத்தகத்தில் போட்டு அவளது வாழ்க்கையைச் சீரழித்து விட்டார்.

தகவல் தொழில் நுட்பத்தின் மாற்றம் காரணமாகத்தான் கலாசாரங்களிலும் மாற்றங்கள் ஏற்படுகின்றன. தற்போது பாடசாலை மாணவர்கள் பாடசாலைக்குச் செல்லும் போது கைத்தொலைபேசியைக் கொண்டு செல்கிறார்கள். பின் வகுப்பறையில் ஆசிரியர் கற்பிக்க அந்த மாணவன் கைத்தொலைபேசியில் விளையாடிக் கொண்டிருப்பான். அதன் மூலம் அவன் கல்வியில் அக்கறை செலுத்த முடியாத சூழல் ஏற்படுகிறது.

தற்போது வெளியான சாதாரண தரப் பரீட்சையில் கூடுதலான மாணவர்கள் தமிழில் குறைந்த மட்ட தேர்ச்சியடைந்துள்ளனர். இதற்குக் காரணம் அவர்கள் கல்வியில் அக்கறை செலுத்தாமல் தகவல் தொழில் நுட்ப சாதனங்களில் கூடுதல் கவனத்தைச் செலுத்தி வருகின்றமைதான்.

இவ்வாறு மாணவர்களின் கல்வியைப் பாதிக்கும், உயிரைப் பறிக்கும் தகவல் தொழில் நுட்பப் பாவனையால் சமூகச் சீர்கேடுகள் அதிகரிக்கின்றன.

*பூங்கொடி,*
*பருத்தித்துறை.*

## விமர்சனம்



## இளைஞர், யுவதிகளே!

உங்களின் திறமைகளை வெளிக்கொணரவும் பிரச்சினைகள் பற்றிப் பேசவும் தேடல்களுக்குத் தீனி போடவும் இளவல்கள் வட்டம் என்ற இந்தப் பகுதி மலர்ந்துள்ளது. இந்தப் பகுதிக்கான உங்கள் படைப்புக்களையும் ஏதாவது சந்தேகங்களையும் விமர்சனங்களையும் கீழேயுள்ள படிவத்தோடு இணைத்து அனுப்பிவையுங்கள்.

பெயர் :-..........................................

முகவரி :-......................................

.................... திகதி

.................... கையொப்பம்

**இளவல்கள் வட்டம் ,**
**உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**




## கண்ணீருடன்.....

இதயத்தில் இடம் பிடித்தவள்
இருப்பினும்
கண்களுக்கு புலப்பட மறுப்பவள்

என் இதயத்தினுள்ளே - உன்
நினைவுகள்
என் இதயத்தை தாழிட்டு
கொள்பவளும் - நீ தான்
என்னை அணுவணுவாய்
சித்திரவதை செய்பவளும் நீயே


கண்ணீரை மட்டும் சொந்தமாக்கியவள்
கண்ணீருடன் கரையவிட்டு
சென்றது ஏனோ....?



*சிந்து சிவதாஸ், ஐங்கரன் வீதி,*
*சுதுமலை தெற்கு.*

## மன நிம்மதிக்கான வழிகள்

அன்பு மனம்
சிரித்த முகம்
நன்றி உணர்வு
நகைச்சுவை உணர்ச்சி
எதையும் தாங்கும் இதயம்
சுற்றுப்புறத் தூய்மை
ஆரோக்கியமான உடல் நலம்
பிறர் மனை நோக்காப்
பேராண்மை
இன்சொல் பேசும் வாய்மை
நிலைக்குத் தகுந்த நினைப்பு
விட்டுத்தரும் மனப்பாங்கு
பிறர்கேடு சூழா எண்ணம்
இல்லறத்தில் ஈடுபாடு
நல்ல நாடும் மனம்
சுயநல எதிர்பார்ப்பு இல்லா
உழைப்பு
எப்போதும் மன நிம்மதிக்கு
இவையே வழிகள்



# சிவயோக சுவாமிகளின் குருபூசையையொட்டி விசேட வழிபாடுகளும் பாத யாத்திரையும்

கொழும்புத்துறை, ஏப். 10
தவத்திரு யோக சுவாமிகளின் 50 ஆவது குருபூசைதினம் இன்று கொண்டாடப்படுவதை முன்னிட்டு சுவாமிகள் பிறந்த இடமாகிய கொழும்புத்துறையில் அமைந்துள்ள யோக சுவாமிகள் சமாதிக் கோயில் நிர்வாகத்தினரின் ஏற்பாட்டில் குருபூசைத்தின வழிபாடுகளும் பாத யாத்திரையும் இடம்பெறவுள்ளன.

இன்று காலை 7.30 மணிக்கு நல்லூர் கந்தசுவாமி ஆலய முன்றிலில் இருந்து ஆரம்பிக்கும் பாத யாத்திரை கொழும் புத்துறையைச் சென்றடையும்.

இந்தப் பாதயாத்திரையில் கலந்துகொள்ளும் முகமாக பாடசாலைகள் மற்றும் இந்து சமய அமைப்புக்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. பாத யாத்திரை முடிவில் விசேட வழிபாடுகள், சொற்பொழிவுகள், நிகழ்ச்சிகள் என்பனவும் இடம்பெறவுள்ளன.

அதேவேளை அகில இலங்கை இந்து மாமன்றம், நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபத்திலும், சிவதொண்டர் நிலையத்தினர் தமக்குரிய மண்டபத்திலும் யோக சுவாமிகளின் 50 ஆவது குருபூசை நிகழ்வுகளை நடத்தவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-135)

## மரண அறிவித்தல்

### திருமதி பொன்னம்மா தம்பிராசா



நயினாதீவு, 5ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பொன்னம்மா தம்பிராசா 07.04.2014 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - சின்னப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மகளும், காலஞ்சென்றவர்களான தில்லையம்பலம் - அன்னப்பிள்ளை தம்பதியரின் மருமகளும், தம்பிராசாவின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்றவர்களான நாகமுத்து, பொன்னம்பலம், முருகேசு, சின்னம்மா, விசாளாச்சி, ஐயாத்துரை, முத்துவேலு, மாணிக்கம் மற்றும் நாகரெத்தினம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், சத்தியபாலன் (கனடா), சாந்தினி (சுவிஸ்), லிங்கேஸ்வரன் (கனடா), ராஜேஸ்வரி (கனடா), துளசிதாசன் (கனடா), தர்ஷினி (திருகோணமலை), குகதாசன் (யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், இந்திராகாந்தி, நல்லையா, அனுஷா, உருத்திரநாதன், கார்த்திகா, யோகன், சித்திரா ஆகியோரின் பாசமிகு மாமியாரும், மிதுலன், ஸ்ரீகணன், தர்வி, அஸ்விக, அஸ்மிக, யதுஷாயின், உருத்ஷாயிகா, அபிராம், டெய்சாயினி, டிலுசிக்கா, தரணியா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.04.2014) வியாழக்கிழமை மு.ப.10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நயினாதீவு சல்லிபரவை இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.
075 415 4633

5ஆம் வட்டாரம்,
நயினாதீவு.
(33498)(12)(3.6)

## 76 ஆவது குருபூசை தினம்

ஈழத்துச் சித்தர்கள் வரிசையில் இடம்பிடித்த ஆனந்த சடாச்சர குருவின் (சரவணச் சாமியார்) 76 ஆம் குருபூசை, நாளை 11 ஆம் திகதி வெள்ளிக்கிழமை குப்பிழான் சிவகாமி அம்மன் ஆலயத்தில் (சமாதி கோயில்) விமரிசையாகக் கொண்டாடப்படவுள்ளது. அன்று காலை திருவாசக முற்றோதலும், மதியம் அன்னதானமும் இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (க)

## தெய்வீக உரை

சுழிபுரம் வழக்கம்பரை முத்துமாரி அம்பாள் ஆலயத்தில் தெய்வீக உரையொன்று இடம்பெறவுள்ளது. நாளை மறுதினம் 12 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 6 மணியளவில் செஞ்சொற் செல்வன் ஆறு.திருமுருகன் 'அம்பிகையின் அருள் கடாட்சம்' என்ற தலைப்பில் உரையாற்றுவார். முறிவுநோய் மருத்துவ நிபுணர் உமாபதியும் இங்கு உரையாற்றவுள்ளார். அன்றைய தினம் மேற்படி ஆலயத்தில் பங்குனி மாத பூரத்திருவிழா இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-28)

## யோகாசன தியான வகுப்புக்கள்

யாழ்ப்பாணம், ஏப். 10
கந்தர்மடம் குமாரசாமி வீதியில் அமைந்துள்ள வேதாந்த மடத்தில் நாளை 11 ஆம் திகதி வெள்ளிக்கிழமை யோகாசன தியான வகுப்புகள் ஆரம்பமாகவுள்ளன.

இந்த வகுப்புக்கள் தினமும் காலை 6.15 மணியளவில் ஆரம்பமாகி 7.15 மணியளவில் நிறைவுபெறும். இந்தப் பயிற்சி வகுப்பில் உடல் தளர்வுக்கான யோகக் கிரியா, மூச்சுப் பயிற்சி, ஆசனங்கள், தியானம்போன்ற பயிற்சிகள் வழங்கப்படும். ஆர்வலர்களை இதில் கலந்து பயன் பெற்றுக் கொள்ளுமாறு வேதாந்த மடத்தினர் அறிவித்துள்ளனர். (க)

## ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் நன்றி நவிலலும்



11.03.2014 செவ்வாய்க்கிழமை இறைபதமடைந்த எமது அன்புச் செல்வன்

### அமரர் விஸ்வலிங்கம் லோகதாஸ் (லோகா – கண்ணன்)

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் கடந்த (08.04.2014) செவ்வாய்க்கிழமை காலை 9 மணியளவில் சாட்டி புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றன. வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (10.04.2014) வியாழக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் எமது ஒப்பற்ற பாசமிகு பிள்ளையின் இழப்பால் நாம் தவித்து நின்றபோது பல்வேறு வழிகளில் ஆறுதல் கூறி உதவிகள் புரிந்த பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள், வேலணைப் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், கொக்குவில் இந்துக்கல்லூரி கல்வி சமூகத்தினர், இறுதிச் சடங்கில் கலந்துகொண்டவர்களுக்கும் அனுதாபச்செய்திகளைத் தொலைபேசி மூலம் தெரி வித்தவர்களுக்கும், குறிப்பாக இறுதி ஊர்வலத்தில் பங்கேற்றவர்களுக்கும், உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது உளமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

G.S.லேன்,
உயரப்புலம்.
(சி.13180)(45.6.3)
சி.விஸ்வலிங்கம்
குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி



எமது சக ஆசிரியை
திருமதி தனுஜா பாலமுரளியின்
பாசமிகு மாமன்
**சிதம்பரம் தங்கவேலாயுதம்**
அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள், நலன்புரி கழகம்,
யா/கனகரத்தினம் ம.ம.வி
(33493)
(12.3.6)

## மரண அறிவித்தல்

### திருமதி றெஜீனா செல்லத்துரை



கோப்பாய் தெற்கு, மாதா கோயிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி றெஜீனா செல்லத்துரை 07.04.2014 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சாமுவேல் - மரியம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான யோன்சின்னட்டி - அன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், J.S. செல்லத்துரையின் (ஓய்வுபெற்ற சிறைச்சாலை மேற்பார்வையாளர்) அன்பு மனைவியும், யோண்சன் (லண்டன்), அமலா, தயா (பிரான்ஸ்), மனோ, மோகன் (லண்டன்), சென்யோன் ஆகியோரின் அன்புத் தாயும், அதிசயம், ஞானமணி, திரேஸ் நவமணி (ஜேர்மனி), றொபேட் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரியும், மானெல் சூசைராஜ், ஜெயரட்ணம், யோகம்,தேவி, சுதா ஆகியோரின் அன்பு மாமியும், சின்னமணி, நாகராசா, இருதயராசா, றெபேக்கா ஆகியோரின் அன்பு மைத்துனியும், காலஞ்சென்றவர்களான சாமுவேல் அல்பிறேட், கென்றி, செல்வராணி மற்றும் யேசுராசா, ராசபூமலர் ஆகியோரின் மைத்துனியும், ஜொனி (லண்டன்), ஜெரின், றோயல், டியூக், றொஸ்னி, ஜென்சன், ஜெறோன், ஜென்சி (பிரான்ஸ்), தனுஷன், சாந்தன், ஸ்றெலா, யோவேல், ஏசாயா, சலோமி (லண்டன்), கிஷானி, கிஷாந், டினுஜா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (11.04.2014) வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் கோப்பாய் மரியன்னை தேவாலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு மரியன்னை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் : குடும்பத்தினர்.
T.P: 077 509 0903

மாதாகோயிலடி,
கோப்பாய் தெற்கு, கோப்பாய்.
(33494)(46.3.6)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் விருந்துபசார அழைப்பும்

### திருமதி நாகேஸ்வரி கந்தையா



தோற்றம்
08.06.1934

மறைவு
11.03.2014

எத்தனை நாள்கள் சென்றாலும்
உங்கள் நினைவலைகள் எம்
மனதை விட்டு அகலவில்லை
உங்களை அன்புடன்
நினைவு கூருகின்றோம்.

கடந்த 11.03.2014 கனடாவில் காலமான அன்புத் தாயார் திருமதி நாகேஸ்வரி கந்தையா அவர்களின் 31ஆம் நாள் நினைவு இன்று (10.04.2014) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் தாங்களும் வருகைதந்து, காலை 09.00 மணிக்கு அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குடும்பத்தினர்
க.சிறிவிக்கினேஸ்வரராசா,
கிராம உத்தியோகத்தர், J/290, J/313

தனங்களப்பு,
சாவகச்சேரி.
(33477)(62)(3.6)

## 100ஆவது பிறந்தநாள் நினைவுகளுடன்

19ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 10.04.1914
மறைவு 06.12.1995

அமரர் மயில்வாகனம் தனராஜா
(ஓய்வுபெற்ற நீர்ப்பாசனத் திணைக்கள ஓவசியர்)

26ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 03.01.1918
மறைவு 03.12.1988

திருமதி
சிவஞானமணி தனராஜா

அன்புள்ள பப்பா, அம்மாவே,
எம்மைப் பாசத்துடனும், அன்புடனும் அரவணைத்து எம்மைவிட்டுச் சென்று
ஆண்டுகள் பல சென்றாலும் ஆறவில்லை எம்துயரம்
எம் உயிர் உள்ளவரை என்றும் உங்கள் நினைவில்...

52, விதானையார் வீதி,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.
(33497)(7.6.3)

# 7 ஆவது வாரப் பரிசு மழையில் நனைந்த வெற்றியாளர்கள்



ஏழாவது பரிசுமழையின் போது எம்.சி.எஸ்.ஐ.ரி. கம்பஸ் நிறுவன சிஸ்ரம் எஞ்சினியர் எஸ்.சிவாஸ்கரன் மற்றும் உதயன் பத்திரிகை நிறுவன அதிகாரிகளிடம் இருந்து ச.சிவபாலன், க.ஆனந்தி, செ.ஜோகபாலன், யோ.சிவகௌரி, ச.உதயகுமாரி, சி.வினோபவன், பே.கபில்ஜா, கி.இரவீந்திரன், த.கஜன், தா.புவிராசன், கோ.றஜீனா, சு.கவிந்தினி, ம.மேகனா, த.அபிஷேக், லோ.ஆரூஷன், வீ.வாசவி, அ.நளாயினி, க.சுந்தரேஸ்வரன், பரிசுகளைப் பெற்றுக் கொண்டனர்.

யாழ்ப்பாணம்,ஏப்.10
சூரியகாந்தியின் கொண்டாடுங்கள் குதூகலியுங்கள் பரிசு மழையில் 30.03.2014 ஆம் திகதிக்குரிய வெற்றியாளர்களுக்கான பரிசுக்கூப்பன்கள் வழங்கும் நிகழ்வு நேற்று உதயன் பணிமனையில் நடைபெற்றது.

மூத்த உதவி ஆசிரியர் க.இராஜேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் 50 வெற்றியாளர்களுக்கான பரிசுக் கூப்பன்கள் வழங்கப்பட்டன.

அவர்களுக்கான பரிசுக் கூப்பன்களின் அடிப்படையில் யாழ்ப்பாணம் எம்.சி.எஸ். ஐ.ரி கம்பஸ் தலா 10,000 ரூபா பெறுமதியான பத்து பரிசுக் கூப்பன்களையும், யாழ்ப்பாணம் கிறீன் கிறாஸ் ஹோட்டல் 7,500ரூபா பெறுமதியான ஒரு பரிசுக் கூப்பனையும், யாழ்ப்பாணம் ஜேர்மன் இன்சிரியூட் தலா 5,000 ரூபா பெறுமதியான ஐந்து பரிசில் கூப்பன்களையும், ஈ.கொம் கொம்பியூட்டர் ரெயினிங் சென்ரர் தலா 3,500 ரூபா பெறுமதியான பத்து பரிசுக் கூப்பன்களையும், சுன்னாகம் நளின் இன்போமேஷன் தலா 500 ரூபா பெறுமதியான இரண்டு பரிசுக் கூப்பன்களையும், சுன்னாகம் அபி பேபி மாட்ஸ் தலா 500 ரூபா பெறுமதியான ஐந்து பரிசுக்கூப்பன்களையும், யாழ்ப்பாணம் வணிகர் சேர் ஜிகல்ஸ் தலா 500 ரூபா பெறுமதியான இரண்டு பரிசுக் கூப்பன்களையும், நெல்லியடி கோகில்ஸ் பேபி நீட்ஸ் தலா 500 ரூபா பெறுமதியான இரண்டு பரிசுக்கூப்பன்களையும், பளை மோகன் ஸ்ரோர்ஸ் தலா 200 ரூபா பெறுமதியான மூன்று பரிசுக் கூப்பன்களையும், புதுக்குடியிருப்பு ஜெயா புத்தகசாலை தலா 200 ரூபா பெறுமதியான ஐந்து பரிசுக் கூப்பன்களையும், முல்லைத்தீவு அறிவொளி புத்தகசாலை தலா 200 ரூபா பெறுமதியான ஐந்து பரிசுக்கூப்பன்களையும் வழங்கியிருந்தன.

வழங்கப்பட்ட இந்தப் பரிசுக்கூப்பன்களைப் பயன்படுத்தி கூப்பனில் குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனங்களில் பொருள்களைக் கொள்வனவு செய்ய முடியும் என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (வ-21)

# கூட்டமைப்பின் நகர்வை பொலிஸார் விசாரணை

## புலனாய்வுத் தகவல்களை அடுத்து

யாழ்ப்பாணம், ஏப். 10
முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள பொது அமைப்புகளைத் தமது கட்டுப்பாட்டில் கொண்டு வரும் நகர்வுகளில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஈடுபட்டுள்ளதாக கிடைத்த புலனாய்வுத் தகவல்களை அடுத்து, பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

**முல்லைத்தீவு கடற்றொழிலாளர் சங்கத்தை கூட்டமைப்பு ஏற்கெனவே தமது கட்டுப்பாட்டில் கொண்டு வந்துள்ளதாக புலனாய்வுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.**

முல்லைத்தீவு கடற்றொழிலாளர் சங்கத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏற்கெனவே தமது கட்டுப்பாட்டில் கொண்டு வந்துள்ளதாக புலனாய்வுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த நிலையில், தனியார் பஸ் உரிமையாளர் சங்கம் மற்றும் ஏனைய பொது அமைப்புகளினதும் அதிகாரத்தை கைப்பற்றும்படி தமது ஆதரவாளர்களைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைமை கேட்டுக் கொண்டுள்ளது.

அதையடுத்து, புலனாய்வு அதிகாரிகள் அங்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக, சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் ஆங்கில ஊடகத்துக்கு தெரிவித்துள்ளார்.

ஈழ அரசை அமைக்கும் கனவை நிறைவேற்றுவதற்கு தற்போது செயலற்றுள்ள விடுதலைப் புலிகள் இயக்கத்தைப் புதுப்பிப்பது அல்லது அது போன்றதொரு தீவிரவாத அமைப்பை உருவாக்குவதா தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் நோக்கம் என்று பார்க்க வேண்டியுள்ளதாகவும் குறித்த அதிகாரி மேலும் தெரிவித்துள்ளதாகத் தெரிய வருகின்றது. (ச-5)

# சமாதான விருது வழங்கும் நிகழ்வு இன்று

கொழும்பு,ஏப்.10
உலக சமாதான அமைப்பின் தூதர்கள் நியமனமும் சமாதான விருது வழங்கும் வைபவமும் இன்று வியாழக்கிழமை மாலை 4.30 மணிக்கு கொழும்பு, கலதாரி ஹோட்டலில் நடைபெறவுள்ளது.

உலக சமாதான அமைப்பின் தலைவர் ஆபித் அலி ஆபித் தலைமையில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வில் அரச சார்பில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார்.

இந்த நிகழ்வில் நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம் கலந்து கொண்டு சிறப்புரையை நிகழ்த்தவுள்ளார். (ச)



சூரியஒளியால் சித்திரம் வரையும் ஒன்பது வயதுச் சிறுவன்

# சூரிய ஒளியால் சித்திரம் வரைவதை நிரூபித்து காட்டிய 9 வயது சிறுவன்

அம்பாறை,ஏப்.10
அம்பாறை மாவட்டத்திலுள்ள பின்தங்கிய தமிழ்க் கிராமமான வளத்தாப்பிட்டி கிராமத்தைச் சேர்ந்த 9 வயதான ரகுநாதன் கிசோத் என்ற சிறுவன் சூரிய ஒளியால் சித்திரம் வரைய முடியும் என்று நிரூபித்துக் காட்டியுள்ளான்.

3 மாத காலம் முயற்சி செய்து சூரிய ஒளியை அசையக் கூடிய கைவில்லையைப் பயன்படுத்தி ஒளியை ஒடுக்கி அவ் ஒளியால் சித்திரம் வரைந்திருக்கின்றான். கடதாசியில் எழுதிப் பார்த்து, றெஜிபோமில், இறப்பரில் வரைந்து பார்த்திருக்கிறான்.

அதன் பின்பு தன்னுடைய செருப்பிலும் பெயர் பொறித்துப் பார்த்திருக்கிறான். இறுதியாக கார்பெட் துணியில் எழுதி வரைந்து பார்த்த போதே அது திருப்தி அளிப்பதாக அமைந்தது. அதன் பின்னரே இதனை பலருக்கும் தெரியப்படுத்தியுள்ளான்.

இதற்காக தனது தந்தையின் உதவியுடன் ஓர் உபகரணத்தைத் தயாரித்து அதனை தற்சமயம் பயன்படுத்தி வருகிறான்.

குறித்த சிறுவனின் தந்தை ரகுநாதன் வெல்டிங் தொழில் செய்து வருபவராவார். பல வசதியீனங்களுக்கு மத்தியில் மிகவும் பின்தங்கிய பிரதேசத்தில் வாழும் இந்த சிறுவனின் முயற்சியை அனைவரும் பாராட்டுகின்றனர். (ச-21)

## இந்த வார இதழில்...



'சாயியே சரணம்'
(பரவசமூட்டும் ஆன்மீகத் தொடர்)

# 'சுடர்ஒளி'

### நிராகரிக்கப்பட்ட தரகர்கள்

.........ஜெனிவாவில் இலங்கையின் போர்க்குற்றங்கள் மனித உரிமை மீறல்கள் என்பன தொடர்பான தீர்மானம் கொண்டுவரப்பட்ட வேளையில் அதை ஏகாதிபத்தியங்களின் இலங்கை மீதான மேலாதிக்க முனைப்பு என வர்ணித்து சிங்கள மக்களின் தேசபக்தி ஆளும் வர்க்கத்தால் கட்டியெழுப்பப்பட்டது. சிங்கள மக்களும் அதன் பின்னால் இழுபட்டனர். தங்களையொத்த சகோதர இனத்துக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு ......

- ❑ உங்களுக்குத் தெரியுமா சிதம்பர இரகசியம்
- ❑ வேகமாகப் பரவும் மார்பகச் சூட்டுக் கொடுமை

### யமனுக்கே சவாலா?

.... நாரதருக்கு இப்போதுதான் நிலைமை புரிந்தது. யமலோகக் கணக்குவழக்குகள் எல்லாம் கணனிமயப்படுத்தப்பட்டுவிட்டாலும் இறந்தவர்களின் ஆன்மாக்களைக் கண்டுபிடிக்கும் வசதி இருக்கவில்லை. ஏனென்றால் எல்லா ஆன்மாக்களும் இறப்பின் பின் அவரவர் பாவபுண்ணியத்துக்கேற்ற தண்டனையை அனுபவித்துவிட்டு....






சுதந்திர வேட்கை (தொடர்)

## ஆவணங்கள் தொடர்பான கருத்தரங்கு

முல்லைத்தீவு, ஏப்.10

யு.என்.எச்.சி.ஆர் நிறுவனத்தின் அனுசரணையுடன் ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்தால் மேற்கொள்ளப்படும் குடியியல் ஆவணங்கள் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கு கற்சிலைமடு அ.த.க. பாடசாலையில் இன்று வியாழக்கிழமை 10 ஆம் திகதி நடைபெறவுள்ளதாக பிரதேச செயலகம் அறிவித்துள்ளது.

பிறப்புச்சான்றிதழ், இறப்புச்சான்றிதழ், விவாகச் சான்றிதழ், பிறப்புச் சான்றிதழில் பெயர் மாற்றம், தவறுகள் திருத்தம் தொடர்பான பிரச்சினைகள், காலங்கடந்த பிறப்பு, இறப்பு பதிவு, உத்தேச வயதுச் சான்றிதழ் தொடர்பாக இங்கு ஆராயப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது. (க-500)

## புலனின்பம் துன்பியலில் ஆரம்பம்

புலனின்பங்களது தோற்றப் (ஆரம்பப்) பகுதியை நாம் ஆராய்ந்து பார்த்தால் அனைத்தும் துன்பியலில் தான் ஆரம்பமாகிறது என்பது தெளிவாகும். புலன்களிலிருந்து பெறப்படும் இன்பம் நிலைத்து இருக்காது. சொற்ப வேளைக்குரியது. இறுதியில் துன்பத்தையே விளைவிக்கிறது.

ஆசைகள் ஒரு நொடிப் பொழுது தோன்றி அடுத்த நொடிப் பொழுதில் அடங்கிவிடும். புலினின்பங்களது தோன்றி மறையும் நிலையில்லாத தன்மைபற்றியும், போலியான இயல்பு பற்றியும் ஊன்றிச் சிந்தித்தால் நாம் பிரித்தறிதலை வளர்க்கலாம்.

பற்றற்ற நிலையையும் வளர்க்கலாம். இதனால் புலன்களைக் கட்டுப்பாட்டுக்குள் நிறுத்தலாம்.

மேலும் எமது புலன்களைச் சுறுசுறுப்பான நிலையில் வைத்து சரியான வழியில் செல்ல வகுத்தோமேயானால் அவற்றினால் எமக்கு எதுவித தீமையும் நேராது. அல்லாவிடில் எமது புலன்களுக்கு நாம் அடிமையாவோம்.



நன்றி: தெய்வீகம் மலரும் பொழுது

சாயி சிந்தனை

# போலியான தகவல்களை வழங்கி வருகிறது அரசு

## ஜே.வி.பி. குற்றச்சாட்டு

கொழும்பு,ஏப்.10

அரசு வரிக்கு மேல் வரி விதிக்கின்றது. போலியான புள்ளி விவரத் தகவல்களையே அரசு வெளிப்படுத்தி வருகின்றது என்று ஜே.வி.பி.யின் பரப்புரைச் செயலர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வறியவர்களுக்கும் செல்வந்தர்களுக்கும் இடையிலான இடைவெளி உயர்வடைந் துள்ளது.

அரசு வரிக்கு மேல் வரி விதிக்கின்றது. போலியான புள்ளி விவரத் தகவல்களையே அரசு வெளிப்படுத்தி வருகின்றது. பணவீக்கம் உயர்வடைந்துள்ளதாக அறிவித்த போதிலும், பொருள்களின் விலைகள் வானளவு உயர்வடைந்துள்ளன.

பொருளாதார வளர்ச்சி ஏற்பட்டுள்ளதாக அரசு அறிவித்துள்ளது. எனினும், இவை நம்பக்கூடிய வகையில் உள்ளதாகத் தெரியவில்லை. தனிநபர் வருமானம் இரண்டு டொலர்களுக்கும் குறைந்தவர்களின் எண்ணிக்கை மொத்த சனத்தொகையின் 42 வீதமாகும். நாளுக்கு நாள் இல்லாதவர்களுக்கும் இருப்பவர்களுக்கும் இடையிலான ஏற்றத் தாழ்வு அதிகரிக்கின்றது- என்றார். (ச)

**கடை வாடகைக்கு**

யாழ்ப்பாணம், மானிப்பாய் வீதி 144(372) எனும் முகவரியில் உள்ள கடை வாடகைக்கு விடப்படும்.

தொ.பே: 077 2915826 (33500) (7.6.3)

**இறைச்சிக் கோழிக்குஞ்சு விற்பனைக்கு**

முதல் தரமான BAIHARA இறைச்சிக் கோழிக்குஞ்சு விற்பனைக்குண்டு.
ஒரு குஞ்சின் விலை ரூபா 95/=
பிரதி சனிக்கிழமை தோறும் ஓடர்களுக்குப் பெற்றுக்கொள்ளலாம்.

(33444) (5.6.3) தொடர்பு: ரவி, நெல்லியடி
தொ.பே.: 077 995 9382 / 077 906 9298

தமிழ் புத்தாண்டு
**சிறப்பு மலிவு விற்பனை**



அலையென திரண்டுவந்து அள்ளிச் செல்ல வாருங்கள்



ஜெயசாஜி
114, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
Phone : 021 221 9393
09.04.2014 தொடக்கம் 13.04.2014 வரை மட்டுமே...
காலை 9.00 மணி முதல் இரவு 9.00 மணி வரை
(33479) (7.6.3)

**INVITATION FOR BIDS**
**TEACHING HOSPITAL, JAFFNA**

The Chairman of the Regional Procurement Committee, Teaching Hospital, Jaffna, invite sealed bids from eligible and qualified bidders for the construction and renovation works in the schedule below.

| Work/Service Details | Non-refundable Deposit (Rs.) (Bid fee) | Security Deposit (Rs.) | Validity Period of Bid Security (Days) | Approximate Direct cost of the work (Rs. In million) | Minimum ICTAD Grade |
|---|---|---|---|---|---|
| Demolition of the Old Kitchen Building | 500.00 | 20,000.00 | 90 | - | C10 |
| Renovation of Ward 26 | 500.00 | 11,000.00 | 90 | 0.54 | C10 |
| Renovation of NTS Students Hostel Toilets | 500.00 | 60,000.00 | 90 | 2.95 | C08 |
| Renovation of NTS Principal Office | 500.00 | 34,000.00 | 90 | 1.7 | C09 |
| Construction of Health Assistant Changing Room | 500.00 | 22,000.00 | 90 | 1.1 | C09 |

1. Bidding will be conducted through National Competitive Bidding Procedure
2. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall be registered in the field of Building Construction for grade given in the schedule or above with the institute for Construction, Training and Development (ICTAD).
3. Interested bidders can inspect bid forms at the Residence Engineer's Office, CECB, Jaffna during office hours, if necessary.
4. A Complete set of Bidding Documents in English Language may be purchased by Interested Bidders from Director, Teaching Hospital, Jaffna upon producing valid registration book and receipt for the cash payment for the bid fee from 11.04.2014 until at 4.00 pm on 22.04.2014. The payment shall be made to the Shroff's Office, Teaching Hospital, Jaffna.
5. Sealed bids shall be delivered to the address below at before 10.00 hrs on 23.04.2014, late bides will be rejected. Bids will be open at 10.15 hrs at Director's Office, Teaching Hospital, Jaffna soon after closing in the presence of bidders' representatives who choose to attend.

**Director (Chairman),**
**Regional Procurement Committee,**
**Teaching Hospital, Jaffna.**
**10/04/2014.**

(C/13464)(5.6.3)

**கொக்குவில் இந்துக் கல்லூரியிலுள்ள தேவராஜா இந்திராணி பெண்கள் விளையாட்டு இல்லத்திற்கும், சதுக்கத்துக்கும் பெண் பராமரிப்பாளர்கள்(Caretaker) தேவை**

01. உள்ளக விளையாட்டு இல்லம் பராமரிப்பாளர்- பெண் (35 வயதுக்கு மேல்)
வேலை நேரம்- முழுநேரம் (காலை 7.00- மாலை 3.00)
தகைமை: க.பொ.த. சாதாரணதரம் (உள்ளக விளையாட்டில் அறிவுள்ளவர்கள் விரும்பத்தக்கது)

02. வெளிக்கள வளாக பராமரிப்பாளர்- பெண்
வேலை நேரம்: காலை 7.00-10.00 வரை (கூட்டுதல், பூக்கன்று பராமரித்தல், நீருற்றுதல், புல்வெட்டுதல் ஆகியன)
தகைமை: தரம் 5

சுயவிவரப்படிவத்தினை 16.04.2014 இற்கு முன் பாடசாலைக் காரியாலயத்தில் ஒப்படைக்கவும்.

சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

(33495)(3.6.4) அதிபர்.

# புனரமைப்பு இடம்பெறவுள்ள வீதிகளின் விவரங்கள் தெரிவிப்பு

*நல்லூர் பிரதேச சபைத் தவிசாளர் வெளியிட்டார்*

நல்லூர் பிரதேச சபையினால் நடப்பு ஆண்டுக் கான வரவு-செலவுத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டு இரண்டாம் கட்டமாக திருத்த வேலைகளுக்காக கேள்விகள் கோரப்படவுள்ள வீதிகள் தொடர்பாகப் பிரதேச சபையின் தவி சாளர் விவரங்களை வெளியிட்டுள்ளார்.

கோண்டாவில் உப்புமடம் இருபாலை (கே.கே. எஸ்.வீதி) 1ஆம் ஒழுங்கை, புதுவீதி ஆறுகால் மடம் (சிவம் கடை லேன்), கேணியடி வலது பக்கம் 1ஆம் லேன் கொக்குவில், நந்தாவில் ஒழுங்கை வலதுபக்கம் 1,2 ஆவது ஒழுங்கை, வாகீஸ்வரி சனசமூக நிலைய வீதி, தில்லைக்காளி வீதி கோண்டாவில் (அன்னாங்கை). கோண் டாவில் மேற்கு கலட்டி ஒழுங்கை (1,2). கோண் டாவில் மேற்கு காளி கோயில் முன் ஒழுங்கை (1,2). ஆடியபாதம் வீதி கொக்குவில் மேற்கு 4 ஆம் லேன், கே.கே.எஸ். வீதி சம்பியன் வீதி எதிர் வீதி. செம்பாட்டுலேன் கை ஒழுங்கை. சம்பியன் லேன் கை ஒழுங்கை, கொக்கு வில் கிழக்கு காளிகோயில் வீதி - 5ஆம் குறுக்கு ஒழுங்கை- ஆறுமுகம் வீதி கல்வியங்காடு. முனீஸ்வரன் வீதி -கோண்டாவில், சைவப் பாடசாலை வீதி - கோண் டாவில், சைவப்பாடசாலை வீதி 2 ஆம் குறுக்கு வீதி -கோண்டாவில். பொன்னையா வீதி -கொக்கு வில் மேற்கு. நாவலடி வீதி -அரியாலை, பதிவாளர் வீதி - திருநெல்வேலி, ஆலடி செபஸ் தியார் -வாமஸ் வீதி கோண்டாவில். வராகி அம் மன் வீதி - கொக்கு வில் (அடைக்கல நாயகி வீதி), சம்பியன் வீதி - கொக் குவில், மில் லேன் - கொக்கு வில், கொக்குவில் இந்து மைதான வீதி, கலை மகள் வீதி- விநாயகர் வீதி, கல்வியங்காடு, எம்.எஸ்.லேன் (குமரகோட்டம் குறுக்கு வீதி)-கோண்டாவில், கட்டையாலடி வீதி - திருச்செல் வம் வீதி என்பவையே குறிப்பிட்ட வீதிகளாகும். (க)

## மஹாபொல புலமைப் பரிசில்

கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வியாபார அமைச் சின் ஏற்பாட்டில் 2011/2012 ஆம் கல்வியாண்டு பல்கலைக்கழக அனுமதி பெற்ற மாணவர்களுக் கான மஹாபொல புலமைப் பரிசில் வழங்கும் நிகழ்வு நாளை மறுதினம் 12 ஆம் திகதி முற்பகல் 9 மணிக்கு யாழ்.மாவட்ட செயலகக் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் புலமைப் பரிசு பெறும் மாணவர்கள் மு.ப. 8.15 மணிக்கு மாவட்டச் செயலகத்துக்கு வருகை தர வேண்டுமெனவும் அவர்களுக்கான அழைப்புக் கடிதங்கள் ஏற்கெனவே அனுப்பி வைக்கப்பட் டுள்ளன எனவும் யாழ்.மாவட்ட அரச அதிபர் தெரிவித்துள்ளார். (க)

## உதவிக் கல்விப் பணிப்பாளர் நியமனம்

தென்மராட்சி கல்வி வலயத்தின் தமிழ்ப் பாட உத விக் கல்விப் பணிப்பாளராக திருமதி கமலாம் பிகை ஶ்ரீதரன் மாகாண கல்வி அமைச்சினால் நியமிக்கப்பட்டுள்ளார். முன்னர் இந்தப் பதவியில் கடமையாற்றிய க.சின்னத்துரை ஓய்வு பெற் றதை அடுத்து ஏற்பட்ட வெற்றிடத்துக்கு தகைமை அடிப்படையில் புதிய உதவிக் கல்விப் பணிப் பாளர் நியமிக்கப்பட்டுள்ளார். (க-9)

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலைப் பணியாளர் திருமதி சித்திரா குகதாசன் அவர்களின் பாசமிகு மாமியார்


**பொன்னம்மா தம்பிராசா**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலைச் சமூகம் (33499)(7.6.3)

யா/கோக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை, கொக்குவில்.

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் முன்னாள் அபிவிருத்தி சங்கச் செயலாளர் Dr.க.ஶ்ரீதரன் அவர்களின் மாமனார்

**நாகலிங்கம் அருளானந்தம்**

அவர்கள் 08.04.2014 செவ்வாய்க் கிழமை இறைபதம் எய்திய செய்தி கேட்டு துயருற்றிருக்கும் அவர் களின் குடும்பத்தாரின் துயரில் பங்கு கொள்வதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறை வனைப் பிரார்த்திக்கின்றோம்.

*சாந்தி! சாந்தி! சாந்தி!* (சி/13462)(7.6.3)

யா/யாழ் இந்து ஆரம்ப பாடசாலை சமூகம்

## மரண அறிவித்தல்

### நாகநாதி பசுபதிப்பிள்ளை



புங்குடுதீவு 12ஆம் வட்டாரத் தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிட மாகவும் கொண்ட நாகநாதி பசுபதிப் பிள்ளை 08.04.2014 செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகநாதி-சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ் சென்றவர்களான சின்னத்தம்பி- வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற யோகம்மாவின் அன்புக் கணவரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(10.04.2014) வியாழக்கிழமை மு.ப.11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக புங்குடுதீவு மணற் காடு மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

12ஆம் வட்டாரம், புங்குடுதீவு. (சி/13465)(5.6.3) தகவல்: குடும்பத்தினர்.

## பேச்சுத்திறன் காணும் வைபவம்

யாழ். பாலர் கல்விக் கழக நிர்வாகத்திலுள்ள 10 ஞானக்குழந்தை இல்லப் பாடசாலைகள் இணைந்து வழங்கும் பேச்சுத் திறன் காணும் வைபவம் நாளை 11 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இடம்பெறவுள்ளது. காலை 8.30 மணியளவில் நாச்சிமார் கோயிலடியில் அமைந்துள்ள சரஸ்வதி மண்டபத்தில் யாழ்ப்பாணம் பாலர் கல்விக் கழகத்தின் தலைவர் எஸ்.பி.காசிநாதன் தலைமையில் நிகழ்வுகள் இடம்பெறும்.

இதில் முதன்மை விருந்தினராக பிரம்மஶ்ரீ ப.சிவானந்தசர்மா (கோப்பாய் சிவம்) வும், சிறப்பு விருந்தினராக கோட்டக் கல்வி அதிகாரி எஸ்.சண் முககுமாரும் கலந்து கொள்வார். (க)

## வட்டக்கச்சி ம.வியில் முத்தமிழ் விழா

கிளிநொச்சி மாவட்டம் வட்டக்கச்சி மகா வித் தியாலயத்தின் முத் தமிழ் விழா நேற்று முன்தினம் இடம் பெற் றது.

பாடசாலைஅதிபர்கி.மனு வல் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ் வில் முதன்மை விருந் தினராக கிளிநொச்சி வலய தமிழ் பாடத் துக்கான உதவிக் கல் விப் பணிப்பாளர் திரு மதி பிறேமா மதுரநாய கம் கலந்து கொண் டார். (க-18)

## மரண அறிவித்தல்



### திருமதி பரமேஸ்வரி நாகலிங்கம் (மணியக்கா)

புன்னாலைக்கட்டுவன் வடக்கினைப் பிறப்பிடமாகவும், நிரந்தர வதிவிட மாகவும் கொண்ட திருமதி பரமேஸ்வரி நாகலிங்கம் (மணியக்கா) நேற்று (09.04.2014) புதன்கிழமை காலமாகி விட்டார்.

இறுதிக்கிரியைகள் பற்றிய விவரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வசந்தி இல்லம்,
புன்னாலைக்கட்டுவன். (46643)(12)(3.6)

தகவல்: குடும்பத்தினர். (வசந்தி சுசிலா)

## மரண அறிவித்தல்கள்

### வேலுப்பிள்ளை வீரபத்திரன்



மலேசியாவைப் பிறப்பிடமாகவும், வட்டுக்கோட் டையை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை வீரபத்திரன் நேற்றுமுன்தினம் (08.04.2014) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப் பிள்ளை - சிவகாமிப்பிள்ளை தம்பதியரின் புதல்வனும், சந்தானலட்சுமியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற வர்களான கந்தையா - பாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும், சுகந்தினியின் (Swiss) பாசமிகு தந்தையும், சசிந்தரனின் (Swiss) பாசமிகு மாமனும், லேனுசாந்தின் (Swiss) பாசமிகு பேரனும், காலஞ் சென்ற மகேஸ்வரன் மற்றும் குமாரசிங்கம், தர்மலிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.04.2014) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் காலை 7 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் இறுதிக்கிரியைக்காக வழுக்கையாறு இந்து மயானத் துக்கு எடுத்துச்செல்லப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பங்குரு வீதி, வட்டுக்கோட்டை. (46652)(45.3.6)

தகவல்: வீ.சந்தானலட்சுமி (மனைவி)

### திருமதி இராஜேஸ்வரி திருநாவுக்கரசு



சிங்கப்பூரைப் பிறப்பிடமாகவும், இளவாலை, 8ஆம் கட்டை, மல்லாகத்தை வதிவிடமாகவும் கொண்ட திருமதி இராஜேஸ்வரி திருநாவுக்கரசு 08.04.2014 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திருநாவுக்கரசின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற கிருபாகரன் மற்றும் நாகேஸ்வரன் (லண்டன்), மகேஸ்வரிதேவி, கமலாதேவி, சந்திராதேவி, சிவசுந்தரம், உருக்குமணி தேவி ஆகியோரின் அன்புத் தாயாரும், சரோஜினி தேவி, சண்முகமலர், கணேசலிங்கம், அருளாநந்த சிவம், காலஞ்சென்ற திருநாவுக்கரசு மற்றும் ஜெய ராணி, திருஞானசம்பந்தர் ஆகியோரின் பாசமிகு மாமியாரும், மயூரன் - நாகநந்தினி, ஜெயக்குமார் - சிவகாமி, ரமேஷ் - சிவர்ஜினி, பிரகதீஸ் - சைலஜா, சசிகேஷ், அஜெந்தன் - நாகரஞ்சனா, சுசித்திரா - முருகதாஸ், நிரோசன், திவாகரன் - பிரமிளா, உவர்ணா, பாரதி - ரெஜினோல்ட், சஞ்சீவன், சலஜன், யாமினி ஆகியோரின் பேர்த்தியும், சின்மயி, கார்த்திகேயன், கௌசலியா, கணதீபன், பிரியதர்சினி, கானுஜன், மதுசாயினி லக்ஷ்மிகா ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11.04.2014) வெள்ளிக்கிழமை மு.ப.08.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக கட்டுப்பிட்டி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

8ஆம் கட்டை,
மல்லாகம். (46651)(12)(3.6)

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி சிவக்கொழுந்து சண்முகராஜா



கரவெட்டி மேற்கைப் பிறப்பிடமாகவும் யாழ். ஆனைப்பந்தியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவக்கொழுந்து சண்முக ராஜா 09.04.2014 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வல்லி புரம்- பொன்னம்மா தம்பதியரின் மகளும், காலஞ்சென்றவர்களான கந்தையா- இராசம்மா தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற சண்முகராஜாவின் அன்பு மனைவியும் ஜயந்தினி,ஜயதேவ் (பாபு- கனடா) ஆகியோ ரின் அருமைத் தாயும், Lion உலகநாதன் (இலங்கைவங்கி ஓய்வுநிலை செயற்பாட்டு முகாமையாளர், முன்னாள் முகாமையாளர் பாட்லீற் (F)பினான்ஸ்), மாதினி (கனடா) ஆகியோரின் மாமியும்,அநிந்திதா, விநிந்திதா (ஆஸ்திரேலி யா), கௌசிகன் (ஆஸ்திரேலியா), பிரஷாதனா, தயானி(கனடா),ரஜீவன்(கனடா) ஆகியோரின் பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான செல்லமுத்து, இராஜ ரட்ணம், சிவப்பிரகாசம், கனகம்மா, இராஜதுரை ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்றவர்களான பற்குணவதி, சற்குணராஜா ஆகியோரின் மைத்துனி யும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.04.2014) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப.10.30 மணிக்கு கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.40, 4ஆம் ஒழுங்கை,
பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி,யாழ்ப்பாணம். (46640)(5.6.3)

தகவல்:
ச.ஜயதேவ் (மகன்),
க.உலகநாதன் (மருமகன்).

## அறிவித்தல். யாழ் மாநகரசபை

பாசையூர் புனித அந்தோனியார் கிராமிய கடற்றொழில் அமைப்பின் வேண்டுகோளுக்கமைவாக மேற்படி சங்கத்தின் தலைவர் அமரர் மிக்கோர்சிங்கம் தவப்பிரகாசம் அவர்களின் இறுதி நிகழ்வின் போது கௌவர அமைச்சின் பணிப்பிற்கமைய பாசையூர் இறங்குதுறையிலிருந்து பெறப்பட்ட மணலைக்கொண்டு நிரப்பப்பட்ட பிரதேசத்துக்கு **''தவப்பிரகாசம் முற்றம்''** என் பெயர் சூட்ட தீர்மானித்துள்ளதால் இதற்கு பொது மக்களின் கருத்துக்கள் / அபிப்பிராயங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன. இதற்கான பொது மக்களின் கருத்துக்களை / அபிப்பிராயங்களை எதிர்வரும் 18.04.2014 ஆம் திகதிக்கு முன் **முதல்வர், மாநகரசபை, யாழ்ப்பாணம்** என்ற முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

குறித்த காலப்பகுதிக்குள் பொதுமக்களின் அபிப்பிராயம் எதுவும் கிடைக்கப் பெறாதவிடத்து இதனை மக்கள் ஏற்றுக்கொண்டதாகக் கருதப்படும் என்பதனை தெரிவித்துக்கொள்கின்றோம்.

முதல்வர்
யாழ்.மாநகரசபை

## மரண அறிவித்தல்

திருமதி **திருஞானம் கந்தவனம்** (ஓய்வுபெற்ற அதிபர்)



வறுத்தலை விளானைப் பிறப்பிடமாகவும் முத்தட்டுமட வீதி கோண்டாவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி திருஞானம் கந்தவனம் நேற்று 09.04.2014 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அப்பாக்குட்டி (விதானையார்), பிள்ளையம்மா தம்பதியரின் கனிஷ்ட புத்திரியும், காலஞ்சென்ற தம்பிமுத்து சீதேவி (ஏழாலை வடக்கு) தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற கந்தவனத்தின் (ஓய்வுபெற்ற அதிபர்) அன்பு மனைவியும், திருமதி சிவக்கொழுந்து, தம்பிராசா (ஆஸ்திரேலியா), காலஞ்சென்ற திருமதி அற்புதம் செல்வமாணிக்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற சிவப்பிரகாசம் மற்றும் கண்மணி, செல்வரட்ணம் ஆகியோரின் அன்பு மைத்துனியும், திருமதி அமிர்தகௌரி, இரஞ்சன் (பிரான்ஸ்), கண்ணன் (ஆசிரியர்-கொழும்பு), திருமதி அருணா (லண்டன்), திருமதி ஜெயகௌரி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயும், தங்கராசா (ஓய்வூதியர்) விமலாதேவி (பிரான்ஸ்), சுகுணா (ஆசிரியை-கொழும்பு), ராமச்சந்திரன் (லண்டன்), தர்மலிங்கம் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியும், சஞ்சுதன் (லண்டன்), சஞ்சுத்தா, அனித்திரா (பிரான்ஸ்), ஆகாஷ் (பிரான்ஸ்), கிரிசிகேசன் (கொழும்பு), சஜீவ் (கொழும்பு), அருண்றாம் (லண்டன்), அபிராம் (லண்டன்) அபினயா (லண்டன்) கவீன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.04.2014) வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் காரைக்கால் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**வை. தங்கராசா** (மருமகன்).

(சி/13453) (10)


## மாபெரும் மலிவு விற்பனை

ரவுசர் துணி வகைகள், சாறி வகைகள், சிறுவர்களுக்கான ரீ.சேர்ட் வகைகள், பேபி சூட், Cotton ரவல், சாரம்.

காலம் :- 11-04-2014, 12-04-2014, 13-04-2014


இடம் :- 210, K.K.Sவீதி, யாழ்ப்பாணம்.
(திருமுருகன் கொம் நெற்றுக்கு முன்பாக)
கையிருப்புக்கள் உள்ள வரையே
உங்கள் தெரிவுகளுக்கு முந்துங்கள்
(46655)

## திருமண சேவை

பட்டதாரிகள், பொறியியலாளர்கள், மருத்துவர்கள், ஆசிரியர்கள், வங்கியாளர்கள், வர்த்தகர்கள் உட்பட உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்கள் பலருடைய ஜாதகங்கள் எம்மிடம் உண்டு. அத்துடன் சைவ போசன மணமக்களும் உண்டு.

தொடர்பு:
"சிவா சோதிட நிலையம்"
100 அரசடி வீதி, கந்தர்மடம் யாழ்ப்பாணம்.
(யாழ்/இந்து மகளிர் கல்லூரி பின்)
தொ.பே: 077 899 6281
(46656) (10)


## மரண அறிவித்தல்



திருமதி **செல்லப்பாக்கியம் கிருஷ்ணர்**

புலோலி வடக்கைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட திருமதி செல்லப்பாக்கியம் கிருஷ்ணர் நேற்று (09.04.2014) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கிருஷ்ணரின் அன்பு மனைவியும், திருமதி செங்கமலர் பாலேந்திரன் (ஓய்வுநிலை அதிபர், யா/வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி, பருத்தித்துறை), நாகரத்தினம், நகுலாம்பிகை, காலஞ்சென்ற பாலசரஸ்வதி (லண்டன்) மற்றும் இராமச்சந்திரன்(லண்டன்) ஆகியோரின் அன்புத்தாயாரும், பாலேந்திரன் (ஓய்வுநிலை விவசாய ஆராய்ச்சி உத்தியோகத்தர்), துரைராஜா (ரேடியோ மெக்கானிக்), காலஞ்சென்ற அருச்சுணலிங்கம்(லிகிதர்) மற்றும் இராயேஸ்வரன்(லண்டன்), பானுமதி(லண்டன்) ஆகியோரின் மாமியாரும், சுதாரினி(ஆசிரியை, கொழும்பு இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி), சகிலா, பாலமுரளி, பாலகுமரன்(தபாலதிபர், அனலைதீவு), சுதர்சன் (RDC T.O), சுபா, யாழினி, கண்ணன், நிமலன், செந்தூரன், வீணா (லண்டன்), சுந்தரவதனி, சந்திரவதனி, சுந்தர வடிவு, வந்தியதேவன், உதயதேவன், சத்தியதேவன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.04.2014) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பருத்தித்துறை கோரியடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மகள்: திருமதி **செங்கமலர் பாலேந்திரன்.**
T.P:021 226 4226 (33445) (4.3.6)

459, பிரதான வீதி,
புலோலி வடக்கு, பருத்தித்துறை.

### பல்கலை அனுமதிக்கு விண்ணப்பிக்கலாம்

2013 ஆம் ஆண்டு உயர்தரப் பரீட்சையில் சித்தி பெற்றவர்களுக்கானபல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. பல்கலைக்கழக அனு மதிக்கு எதிர்வரும் 20 ஆம் திகதி தொடக்கம் விண்ணப்பிக்க முடியும் என்று பல்கலைக்கழகமானியங்கள் ஆணைக் குழு தெரிவித்துள்ளது.

தாம் விரும்பிய பாடநெறியைத் தெரிவு செய்து பதிவுத் தபாலில் பல்கலைகழக மானியங்கள்ஆணைக் குழுவுக்குத் தமது விண்ணப்பங்களை அனுப்பி வைக்குமாறு ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் ஷானிக்கா ஹிரும்புரேகா குறிப்பிட்டார். (ச)

### அரிசி விலை அதிகரிப்பு?

கொழும்பிலும் நெற் செய்கை மேற்கொள்ளப்படும் பிரதேசங்களிலும் அரிசியின் விலை 10 முதல் 15 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. மரதகாமுல்ல மற்றும் பொலநறுவை ஆகிய பிரதேசங்களிலும் அரிசியின் விலை திடீரென அதிகரிக்கப்பட்டுள்ளது என்று வியாபாரிகள் தெரிவிக்கின்றனர். 65ரூபாவாக இருந்த ஒரு கிலோ நாட்டரிசியின் விலை 80ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது. (ச)


## நாஹாமருத்துவ நிலையம்

* தீராத மூட்டுவாதம், தீவிர கை கால் விறைப்பு, ஆஸ்மா, புரையோடும் புண்கள், இதயநோய் உடனடி நிவாரணம்.
* மாதவிடாய் சார், குழந்தையின்மை சிறப்புச் சிகிச்சை.

T.P: 077 321 2740
வங்கிமுன்லேன், சாந்தாவத்தை, வயிரவர் கோவிலடி (ஜெகபதி வீடு) மானிப்பாய்
(46654) (10)


## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையில் ஆசிரியராகவும், நலன் விரும்பியாகவும் கடமையாற்றிய **திருமதி கீதா ராஜ்குமார்** அவர்களின் அன்புத் தாயார்.

திருமதி **இந்திராணி வசந்தநாதன்**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வ தோடு அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

யா/கொக்குவில் ஸ்தான சி.சி.த.க
பாடசாலைச் சமூகம்

## மரண அறிவித்தல்

செல்வி **மங்கையர்க்கரசி சின்னையா**



சுண்டுக்குளி, காட்டுக்கந்தோர் ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி மங்கையர்க்கரசி சின்னையா 09.04.2014 புதன் கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா-பாக்கியம் தம்பதியரின் சிரேஷ்ட புதல்வியும் காலஞ்சென்றவர்களான சுகிர்தவதி, லோககுகதாசன், குணசவுந்தரவல்லி, திலகவதி ஆகியோரின் பாசமிகு சகோதரியும் செல்வநாயகம், சந்திரா வதி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக இன்று (10.04.2014) வியாழக்கிழமை காலை 9.00 மணியளவில் துண்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


16, காட்டுக் கந்தோர் ஒழுங்கை,
சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம்.

(46569) (10.6)

தகவல்:
**குடும்பத்தினர்.**

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
**பொன்னையா இராசரத்தினம்**



தோற்றம்
06 . 04 . 1943

மறைவு
23 . 03 . 2013

எம் குடும்பத்தின் குல விளக்கே - அப்பா
நம்ப முடியவில்லை
ஆண்டு ஒன்று ஆகிவிட்டதோ!
எம் குடும்பத்து இரத்தினமே அப்பா
மீள முடியவில்லை துயரக்கடலிலிருந்து!

மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

மனைவி, பிள்ளைகள்,
மருமகன்மார், பேரப்பிள்ளைகள்.

(43601) (10.6)

# ஓய்வுபெற்ற தாதியர் மீண்டும் சேவையில்

## ஒப்பந்த அடிப்படையில் இணைக்க சுகாதார அமைச்சு தீர்மானம்

இளைப்பாறிய தாதிமார்களை அவர்களது சுயவிருப்பத்தின் பேரில் ஒப்பந்த அடிப்படையில் மீண்டும் சேவைக்காக அழைக்க சுகாதார அமைச்சு தீர்மானித் துள்ளது.

வைத்தியசாலைகளில் நிலவும் தாதிமார் பற்றாக்குறையை நீக்க இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

வைத்தியர்களும் தாதிமாரும் பெருமளவில் வெளிநாடுகளுக்குச் செல்கின்றனர். அதனால் பற்றாக்குறை உருவாகி உள்ளது. வெளிநாடுகளுக்குச் செல்வதற்காக வாராந்தம் வைத்தியர்கள், தாதிமார்கள் ஆகியோரின் 50 கடிதக் கோவைகளில் கையொப்ப மிட நேர்ந்துள்ளது. விருப்ப மான நாட்டுக்குச் சென்று விருப்பமான தொழிலைப் புரியும் மனித உரிமை அவர்களுக்கு இருப்பதால் இந்தக் கடிதங்களில் கைச்சாத்திடப்படுகின்றன என்று அமைச்சர் தெரிவித்தார். நாடு முழுவதும் தாதிமார்களைப் பொறுத்த வரை 10,000 பேருக்கான பற் றாக் குறை நில வுகிறது. இந்தச் சவாலை வெற்றி கொள்ள ஏதாவ தொரு சாதகமான செயற் பாட்டை நடை முறைப்படுத்த வேண்டும்என்று அவர் கூறினார்.

## லக்பிம ஆசிரியரிடம் விசாரணை

கொழும்பு, ஏப்.10

லக்பிம சிங்கள பத்திரிகையின் ஆசிரியர் சமன் வகா ஆராச்சி நேற்று புலனாய்வுப் பிரிவு அலுவலகத்துக்கு விசாரணைக்காக அழைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த 7 ஆம் திகதி வெளியான லக்பிம பத்திரிகையில் புதுவருட சந்தை சம்பந்தப்பாக வெளியிடப்பட்ட புகைப்படத்தில் பாதுகாப்பு அமைச்சரின் மனைவி காணப்பட்டதுடன், அது தொடர்பான செய்தியில் புகைப்படத்திற்கு அருகில் இது போலி நாணயத்தாள் இல்லை தானே எனக் கூறப்பட்டிருந்தது. அதனையடுத்து மறுதினம் அந்தப் பத்திரிகையில் அதற்கு வருத்தம் தெரிவித்து செய்தி பிரசுரிக்கப்பட்டிருந்தது.

இது தொடர்பாகவே லக்பிம பத்திரிகை ஆசிரியர் புலனாய்வுப் பிரிவுக்கு அழைப்பட்டுள்ளார். (ற-5)

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### கோபியின்

தேடப்படுவரான கோபியின் இருப்பிடத்தைக் கண்டறிவதற்காகவே அவர் கைது செய்யப்பட்டார் என்று கூறப்பட்டது. கர்ப்பிணிப் பெண்ணான அவர் மறுநாள் 12 ஆம் திகதி ரயில் மூலமாகக் கொழும்பில் உள்ள குற்றப் தடுப்புப் பிரிவுக்கு (நாலாம் மாடி) கொண்டு செல்லப்பட்டார்.

இந்தக் கைது நடவடிக்கைகள் மற்றும் விசாரணைகள் காரணமாக மூன்று மாதங்களான சர்மிளாவின் கர்ப்பம் 14 ஆம் திகதி காலை கலைந்தது என்று கூறப்படுகின்றது. எனினும் அப்போது அவருக்கு சாதாரணமாக வழங்கப்பட வேண்டிய மருத்துவ உதவிகள் கூட வழங்கப்படவில்லை. மாறாக அதன் பின்னரும் அவர் கொழும்பில் இருந்து பூஸாவுக்கு ரயில் மூலம் கொண்டு செல்லப்பட்டுள்ளார் என்று மனித உரிமைகள் ஆணைக்குழுவில் செய்யப்பட்ட முறைப்பாட்டில் கூறப்பட்டுள்ளது.

அதேவேளை, இந்தக் குற்றச்சாட்டை அடியோடு மறுத்துள்ளார் பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோகண. இதுகுறித்து அவர் 'பி.பி.ஸி.' செய்திச் சேவைக்குக் கருத்துத் தெரிவிக்கும்போது,

"இதுவரை 7 பெண்கள் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். பயங்கரவாதம் மீண்டும் நாட்டில் உருவாவது.

இனங்களிடையே அமைதியின்மையை ஏற்படுத்தி நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்துவது போன்ற காரியங்களை மேற்கொள்பவர்களுக்கு அவர்கள் பாதுகாப்பும், உதவிகளும் வழங்கியிருக்கின்றார்கள். அதற்காகவே அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட அனைவரும் பூஸா தடுப்பு முகாமிலேயே தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்டுள்ள பெண்களில் எவருக்கும் கருச்சிதைவு ஏற்படவில்லை. பயங்கரவாதப் புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளரும் அத்தகைய சம்பவம் எதுவும் இடம்பெறவில்லை என்று தெரிவித்திருக்கின்றார். கைது செய்யப்பட்டுள்ள பெண்களை அவர்களுடைய உறவினர்களோ, சட்டத்தரணிகளோ யார் வேண்டுமானாலும் அவர்களைச் சென்று பார்வையிடலாம். இவர்களை மனித உரிமை அமைப்புக்கள், மனித உரிமை ஆணைக்குழுவினர் போன்றவர்கள் சென்று பார்வையிட்டுள்ளார்கள்."- என்று தெரிவித்துள்ளார்.

அதேவேளை, சந்தேக நபர்களைத் தேடும் வேட்டை என்றபெயரில்பெண்கள்தொடர்ச்சியாக தொல்லைகளுக் குள்ளாக்கப்பட்டு வருகின்றனர் என்று பெண்கள் செயல்பாட்டு அமைப்பு எனும் தன்னார்வ அமைப்பு குற்றஞ்சாட்டியுள்ளது.

கைது செய்யப்பட்டுள்ள கஜீபனின் மனைவி சர்மிளா மற்றும் கஜீபனின் தாயான 63 வயதுடைய செல்வநாயகி இராசமலர் ஆகியோருக்கு அடிப்படை வசதிகள் மற்றும் தேவையான மருத்துவ உதவிகள் எவையும் வழங்கப்படவில்லை. இவருடைய உடலில் ஈரலுக்கு அருகில் ஷெல் துண்டு ஒன்று எடுக்க முடியாத நிலையில் இருக்கின்றது. அறுவைச் சிகிச்சையின் மூலமாகவும் அதனை அகற்ற முடியாது என்ற காரணத்தினால், அவருக்கு தொடர்ச்சியாக மருத்துவ உதவி அவசியமாக இருக்கின்றது. அப்படி இருந்தும் பூஸா தடுப்பு முகாமில் இவருக்கும் எவ்வித மருத்துவ உதவியும் வழங்கப் படவில்லை.

கஜீபனின் தாயை பரந்தனில் மீட்கப்பட்ட சடலத்தை அடையாளம் காட்ட அழைத்துச் சென்று விட்டு நேரடியாகவே கொழும்புக்கு கொண்டு சென்றனர். அதனால் அவர் மாற்றுடை எதுவும் எடுத்துச் செல்லவில்லை. இவருக்கு கடந்த வாரமே மாற்றுடை வழங்கப்பட்டுள்ளது - என்று அந்த அமைப்பு குற்றஞ்சாட்டுகின்றது.

இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோகண, "அவர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் அனைத்தும் வழங்கப்பட்டுள்ளன. அவ்வாறான வசதிகள் வழங்கப்படவில்லை என்று கூறுவது அப்பட்டமான பொய்யாகும்"- என்று தெரிவித்தார். (ற-5)

### இறுதிப்

"இறுதிக் கட்டப் போரில் சில விரும்பத்தகாத சம்பவங்கள் அரங்கேறியுள்ளன. இந்தச் சம்பவங்கள் இருதரப்பாலும் புரியப்பட்டுள்ளன. இது தொடர்பில் இலங்கை அரசு சுதந்திரமான விசாரணைகளை ஆரம்பிக்க வேண்டும். இலங்கையின் நல்லிணக்கச் செயற்பாடுகளை விரைந்து ஆரம்பிக்க வேண்டும். கற்றுக் கொண்ட பாடங்கள் மற் றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் அறிக்கையில் சொல் லப்பட்டுள்ள பரிந்துரைகளை இலங்கை அரசு நடை முறைப் படுத்தி நாட்டில் நல்லி ணக்கத்தை ஏற்படுத்த வேண் டும் என்று வலியுறுத்துகின்றோம்.

உடனடியாகவே நல்லிணக்கத்தை கொண்டு வருவது என்பது சாத்தியமற்றது என்பதை ஆஸ்திரேலியா அறியும். இருப்பினும் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதன் ஊடாக இதனை மேற்கொள்ள வேண்டும்" - என்று அந்தச் சந்திப்பின் போது ஜூலியாட் பிஷப் வலியுறுத்தியுள்ளார். (ற-5)

### இலங்கை

இலங்கை மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். குறித்த பிரதேசத்தில் இலங்கை மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளமை இதுவே முதல் முறை என்று இந்திய கடலோரக் காவல் படையினர் குறிப்பிட்டுள்ளனர்.

குறித்த மீனவர்கள் இலங்கை அரசால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டைகளை வைத்திருந்தனர். அவர்களிடமிருந்து இரண்டு தொன் கடல் உணவுப் பொருள்களும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது என்றும் தெரிய வருகின்றது. கைது செய்யப்பட்ட மீனவர்கள் தற்போது கர்நாடகப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இந்தியாவின் பிரத்தியேக கடல் பொருளாதார வலயம் என அறிவிக்கப்பட்ட பகுதியில் வெளிநாட்டு மீனவர்கள் எவரும் மீன்பிடியில் ஈடுபட முடியாது. (ற-5)

### சுகாதார

குழப்பங்கள் தொடர்பிலும் கட்சியில் செயலாளருக்கு, தவிசாளர்கள் அறிவித்துள்ள நிலையிலேயே குறித்த போராட்டத்தை நடத்துவதற்கும் தீர்மானித்துள்ளனர்.

வலி.வடக்குப் பிரதேசத்தில் உள்ளுராட்சி மன்றத்துக்குரிய பொதுச் சுகாதார பரிசோதகருக்கும் அந்தப் பகுதி சுகாதார வைத்திய அதிகாரிக்கும் இடையே ஏற்பட்ட முரண்பாட்டைத் தொடர்ந்து, உள்ளுராட்சி மன்றங்களுக்குரிய பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சுகாதார வைத்திய அதிகாரிகள் பணிமனையின் கீழ் கொண்டுவரப்பட வேண்டும் என்று கோரி மருத்துவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். அதையடுத்து உடனடியாக உள்ளுராட்சி மன்றங்களிலிருந்து பொதுச்சுகாதார பரிசோதகர்கள் விடுவிக்கப்பட்டு சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையுடன் இணைக்கப்பட்டனர். இந்த விடயத்தில் பொலிஸாரும் தலையிட்டிருந்தனர்.

அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து பொதுச்சுகாதார பரிசோதகர்கள் பணிப் புறக்கணிப்புப் போராட்டத்தில் குதித்தனர். அவர்களுக்கு ஆதரவு தெரிவித்து வடக்கு மாகாண உள்ளுராட்சி மன்றங்கள் யாவும், சுகாதாரப் பணிகளை முடக்கிப் போராட்டத்தில் ஈடுபட்டன. தொடர்ச்சியாக நீண்ட நாள்கள் நடைபெற்ற இந்தப் போராட்டங்களை அடுத்து வடக்கு மாகாண முதலமைச்சர், சுகாதார அமைச்சர் ஆகியோர் இணைந்து உள்ளுராட்சி மன்றங்களின் தவிசாளர்களுடன் கலந்துரையாடல் ஒன்றை நடத்தினர்.

அதன்போது சுகாதாரா வைத்திய அதிகாரிகள் பணிமனைக்கு இணைக்கப்பட்ட பொதுச் சுகாதார பரிசோதகர்கள் மீளவும் உள்ளுராட்சி மன்றங்களுக்கு இணைக்கப்படுவார்கள் என்று உறுதி மொழி வழங்கப்பட்டது. குறித்த உறுதிமொழி வழங்கப்பட்டு

ஒரு மாதம் கடந்துள்ள நிலையில், அது இன்னமும் நிறைவேற்றப்படவில்லை. இந்த நிலையிலேயே கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்றை நடத்துவதற்கு வடமாகாண உள்ளுராட்சி மன்றங்களின் தவிசாளர்கள் தயாராகி வருகின்றனர் என்று கூறப்படுகின்றது. (ற-5)

### அரிசிக்கு

விலை நேற்று நள்ளிரவுடன் நடைமுறைக்கு வந்துள்ளதுடன், அரிசிக்கான இறக்கு மதிவரியும் முற்றாக நீக்கப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் ஒரு கிலோ சம்பா அரிசியின் விலை 77 ரூபாவாகவும், வெள்ளை நாடு ஒரு கிலோ 68 ரூபாவாகவும் விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. சிவப்பு நாடு மற்றும் வெள்ளை பச்சை அரிசிகளுக்கு ஒரு கிலோ 66 ரூபா என்ற கட்டுப்பாட்டு விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அத்துடன் சிவப்பு பச்சை அரிசி ஒரு கிலோவுக்கு விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாட்டு விலை 60 ரூபாவாகும்.

வறட்சிக் காலநிலை காரணமாக நெல்லின் விலை அதிகரித்தமையால் அரிசியின் விலையும் அதிகரித்திருந்தது. எதிர்வரும் புதுவருடப் பிறப்பை முன்னிட்டு மக்கள் அதிகளவில் அரிசியை கொள்வனவு செய்ய முற்படும் போது அதற்கு இன்னமும் தட்டுப்பாடு ஏற்படுவதுடன் விலையும் கட்டுப்பாடில்லாமல் அதிகரிக்கும் என்றும் எதிர்பார்க்கப்பட்டது.

அதன் காரணமாகவே தற்போது அரிசிக்கு கட்டுப்பாட்டு விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது. எதிர்காலத்திலும் தட்டுப்பாட்டைத் தவிர்ப்பதற்காக அரிசி இறக்குமதிக்கான வரிகள் முழுவதுமாக நீக்கப்பட்டுள்ளன. இருப்பினும் நுகர்வோர் வரியான ஐந்து ரூபாய் மாத்திரம் அறவிடப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-5)

### நீதிமன்றத்தின்

காப்பு அமைச்சு இவ்வாறு தெரிவித்துள்ளது.

"2002ஆம் ஆண்டு முதல் நடத்தப்பட்ட விரிவான விசாரணைகளின் பின்னணியிலேயே குறித்த தடைப் பட்டியல் உருவாக்கப்பட்டுள்ளது. தடை செய்யப்பட்ட அமைப்புகள் தமது தரப்பு நியாயங்களை வெளிப்படுத்தி, நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்து தடையை இரத்துச் செய்து கொள்ள முடியும்."- என்று தெரிவித்துள்ளது பாதுகாப்பு அமைச்சு. (ற-5)

### மீட்கப்பட்ட

பகுதியில் உள்ள தென்னந்தோப்பு ஒன்றில் இருந்தே இந்த எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. தென்னந்தோப்பில் தூர்வாரும்போது 4 அடி ஆழத்தில் எலும்பு எச்சங்கள் சில காணப்பட்டன. குறித்த பகுதி மண்ணும் கருமையான நிறத்தில் காணப்பட்டது. அதையடுத்து குறித்த எலும்பு எச்சங்கள் மனித எச்சங்களாக இருக்கக் கூடும் என்ற அச்சத்தில் கிராம அலுவலர் ஊடாகப் பொலிஸாருக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது.

அதையடுத்து சாவகச்சேரி நீதிமன்ற நீதிபதி ஸ்ரீநிதி நந்தசேகரன் மற்றும் யாழ். போதனா வைத்தியசாலையின் சட்ட வைத்திய அதிகாரி சி.சிவரூபன் ஆகியோர் குறித்த இடத்துக்குச் சென்றனர். மீட்கப்பட்ட எலும்பு எச்சங்களை ஆய்வுக்குட்படுத்திய சட்ட வைத்திய அதிகாரி அவை விலங்குகளுடையவையே என்று உறுதிப்படுத்தினார்.

குறித்த பிரதேசம் 14 ஆண்டுகள் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் இருந்தது. கடந்த சில மாதங்களுக்கு முன்னரே பொதுமக்களின் பாவனைக்காக விட்ப்பட்டுள்ளது. மனித எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன என்று பரவிய தகவலை அடுத்து அந்தப் பகுதியில் வழமைக்கு மாறாகப் பெருமளவு இராணுவத்தினர் குவிக்கப்பட்டதை அவதானிக்கக் கூடியாக இருந்தது. (ற-5-9)

### போதையை

"எதிர்வரும் சித்திரைப் புத்தாண்டுக் காலப் பகுதியில் மது போதையில் வாகனம் செலுத்துபவர்களைக் கைது செய்வதற்காகவே, 60 ஆயிரம் பலூன்கள் அவசர அவசரமாக இறக்குமதி செய்யப்பட்டுள்ளன.

நாடு முழுவதிலும், புத்தாண்டுக் காலத்தில் மதுபோதையில் சென்று விபத்துக்குள்ளாகும் சம்பவங்கள் தொடர்ச்சியாக அதிகரித்து வருகின்றது. அதனைக் கட்டுப்படுத்துவதற்கான முன்முயற்சியாகவே மேற்படி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது."- என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற-5)

### பறிபோனது

அதிகூடிய விருப்பு வாக்குகளைப் பெற்று மாகாண சபைக்குத் தெரிவாகியிருந்தார். சபையில் அவர் எதிர்க்கட்சித் தலைவராகவும் பதவி வகித்தார்.

நெடுந்தீவுப் பிரதேச சபையின் தவிசாளரைக் கொலை செய்தார் என்ற குற்றச்சாட்டில் அவர் தற்போது விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார். அவர் கொலை வழக்கில் சிக்கியதும் அவரை கட்சியை விட்டு நீக்குவதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் ஈ.பி.டி.பி. கட்சி அறிவித்தது. அதனைத் தொடர்ந்து ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் இருந்தும் அவர் நீக்கப்பட்டார் என்று அதன் பொதுச் செயலாளர் சுசில் பிரேமஜெயந்த அறிவித்தார்.

இது தொடர்பிலான கடிதம் கந்தசாமி கமலேந்திரனுக்கும், மாகாணசபையின் செயலாளருக்கும் அனுப்பப்பட்டிருந்தது. குறித்த கடிதம் அனுப்பப்பட்ட பெப்ரவரி 7 ஆம் திகதியிலிருந்து ஒரு மாத காலத்தினுள், அதாவது மார்ச் 7 ஆம் திகதி வரையிலான ஒரு மாத காலத்தினுள் தான் முன்னணியில் இருந்து நீக்கப்பட்டமைக்குக் கமலேந்திரன் எதிர்ப்பு எதுவும் தெரிவிக்கவில்லை என்று கூறப்படுகிறது. இதனை அடிப்படையாகக் கொண்டு மாகாண சபை சட்டங்களின்படி அவர் மாகாண சபை உறுப்பினர் பதவியில் இருந்து நீக்கப்பட்டுள்ளார் என்று அதிகாரிகள் கூறுகின்றனர்.

எனவே, அவரது வெற்றிடத்துக்கு பொருத்தமானவரை நியமிக்குமாறு கோரி யாழ். மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலரும், மாவட்ட அரச அதிபருமான சுந்தரம் அருமைநாயகத்துக்கு, மாகாண சபையின் செயலாளர் ஐ.கிருஷ்ணமூர்த்தி கடிதம் அனுப்பியுள்ளார்.

மாகாண சபையில் இதுபோன்று ஓர் உறுப்பினர் பதவியிழப்பது இதுவே முதல் முறை என்பதால், மேலதிக ஆலோசனைகளுக்காகத் தேர்தல்கள் ஆணையாளருக்கு இந்த விவகாரம் முற்படுத்தப்பட்டுள்ளது என்று உள்ளுர் அதிகாரிகள் கூறுகின்றனர்.

இது தொடர்பில் தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரியவே இறுதி முடிவு எடுப்பார் என்று தெரிகின்றது. கமலேந்திரன் உறுப்பினர் பதவியை இழந்தமையை தேர்தல்கள் ஆணையாளர் உறுதிப்படுத்தினால், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வேட்பாளர் பட்டியலில் அதிக விருப்பு வாக்குகள் பெற்ற மற்றுமொருவர் அவரது இடத்துக்கு நியமிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. (உ-5)

### தென்னாபிரிக்கா

நிலைப்பாடுகள் என்பன குறித்து கூட்டமைப்புத் தலைவர்கள் விளக்குவர்.

அவர்கள் தென்னாபிரிக்க ஜனாதிபதியைச் சந்திப்பது தொடர்பில் நிகழ்ச்சி நிரலில் குறிப்பிடப்படவில்லை என்றபோதும் நிலைமைகளின் சாதகம், சாத்தியங்களைப் பொறுத்து ஜனாதிபதி சூமாவைச் சந்திக்கவும்கூடும் என்று தெரிவிக்கப்படுகிறது. (உ-5)

# சதுரங்கத்தில் அருணோதயா 4 பிரிவுகளிலும் சம்பியன்


15 வயதுப் பெண்கள் அணி


15 வயது ஆண்கள் அணி




19 வயது ஆண்கள் அணி


19 வயதுப் பெண்கள் அணி

யாழ்ப்பாணம்,ஏப் 10
வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையே கடந்த 4ஆம், 5ஆம் திகதிகளில் 15வயதுக்குட்பட்ட ஆண்,பெண், 19வயதுக்குட்பட்ட ஆண்,பெண் ஆகிய வயதுப் பிரிவுகளுக்கிடையே சதுரங்கப் போட்டிகள் இடம்பெற்றன.
இந்தப் பிரிவுகள் அனைத்திலும் அளவெட்டி அருணோதயக் கல்லூரி சம்பியனாகிச் சாதனை படைத்தது.
19வயதுப்பெண்கள் பிரிவினர் இம்முறையுடன் தொடர்ந்து 5ஆவது தடவையாகவும் சம்பியனாகிச் சாதனை புரிந்தமை குறிப்பிடத்தக்கது.
இந்த அணியினர் மாகாண மட்டப்போட்டிகளில் கலந்து கொள்ளவுள்ளனர்.
வலிகாமம் வலய மட்டத்தில் நடைபெற்ற சதுரங்கப் போட்டியில் அதிக தடவைகள் சம்பியனாகத் தெரிவு செய்யப் பாடசாலை என்ற பெருமையை இதன் மூலம் அருணோதயாக் கல்லூரி பெற்றுள்ளது. (த-86)

## இன்றைய ஆட்டங்கள்



யாழ்ப்பாணம், ஏப். 10
யாழ் உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழகம் நடத்தும் 'வடக்கின் சுப்பர் கிங்' உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் உரும்பிராய் இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன.
இதில் இன்று வியாழக்கிழமை பி.ப. 3.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் கொலின்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஊரெழு றோயல் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (த-23)

* * *

யாழ்ப்பாணம், ஏப். 10
வுவுனியா உதைபந்தாட்ட லீக். தனது அங்கத்துவக் கழகங்களுக்கு இடையில் நடத்தும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் வவுனியா நகர சபை மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன.
அதில் இன்று வியாழக்கிழமை மாலை 4மணிக்கு இடம் பெறும் 4 ஆவது காலிறுதியாட்டத்தில் வடதாரகை விளையாட்டுக்கழக அணியைஎதிர்த்து அல்அமான் விளை யாட்டுக் கழகஅணிமோதவுள்து.(த-23)

# 19 வயதுப் பெண்கள் வலைப்பந்து தெல்லிப்பழை யூனியன் சம்பியன்

யாழ்ப்பாணம், ஏப்.10
வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையேயான வலைப் பந்தாட்டப் போட்டியில் 19 வயதுப் பிரிவில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணி சம்பியனாகியது.
19 வயது பெண்களுக்கான வலைப்பந்தாட்ட சுற்றுப் போட்டி நேற்று முன்தினம் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.
இறுதியாட்டத்தில் யூனியன் கல்லூரி அணியை எதிர்த்து சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அணி மோதியது.
ஆட்டம் தொடங்கியபோது இரு அணிகளும் மிகச் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியதால் ஆட்டம் நேரம் முடிவடையும் வரை வெற்றி தோல்வியைத் தீர்மானிப்பதில் கடினம் ஏற்பட்டது.
ஆட்டத்தின் இறுதி நிமிடங்களில் வீறுகொண்ட தெல்லிப் பழை யூனியன் கல்லூரி அணி தொடர்ச்சியாகப் புள்ளிகளைப் பெற்று இறுதியில் 28:21 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் யூனியன் கல்லூரி அணி சம்பியனாகியது.
இப்பிரிவில் மூன்றாம் இடத்தை அராலி சரஸ்வதி வித்தியாலம் பெற்றது.
(த-422)


சம்பியனான யூனியன் அணி

## வடமராட்சிக் கழகங்கள் பங்குபற்றும் போட்டிகள்

வடமராட்சி, ஏப். 10
பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகம் வடமராட்சிப் பகுதிக்கு உட்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கு இடையில் நடத்தும் கரப்பந்தாட்டம் மற்றும் வலைப்பந்தாட்டம் ஆகிய சுற்றுப் போட்டிகள் இன்று வியாழக்கிழமை காலை 8.30 மணிமுதல் கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளது.
இப்போட்டிகள் இன்றும் நாளையும் நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதும் தவிர்க்க முடியாத காரணத்தினால் சகல போட்டிகளும் இன்று நடைபெறும் என்றும்-
எனவே இதில் பங்குபற்ற பதிவு செய்த அனைத்துக் கழகங்களையும் காலை 8.30 மணிக்கு விளையாட்டுக்கழகமைதானத்துக்கு போட்டியில் பங்குபற்றுவதற்கான ஆயத்தங்களுடன் வருகை தருமாறு போட்டி ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர்.
(த-400)

## சீனியர் லீக் உதைபந்தாட்டம்



யாழ்ப்பாணம், ஏப். 10
இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனம் நடத்தும் சீனியர் இன்ரர் லீக் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டம் ஒன்று எதிர்வரும் 12 ஆம்திகதி- கொழும்பு சிற்றிலீக் மைதானத்தில் பி.ப. 3.30 மணிக்கு இடம் பெறவுள்ளது.
இதில் கொழும்பு சிற்றிலீக் உதைபந்தாட்ட அணியை எதிர்த்து திருகோணமலை உதைபந்தாட்டலீக் அணி மோதவுள்ளது. (த-23)

# அல்வாய் நண்பர்கள் அபார வெற்றி


நேற்றைய ஆட்டத்தின் ஒரு காட்சி


எப்பாடுபட்டாவது ஆட்டத்தைச் சமநிலைப்படுத்த வேண்டும் என இறுதிவரை போராடிய வல்வை நெடியகாடு இளைஞர் விளையாட்டுக்கழக வீரர்களின் முயற்சி வீணானது. அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக்கழகம் 3:2 என்ற அடிப்படையில் வெற்றி கொண்டது.
பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் 'உதயன்' பத்திரிகையும் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகமும் இணைந்து நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.
நேற்று நடைபெற்ற முதலாவது ஆட்டத்தில் அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக் கழகமும், வல்வை நெடிய காடு இளைஞர் விளையாட்டுக் கழகமும் மோதிக்கொண்டன.
மிகவும் விறுவிறுப்பாக ஆட்டம் இடம்பெற்ற போதும் இடைவேளைக்கு முன்னர் அல்வாய் நண்பர்களின் பக்கமே ஆட்டம் சாதகமாக இருந்தது.
அவ்வணியின் சுஜிந்தன் 2 கோல்களையும், சசிதரன் ஒரு கோலையும் போட 3-0 என்ற அடிப்படையில் ஆட்டம் இடைவேளைக்காக நிறுத்தப்பட்டது.
இடைவேளையின் பின் ஆட்டம் மேலும் சூடுபிடிக்க தாமும் சளைத்தவர்கள் அல்ல என நிரூபிக்கும் வகையில் வல்வை நெடியகாடு இளைஞர் விளையாட்டுக்கழக வீரர்களான மதன்,அபிமன்யூ ஆகியோர் தலா ஒரு கோலைப் போட்டு தமது அணியை உற்சாகப் படுத்தினர்.
இதனை அடுத்து ஆட்டம் மேலும் இறுக்கமடைந்தது. நெடியகாடு அணியினர் எப்படியாவது ஒரு கோலைப் போட்டு ஆட்டத்தைச் சமநிலைப்படுத்த வேண்டும் என்று கடுமையாகப் போராடினர். ஆனால் அவர்களுடைய போராட்டத்துக்கு தடைக்கல்லாக நண்பர்கள் விளையாட்டுக்கழக பின்கள வீரர்கள் விளங்கினார்கள். இடையிடையே இரு அணி வீரர்களும் கோல் போடும் நோக்கில் முன்னோக்கித் தாக்கினாலும் அவை எதிரணியினர்களின் தடுப்பறைகளால் நிறைவேறவில்லை. இதனால் நெடியகாடு இளைஞர் விளையாட்டுக்கழகத்தின் இறுதிக் கட்டப் போராட்டமும் வீணானது. இறுதியில் 3:2 என்ற கோல்க் கணக்கில் அல்வாய் நண்பர்கள் அணி வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்குத் முன்னேறியது.
தொடர்ந்து இடம்பெற்ற ஆட்டத்தில் வல்வை விளையாட்டுக்கழக அணியும் அல்வாய் பாரதி அணியும் மோதின.
இதில் ஆட்டம் தொடங்கி முடியும்வரை வல்வை அணியின் கையே மேலோங்கி இருந்தது. ஏதோ விளையாட வந்து விட்டோம் விளையாடி விட்டுச் செல்வோம் என்ற மாதிரி பாரதி விளையாட்டுக்கழக வீரர்களின் செயற்பாடுகள் அமைந்திருந்தது. இதனால் ஆத்திரமடைந்த அவ்வணியின் ஆதரவாளர்கள் வெளியிலிருந்து வீரர்களை விமர்சித்துக் கொண்டும் ஏசிக் கொண்டும் இருந்தனர்.
இச் சூழ்நிலையில் வல்வை அணியினர் இடைவேளைக்கு முன்னர் பிரசாத் மூலம் 2 கோல்களையும், இடைவேளைக்குப் பின்னர் சண்முகநாதன், ரசி மற்றும் நிறஞ்சன் ஆகியோர் உதவியுடன் மூன்று கோல்களையும் பெற்று 5:0 என்ற அடிப்படையில் பாரதி விளையாட்டுக் கழக அணியைத் தோற்கடித்தது.(த-400)

## தொடர்ந்த சோகத்துக்கு முற்றுப்புள்ளி



தொடர்ச்சியாக இறுதிப்போட்டிகளில் தோல்வியைத் தழுவும் சோகத்துக்கு இலங்கைக் கிரிக்கெட் அணி இந்த வருடம் முற்றுப்புள்ளி வைத்துள்ளது.
இலங்கை அணி 2007, 2011ஆம் ஆண்டுகளில் ஒரு நாள் போட்டி உலகக் கிண்ண இறுதி ஆட்டத்திலும் 2009, 2012ஆம் ஆண்டுகளில் 20/20 உலகக் கிண்ண இறுதி ஆட்டங்களிலும் தோல்வி கண்டிருந்தது. சமீப காலமாக அவர்களை வாட்டி வதைத்த இந்தச் சோகத்துக்கு ஒரு வழியாக முடிவு கட்டி விட்டனர்.
இலங்கையின் மூத்த வீரர்களான மஹேல ஜெயவர்த்தன, சங்கக்காரா இருவரும் இந்த ஆட்டத்துடன் சர்வதேச 20/20 கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெற்றனர். இவர்களுக்குப் பரிசளிக்கும் வண்ணம் இலங்கை கிண்ணத்தைக் கைப் பற்றியது. முதன்முறையாக உலகக் கிண்ணத்தை கையில் ஏந்தி மனநிறைவுடன் இருவரும் 20/20 கிரிக்கெட்டுக்கு விடை கொடுத்தனர். (த)

## இங்கிலாந்து பிறிமியர் லீக்கில் முதலிடத்துக்கு கடும் போட்டி




இங்கிலாந்து பிறிமியர் லீக் தொடரில் முதலிடத்துக்கு மன் செஸ்ரர் சிற்றி அணிக்கும் லிவர்பூல் அணிக்கும் கடும் போட்டி இடையில் நில வுக்கின்றது. இந்தப் போட்டியில் செல்சி அணி இருந்தாலும் முதலிட வாய்ப்புக்கள் அவர்களுக்குக் குறைவாகவே உள்ளது. இந்தவாரப் போட்டிகளில் மூன்று அணிகளும் வெற்றிகளைப் பெற்றன. இதனடிப் படையில் லிவர் பூல் கடந்த வாரம் பெற்றுக் கொண்ட முதலிடத்தைத் தொடர்ந்து தக்க வைத்துள்ளது. இருப்பினும் மன் செஸ்ரர் சிற்றி அணி இரண்டு போட்டிகள் குறைவாக விளையாடி மூன்றாமிடத்தில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. செல்சி அணி இரண்டாமிடத்தில் உள்ளது. (த)

## காதலியை மணந்தார் பிரெட் லீ



ஆஸ்திரேலியக் கிரிக்கெட் அணியின் முன்னாள் அதிவேகப்பந்து வீச்சாளர் பிரெட்லீ தனது காதலி லானாவை மணந்துள்ளார்.
2012ஆம் ஆண்டில் சர்வதேசக் கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெற்ற பிரெட்லீ, 2006ஆம் ஆண்டு எலிசபெத் கெம்ப் என்ற பெண்ணைத் திருமணம் செய்தார். இவர்களுக்கு பிரிஸ்டோன் என்ற ஒரு மகன் இருப்பது குறிப்பிடத்தக்கது.
அடுத்த இரண்டு ஆண்டுகளில் ஏற்பட்ட கருத்து வேறுபாட்டால் 2009ஆம் ஆண்டு கெம்ப்பிடம் இருந்து லீ விவாகரத்துப் பெற்றார். இதன் பின்னர் கிரிக்கெட்டில் கவனம் செலுத்திய பிரெட்லீ, லானா அண்டர்சன் என்ற மொ[illegible]ல் அழகியின் காதல் வலையில் விழுந்தார்.
கடந்த ஆண்டு நெருங்கிப் பழகிய இருவரும் ஒன்றாகக் கைகோர்த்து ஒரு விழாவில் முத்தமிட்ட காட்சி பரபரப்பை ஏற்படுத்தியது.
இந்நிலையில் பிரெட்லீ, 29 வயதான தனது காதலி லானா அண்டர்சனைத் திருமணம் செய்துகொண்டுள்ளார். சிட்னியின் சீபோர்த்தில் உள்ள அவரது புதிய வீட்டில் தனிப்பட்ட முறையில் நடந்த நிகழ்ச்சியில் நெருங்கியவர்களின் முன்னிலையில் பிரெட்லீ, லரனாவைக் கரம் பிடித்தார். (த)

## சங்கக்காரவுக்கும் மஹேலவுக்கும் அழுத்தம் கொடுத்த கிரிக்கெட் சபை

20/20 உலகக் கிண்ணத் தொடரின் போது ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்க இலங்கை அணி வீரர்கள் குமார் சங்கக்கார மற்றும் மஹேலஜெயவர்த்தன ஆகியோருக்கு இலங்கை கிரிக்கெட் நிறுவனம் தடை விதித்ததாகத் தெரிய வந்துள்ளது.
கட்டுநாயக்கா விமான நிலையத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றிய இலங்கை அணி வீரர் மஹேல ஜெயவர்த்தன இந்தத் தகவலை வெளியிட்டார்.
தமது ஓய்வு குறித்து இலங்கை கிரிக்கெட் நிறுவனத்துக்கு அறிவிக்காமல் ஊடகங்களுக்கு அறிவித்ததால் இலங்கை கிரிக்கெட் நிறுவனம் இவ்வாறு நடந்து கொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.
மஹேல ஜெயவர்த்தனவின் கருத்துடன் குமார் சங்கக்கார இணங்கினார்.
இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் அழுத்தம், ஊடகங்களின் விமர்சனம் இவை எல்லாவற்றிற்கும் முகங்கொடுத்தே வெற்றியைப் பெற்றதாகக் குமார் சங்கக்கார தெரிவித்தார்.
ஊடகங்கள் விமர்சனம் செய்ய வேண்டியது அவசியம் எனவும், சில ஊடகங்கள் அநாவசியமான விமர்சனங்களைச் செய்வதாகவும், குமார் சங்கக்கார தெரிவித்தார். எனினும் இலங்கை மக்களுக்காகக் கிரிக்கெட் விளையாட்டில் கூடிய கவனம் செலுத்திக் கிண்ணத்தை வென்றதாக குமார் சங்கக்கார குறிப்பிட்டார். (த)




## வெற்றி நாயகன் யுவராஜ்சிங் தான்

இந்திய அணியின் சிறந்த வெற்றி நாயகன் யுவராஜ்சிங்தான் என்று சக வீரரான கவுதம் கம்பீர் புகழாரம் சூட்டியுள்ளார்.
யுவராஜை விமர்சனங்கள் தொடரும் நிலையில், டில்லியில் நடந்த நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்ட இந்திய அணியின் மூத்த வீரரான கவுதம் கம்பீர் ஊடகங்களுக்கு அளித்த பேட்டியில், யுவராஜ் சிங்கை எந்த ஒரு கிரிக்கெட் வீரரும் விமர்சிக்கவில்லை. அவரைச் சீண்டுவது ஊடகத்தினரின் வேலை.
நாம் என்ன பேசினாலும், அதை மிகக் கவனமுடன், எச்சரிக்கையுடன் பேசுவது அவசியம்.
20/20 கிரிக்கெட் போன்ற குறுகிய போட்டிகளில் தனிநபராக வெற்றியைத் தேடித் தரக்கூடிய திறன் படைத்தவர் யுவராஜ்சிங். இந்திய அணியின் மிகச்சிறந்த வெற்றி நாயகன் அவர் என்று புகழ்ந்துள்ளார்.
மேலும் ஐ.பி.எல். கிரிக்கெட் ஏலத்தின் போது நாங்கள் (கொல்கத்தா நைற் ரைடர்ஸ் அணி) யுவராஜ் சிங்கை வாங்குவதில் மிகுந்த ஆர்வம் காட்டினோம். ஆனால் கடைசியில் பெங்களூர் அணி அவரை ஏலத்தில் எடுத்து விட்டது. என்னைப் பொறுத்த வரை இந்த நாள் வரை யுவராஜ் சிங் எங்களின் மிகச் சிறந்த வெற்றி நாயகன் என்று கூறியுள்ளார். (த)



# இலங்கை கிரிக்கெட் அணிக்கு நேற்று நாடாளுமன்றில் மகத்தான வரவேற்பு


நாடாளுமன்றத்தில் வெற்றிக் கிண்ணத்துடன் மலிங்க


நினைவுப் பரிசை ... சமல் ராஜபக்ஷ


தே... ஆசிகளைப் பெறும் சங்கா


சுசில் பிரேமஜெயந்தவுடன் உரையாடும் மஹேல


மலிங்க வெற்றிக் கிண்ணத்துடன்


டில்சான், சந்திமல் வெற்றிக் கிண்ணத்துடன்

20/20 உலகக் கிண்ணத்தை கைப்பற்றிய லசித் மலிங்க தலைமையிலான இலங்கைக் கிரிக்கெட் அணிக்கு நேற்று நாடாளுமன்றத்தில் பிரமாண்டமான வரவேற்பு அளிக்கப்பட்டது.

சபாநாயகர் தலைமையில் நடைபெற்ற இந்த வரவேற்பு வைபவத்தில் அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் என பெரும் எண்ணிக்கையானோர் கலந்துகொண்டு இலங்கை அணி வீரர்களை வாழ்த்தி வரவேற்றனர்.

நாடாளுமன்றத்தில் இலங்கை அணி வீரர்களை பாராட்டி விசேட அமர்வு ஒன்று இடம்பெற்றது. இதன்போது வீரர்கள் பார்வையாளர் கலரியில் அமர்ந்திருந்தனர். இந்த அமர்வில் அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், சபாநாயகர் ஆகியோர் வீரர்களைப் பாராட்டி உரையாற்றினர்.

அணித் தலைவர் லசித் மலிங்க உலகக் கிண்ணத்துடன் முன்னேவர பின்னால் வீரர்கள் அனைவரும் நாடாளுமன்றுக்குள் அணி வகுத்து வந்தனர். அப்போது அமைச்சர்களும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் கரகோஷசம் செய்து அவர்களை வரவேற்றனர். அணி வீரர்களுக்கு நாடாளுமன்றில் வைத்து பரிசுப் பொருள்களும் வழங்கப்பட்டன.

இந்த வைபவத்தில் ஆளும்கட்சி, எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் இலங்கை அணி வீரர்களுடன் சேர்ந்து புகைப்படம் எடுத்துக் கொண்டனர். முடிவில் இலங்கை அணிக்கு விருந்துபசாரமும் வழங்கப்பட்டது. (த)


## கண்ணீர் அஞ்சலி



விக்னேஸ்வரா கல்வி நிலைய நிர்வாகியும் யா/ கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலய அதிபருமான **திரு. ச.வாமதேவன்** அவர்களின் பாசமிகு மாமியார்

**திருமதி சரஸ்வதி நடராசா**

காலமானதையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

விக்னேஸ்வரா கல்வி நிலைய
ஆசிரியர்கள், மாணவர்கள்

**ரீட்டல் வகுப்புக்கள்**

A/L பௌதீகவியல்
By M. கருணாநிதி
BSc (SPl)
சனி, ஞாயிறு
6.00 - 7.00
பொறியியல்
7.30 - 9.00
மின்புலம்
10.00 - 11.00
அலைகளும்
அதிர்வுகளும்
ஆரம்பம்: 12.04.2014
SCIENCE CORNER

## மரண அறிவித்தல்

### திருமதி சரஸ்வதி நடராசா



உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் கிழக்கை வதிவிடமாகவும் கொண்ட சரஸ்வதி நடராசா 08.04.2014 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து செல்லமுத்து தம்பதியரின் பாசமிகு புதல்வியும், காலஞ்சென்றவர்களான முருகேசு அன்னப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற சுப்பிரமணியம் மற்றும் செல்வநாயகம், தில்லை நடராசா ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்ற நடராசாவின் பாசமிகு மனைவியும், ஞானேஸ்வரி, இராஜேஸ்வரி (ஜேர்மனி), நகுலேஸ்வரி, நந்தகுமார் (அமெரிக்கா) ஆகியோரின் பாசமிகு தாயும், பரமேஸ்வரன் (ஓய்வுபெற்ற எழுதுவினைஞர்), சிவகுருநாதர் (ஜேர்மனி), வாமதேவன் (அதிபர், கோண்டாவில் இராமகிருஷ்ண ம.வி), கீதா (அமெரிக்கா) ஆகியோரின் பாசமிகு மாமியும், சுதர்சினி, புராதனி, இமாதினி, ஜீவகன், சுதர்சன், தங்கீதா, காலஞ்சென்ற கீர்த்தனா மற்றும் நிலக்ஷி, ஆரபி, அபிரா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் 11.04.2014 வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

109, பொற்பதி வீதி,
கொக்குவில் கிழக்கு. (சி/13472) (10)

தகவல்: குடும்பத்தினர்.
ச.வாமதேவன்,
(அதிபர் கோண்டாவில் இராமகிஷ்ண ம.வி).

**விக்னா**
கல்வி நிறுவனம்
**G.A.Q, B.A வகுப்புகள்**
**ஆரம்பம் 12.04.2014**
பேராதனை - G.A.Q, B.A Sat. 03.00 மணி
யாழ்ப்பாணம் - G.A.Q, B.A(I), B.A(FINAL))
துறைசார் ஆசிரியர்களினால் நடத்தப்படும்.
வகுப்புகள் வார நாள்களிலும்,
வார இறுதி நாள்களிலும் நடைபெறும்.
நேர அட்டவணையையும் மேலதிக விவரங்களையும் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளவும்.
(சு.15447) (12.3.6)
52, ஸ்ரான்லி வீதி, யாழ்., பட்டதாரிப் பிரிவு

**BITSMANS**
கல்வி நிறுவனம் மானிப்பாய்
**A/L 2016**
(35457) (12.3.6)
கலை | வர்த்தகம் | கணித, உயிரியல்
வகுப்புகள்
ஆரம்பம் 12/04/2014 சனி 03.00pm

சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழுடன் வயோதிபர்/ நோயாளர் பராமரிப்புப் பயிற்சி-நெறி விரைவில் யாழ்நகரில். கனடாவில் குடியேறும் வாய்ப்பு உண்டு.
075 856 7447

**NEC**
பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி. | இரு இடத்திலும் | மணிக்கூட்டு வீதி, யாழ்.நகர்
**A/L 2016 கலை, வர்த்தக, தொழில்நுட்ப**
**புதிய பிரிவுகள் ஆரம்பம்:**
**12.04.2014 சனி, ஞாயிறு 9.00 மணி**

**A/L 2016**
சனி, ஞாயிறு
கணக்கீடு S.தவா
பொருளியல் P.சண்
வணிகக்கல்வி S.பிரதீபன்
A/L 2014, 2015 நடைபெறுகின்றது
யூனிவேர்சல் கந்தர்மடம்

**A/L 2016**
சனி, ஞாயிறு
தமிழ்.T.S.தகன்
இந்.நாக, இந்.சம S.ஜெயக்குமார்
அரசியல்.N.ராஜ்
புவியியல்.S.P.சுதன்
வரலாறு.S.பிரபா
நாடக.L.சுகன்
A/L 2014, 2015 நடைபெறுகின்றது
யூனிவேர்சல் கந்தர்மடம்


**SPOKEN ENGLISH**
WITH DIPLOMA CERTIFICATE
அரச, தனியார் ஊழியர்கள், பல்கலை புகுமுக மாணவர்கள் இளைஞர், யுவதிகள், வெளிநாடு செல்வோர் இணைய முடியும்.
"ஆங்கிலத்தில் ஓரெழுத்து தெரியாதவர்களும் கூட இப்பயிற்சியில் இணைந்து மூன்றே மாதங்களில் சரளமாக ஆங்கிலம் பேசமுடியும்"
சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம் 12.04.2014 சனிக்கிழமை
1. காலை 08.00-10.00 3. காலை 01.00-03.00
2. காலை 10.00-12.00 4. மாலை 03.00-05.00
எமது 3 மாத பயிற்சி நிறைவில் தமிழைப்போல சரளமாக ஆங்கிலம் பேசமுடியாது விடின் முழுப்பணமும் திருப்பி வழங்குவதற்கான உத்தரவாதம் வழங்கப்படும்.
குறிப்பு - முன்பதிவு செய்பவர்கள் மட்டுமே வகுப்புகளுக்கு அனுமதிக்கப்படுவார்கள், ஏனையோருக்கு இடமளிக்கப்படாது
SAAMSON LANGUAGE SCHOOL 179, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர். 077 621 4567

Rotary RI District 3220 - ROTARY CLUB OF JAFFNA
அமெரிக்காவில் அதியுயர் விருது பெற்ற தமிழ் விஞ்ஞானி - பௌதிகவியல் பேராசிரியர்
**சிவலிங்கம் சிவானந்தன்**
அவர்களின் யாழ்.வருகையை முன்னிட்டு
**யாழ்.றோட்டறிக் கழகம் நடாத்தும்**
**சாதனையாளர் சிறப்புரை நிகழ்வு**
காலம் : 15.04.2014, செவ்வாய்க்கிழமை, பி.ப 3.00 மணி
இடம் : யாழ்.இந்துக்கல்லூரி. குமாரசுவாமி மண்டபம்.

அறிவியலில் ஆர்வமுள்ள அனைவரும் பங்குபற்றிப் பயன்பெறுவதற்கான அரிய சந்தர்ப்பம் !
குறிப்பாகப் பாடசாலை மாணவர்கள் பயன்பெறுவதற்கான வழிகாட்டல்களைக் காணத்தவறாதீர்கள்!!
மேலதிக விவரங்களுக்கு : 0787 0718 692 692
அனுசரணை: உதயன்

உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உயர்ந்த சம்பளத்துடன் வேலைவாய்ப்பையுடைய
**வெளிவாரிப்பட்டப்படிப்பு BIT**
**CIMA-UK,CompEngineer_USA**
**GCE-OL** சித்தியடைந்தோர் விண்ணப்பிக்கலாம்.
புலமைப்பரிசிலிற்கும் மேலதிகவிவரங்களிற்கும்
Type <Course><Name>&send to 772 395 895.
கொழும்புபல்கலைக்கழகத்திடமிருந்து விருதுபெற்ற நிறுவனம்.
**CIMA,Cisco,Oracle,ICDL,Tofle** நிறுவனங்களின் அங்கீகாரம் பெற்ற பயிற்சி நிலையம். பரீட்சை மையம்.
**MCS யாழ். பல்கலை அருகில்**


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 10.04.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.



# யாழ்ப்பாணத்து மாமுனிவர் சிவயோக சுவாமிகள்

### எங்கள் குருநாதன்

இலங்கை ஒரு சிவபூமி என்பது திருமூலர் வாக்கு. சிவனுக்குரிய ஈஸ்வரங்கள் மலிந்த நாடு. சித்தர்கள் உலாவிய சிறப்புடைய நாடு. கைலாச பரம்பரையின் சித்தர்கள் நடமாடிய யாழ்ப்பாணத்திலே மாவிட்டபுரம் என்னும் கிராமத்திலே 1872ஆம் ஆண்டு மே மாதம் 29ஆம் திகதி சிவயோக சுவாமிகள் பிறந்தார். இளம் வயதிலேயே தாயை இழந்த யோகநாதன் யாழ்ப்பாணத்துக்கு அண்மையில் உள்ள கொழும்புத்துறை என்னும் கிராமத்தில் வாழ்ந்த அவரது தந்தையின் சகோதரியால் வளர்க்கப்பட்டார். கல்லூரியில் யோகநாதன் பயின்ற காலத்திலேயே விவேகியாய்த் தாம் பயின்றவற்றை ஏனைய மாணாக்கர்களுக்கு விளக்கும் குட்டிப் பிரசங்கியாகவும் இருந்தார். தனது கல்லூரிப் படிப்பை நிறைவு செய்து கொண்டு அவர் கிளிநொச்சி இரணைமடு நீர்ப்பாசனத் திட்டத்தில் பண்டகசாலைப் பொறுப்பாளராகக் கடமையாற்றினார். அப்போது தன் ஓய்வு நேரம் முழுவதையும் சமயப்பயிற்சியில் செலவிட்டார். தியானம் திருமுறை பாராயணம் போன்ற ஆன்மீக சாதனைகள் மேற்கொண்டார். ஆன்மீக சாதனை அவரை ஈர்க்கவே இறுதியில் தனது முப்பதாவது வயதில் வேலையில் இருந்தும் விலகி தனது வாழ்வை முழுமையாக ஆன்மீக சாதனையில் ஈடுபடுத்திக் கொண்டார்.

### நல்லூரை நனைத்த ஞான வெள்ளம்

அக்காலத்தில் நல்லூர் தேரடியில் வாழ்ந்த செல்லப்பா சுவாமிகளின் பெருமையைக் கூறக்கேட்ட யோகநாதன் ஒருநாள் சுவாமிகளைத் தரிசிப்பதற்காக நல்லூருக்குச் சென்றார். தனது சற்குருவை முதன்முதலில் சந்தித்தது குறித்து அவர் பின்னர் பல நற்சிந்தனைப் பாடல்களில் அழகாகக் கூறியுள்ளார். தேரடியில் யோகநாதனின் செவிகளில் ஒலித்தவை "ஆரடா நீ? தேரடாவுள்! தீரடா பற்று'. மலைத்து நின்ற சீடனைப் பெருங் கருணையோடு நோக்கிய சற்குருநாதன் 'உன்னைத்தான் பார்த்திருந்தேன் உனக்கே பட்டம் சூட்டப் போகின்றேன். வாவா" என்று அருகிலழைத்து அன்போடு ஞான உபதேசம் அருளினார். அன்று முதல் ஐந்து ஆண்டுகள் செல்லப்பா சுவாமிகளுடன் வாழ்ந்து கடும் தவம் ஆற்றிய யோகநாதன் தனது சற்குருவிடமிருந்து தீட்சை பெற்று யோகர் சுவாமிகள் ஆனார். பின் தனது குருவின் ஆணைப்படி யோகர் சுவாமிகள் கால்நடையாக கதிர்காம யாத்திரை மேற்கொண்டார். ஓராண்டு காலம் இலங்கை முழுவதையும் பாதயாத்திரையாக அவர் சுற்றி வந்தார். பாத யாத்திரை முடித்துக் கொண்டு குருவிடம் திரும்பி வந்த யோகர் சுவாமிகளைப் பார்த்துச் செல்லப்பா சுவாமிகள் "யோகா இரண்டு யானைகள் ஒரு முனையிற் கட்ட முடியாது. நீ கொழும்புத்துறைச் சந்தியில் இலுப்பை மரவேரைப் பார்" என்றார்.

### ஆசான் அருளால் ஆசானாயினார்

தனது குருவின் ஆணைப்படி யோகர் சுவாமிகள் கொழும்புத்துறைச் சந்தியில் இருந்த இலுப்பை மரத்தடியில் பல நாட்களாக தியான நிலையில் அமர்ந்திருந்தார். பலமுறை வேண்டிக் கேட்டுக்கொண்ட பிறகு இலுப்பை மரத்துக்கு அண்மையில் அடியவர்களால் அவருக்கு என அமைக்கப்பட்ட ஒரு சிறு குடிசையில் யோகர் சுவாமிகள் தங்கினார். இது 1914ஆம் ஆண்டளவில் நிகழ்ந்தது. யோகர் சுவாமிகள் தனது வாழ்வின் அடுத்த ஐம்பது ஆண்டுகளையும் கிடுகுகளால் வேயப்பட்ட அந்தச் சிறு குடிசையில் கழித்தார். தொடக்கத்திலே அணுகுவதற்கு முடியாதவராக இருந்தார். ஆனால் காலப்போக்கில் சில அடியவர்களை அருகில் வர அனுமதித்தார். மிக விரைவில் அந்தக் கொழும்புத்துறைக் கொட்டில் இலங்கை முழுவதற்கும் அருள் வழங்கும் ஆன்மீகத் திருவுருவத்தின் ஆச்சிரமமாக மாறியது. வாழ்வின் பல துறைகளைச் சார்ந்த மக்களும் இக்குடிசைக்கு வந்தனர். இளையோர், முதியோர், கமக்காரர், மந்திரிகள், நீதிபதிகள், மருத்து வர்கள், அரசியல்வாதிகள் - ஆம் அனைவரும் உண்மையை நாடியே அக்குடிசைக்கு வந்தனர். அத்தருணத்தில் ஒருநாள் தனது குருநாதர் செல்லப்பா சுவாமிகள் நோய்வாய்ப்பட்டிருப்பதாக அறிந்து அவருக்குப் பணிவிடை செய்வதற்காக யோகர் சுவாமி விரைந்து சென்றார். அவர் வருகையை அறிந்த செல்லப்பா சுவாமிகள் அவர் உள்ளே செல்வதன் முன் அவருக்குக் கேட்கும்படியாக உரத்த குரலில்; வெளியே நின்று பார் என்றார். யோகர் சுவாமிகளும் குருநாதர் சொற்கேட்டு உள்ளே போகாமல் வெளியே நின்று அகக்கண்ணால் அவரைக் கண்டு வணங்கினார்.

### சுவாமிகளைச் சூழ்ந்த திருக்கூட்டம்.

நெடுந்தூரத்திலிருந்து வரும் யாத்திரிகர்களும் தினம் வரும் அயல் பக்தர்களும் ஆசானின் திருவடியின் கீழ் ஒன்று கூடி அங்கு விரிக்கப்பட்டுள்ள பாய் மீது அமர்ந்திருப்பார்கள். பொதுவாக அவரது ஆச்சிரமத்திற்கு மாலை நேரத்திலேயே பக்தர்கள் வந்தனர். சைவமார்க்கம் பற்றியும் பண்டைக்கால முனிவர்கள் ஞானிகள் பற்றியும் வேதாந்த சித்தாந்த தத்துவத்தின் தனது கோட்பாடு பற்றியும் அவர் பேசுவார். ஆசானும் அடியவர்களும் சேர்ந்து பக்திப் பாடல்களைப் பாடுவர். தனது மென்மையான உயிரை உருக்கும் குரலில் அவர் பாடுவார். ஆழ்ந்த விஷயங்கள் குறித்தும் உலகியல் விஷயங்கள் குறித்தும் அவர் பேசுவார். அல்லது அடியவர்களுடன் மௌனத்தில் ஆழ்ந்திருப்பார். தன்னிடம் வருபவர்களுக்கு எல்லாம் சனாதன தர்மத்தின் அழியாத உண்மைகளை யோகர் சுவாமிகள் வலியுறுத்தி வந்தார். அடியவர்களுக்கு அவர் வழங்கிய கட்டளைகள் நபருக்கு நபர் மாறுபடும். பொதுவான ஒரு பரிகாரத்தை அவர் தருவதில்லை. யாருக்கு எது தேவையோ அதைத் துல்லியமாக அருளினார். ஒருவருக்கு யோக சாதனையை வழங்குவார். மற்றவருக்குப் பக்தியையும், உபாசனையையும் கற்பிப்பார். வியாதிக்கு ஏற்ற மருந்து என்று சுவாமிகள் கூறுவதுண்டு. யோகர் சுவாமிகள் அடியவர்கள் சகிதம் பலமுறை இந்தியாவுக்கு திருத்தல யாத்திரைகளையும் மேற்கொண்டார்.


### சிவத்தொண்டு, சிவத்தியானம்

வெள்ளை வேட்டியும் சால்வையும் மட்டுமே யோகர் சுவாமிகள் அணிந்திருப்பார். உயர்ந்த தோற்றமும் ஆரோக்கியமான திருமேனியுமுடைய யோகர் சுவாமிகள் யாழ்ப்பாணத்து வீதிகள் வழியாகவும் வயல் வெளிகளினூடாகவும் தினமும் பல மைல்கள் தூரம் நடப்பார். தனது வெண்மையான தாடியும் தலைமுடியும் சூரிய வெளியில் பிரகாசிக்க கறுப்புக் குடையுடன் யோகர் சுவாமிகள் யாழ் குடாநாட்டு வீதிகளில் கம்பீர நடையுடன் பவனி வருவது கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும். தினமும் சூரிய உதயத்துக்கு முன் எழுந்து தனது குடிசையில் திருவடி வழிபாடு செய்வார். தனது கைலாச பரம்பரையில் வந்த ஏனைய சற்குருமாரைப் போன்றே யோகர் சுவாமிகளும் ஒரு யோகியும் சித்தரும் ஆவார். பல ஆண்டுகளின் தீவிர ஆன்மீக சாதனை அவருக்குப் பல அக ஆற்றல்களை எழுப்பியிருந்தன. ஆயினும் யோகர் சுவாமிகள் அவை பற்றிப் பேசமாட்டார். தன்னைக் காண வருபவர்களை அவர்கள் வருவதற்கு முன்னமே யோகர் சுவாமிகள் அறிந்திருந்தார் எனவும் அவர்கள் பேசுவதற்கு முன்னாலேயே அவர்களின் எண்ணங்களை அறிந்திருந்தார் எனவும், அவரது சீடர்கள் கண்டனர். அவரது அகக் காட்சியில் இருந்து எதையும் மறைக்க முடியவில்லை. தனது வாழ்வில் பிற்பகுதியில் அவர் அக நிலையில் மேலும் விழிப்புணர்வு மிக்கவராய் இருந்ததோடு தனது பக்தர்கள் முன்னிலையிலேயே அகவுலகங்களில் தேவர்களோடும் பேசிவந்தார். பல மேலைத்தேசத்தவர்கள் கூட சுவாமிகளைத் தரிசிக்க வந்தனர். அடியவர்கள் வாழ்வில் யோகர் சுவாமிகள் புரிந்த அற்புதங்களோ ஏராளம். பிற்காலத்தில் இந்த அற்புத நிகழ்ச்சிகள் பல மொழிகளிலும் நூல்களாக அடியவர்களினால் வெளியிடப்பட்டுள்ளன.

### நற்சிந்தனை என்னும் நல்லமுதம்

பல அழகான பாடல்களை யோகர் சுவாமிகள் தம் வாழ்வில் பாடியருளினார். அவை அவர் அகத்திலிருந்தே வெளிவந்தன. பின்னர் இவை ஒன்றாகத் திரட்டப்பட்டு நற்சிந்தனை என்னும் பெயரில் நூலாக வெளியிடப்பட்டது. உள்ளத்தை உருக்கும் நற்சிந்தனைப் பாடல்கள் பல ஒலிப்பதிவு நாடாக்களாகவும் வெளிவந்துள்ளன. 1935ஆம் ஆண்டு சில பக்தர்களைக் கொண்டு 'சிவதொண்டன்' என்னும் மாதாந்த சமய சஞ்சிகையை வெளிவருமாறு செய்தார். 1953 ஆம் ஆண்டு சுவாமிகள் யாழ்ப்பாணத்தில் 'சிவதொண்டன்' என்னும் ஆன்மீக நிலையத்தை நிறுவினார். சுவாமிகளின் விருப்பப்படி பின்னர் மட்டக்களப்பிலும் ஓர் சிவ தொண்டன் நிலையம் நிறுவப்பட்டது. இன்று இலண்டன் நகரிலும் சிவதொண்டன் நிலையம் சிறப்புறப் பணியாற்றுகின்றது. சைவ சமயத்தை மேலைத்தேசங்களில் பரப்புவது பற்றியும் கிழக்கு மேற்கு இடையே ஒரு பாலம் அமைப்பது குறித்தும் யோகர் சுவாமிகள் அடிக்கடி கூறி வந்தார். அன்று சைவசமயம் மேலோங்கி வேரூன்றி நிற்பதற்கு வித்திட்டவர் யோகர் சுவாமிகள். அரை நூற்றாண்டுக்கு மேலாக யாழ்ப்பாணத்திலே தனிப்பெரும் முனிவராக அருளாட்சி புரிந்து வந்த யோகர் சுவாமிகள் 1964ஆம் ஆண்டு பங்குனி மாத ஆயிலிய நட்சத்திரத்தில் தனது 91ஆவது வயதில் மகாசமாதி அடைந்தார்.

# யோகர் சுவாமிகளின் உலக யாத்திரை




யாழ்ப்பாணத்து சித்தர் பரம்பரையில் ஒருவராகத் தோன்றியவர்தான் யோகர் சுவாமிகள். இறைவன்மீது தீவிர பக்திகொண்டிருந்தவரான இவர் தனது பதவியைத் துறந்து முழுமையான இறையின்பத்திலும் ஆன்மீக சிந்தனையிலும் மூழ்கிய நிலையில் வாழ்ந்து வந்தார். ஒருமுறை நல்லூர் தேரடியில் தங்கியிருந்த செல்லப்பா சுவாமிகளின் தரிசனத்திற்காகச் சென்றபோது "உன்னைத்தான் பார்த்திருந்தேன். உனக்குப் பட்டம் சூட்டப்போகிறேன் வா" என்று அழைத்து ஞானோபதேசம் அருளியதால் உயர்ஞான நிலை பெற்று யோகர் சுவாமிகளாக நாமாகரணம் செய்யப்பட்டார்.

இவர் தனது குருநாதரான செல்லப்பா சுவாமிகளுடன் இணைந்திருந்த காலத்தில் கதிர்காம யாத்திரை மட்டுமல்ல இலங்கை முழுவதையும் பாதயாத்திரையாக சுற்றி வந்தவர். யாத்திரை முடிந்து தனது குருநாதரிடம் திரும்பி வந்தபோது "இரு யானைகளை ஒரு தறியிற் கட்ட முடியாது. நீ கொழும்புத்துறை சந்தியில் இலுப்பை மரவேரைப்பார்" என்று யோகர் சுவாமிகளை அனுப்பிவிட்டார். கொழும்புத்துறையில் ஒரு குடிசையமைத்துத் தங்கியிருந்த யோகர் சுவாமிகளைத் தரிசிப்பதற்குப் பலர் வந்து போவது வழக்கம். இவர் அருள் பெற்ற ஞானிகள் பலரும் இருக்கிறார்கள். அமெரிக்காவிலிருந்து வந்திருந்த இருபத்தியிரண்டு வயது இளைஞர் ஒருவர் யோகர் சுவாமிகளிடமிருந்து ஞானோபதேசம் பெற்றுக் கொண்டதால் இவரது சீடராகிவிட்டார். இவரே சுப்பிரமுனிய சுவாமிகள் என பின்னாளில் பரலாலும் போற்றப்பட்டவர். இவர் அமெரிக்க மாநிலத்தின் ஹாவாய் தீவில் சைவ ஆதீனத்தை நிறுவி யோகர் சுவாமிகளின் ஆன்மீக இறைபணியை முன்னெடுத்துச் சென்றதுடன் ஒரு சீடர் பரம்பரை உருவாகுவதற்கும் காரணமாக இருந்துள்ளார்.

சுப்பிரமுனிய சுவாமிகள் தனது குரு நாதரான யோகர் சுவாமிகளின் 125ஆவது பிறந்த நாளான 1997ஆம் ஆண்டு மே மாதம் 29ஆம் திகதியன்று ஹாவாய் சைவ ஆதீனத்தில் ஒரு சிறப்பு நிகழ்ச்சியொன்றை ஏற்பாடு செய்து நடாத்தியிருந்தார். யோகர் சுவாமிகளின் சிறிய வெண்கலச் சிலையொன்றை அமைப்பித்து அதற்குப் பூசை வழிபாடுகள் செய்யப்பட்டன. பக்திபூர்வமான வகையில் நடந்த அந்த நிகழ்வைத் தொடர்ந்து யோகர் சுவாமிகளின் வெண்கலச் சிலையை உலக யாத்திரைக்காக அனுப்புவதற்கான ஏற்பாடுகளும் நடந்தேறின. சுப்பிரமுனிய சுவாமிகள் ஆசிவழங்கி யோகர் சுவாமிகளின் உலக யாத்திரையை ஆரம்பித்து வைத்தார். உலக நாடுகளில் புலம் பெயர்ந்து வாழ்ந்து கொண்டிருக்கும் இலங்கைத் தமிழ் மக்களின் தரிசனத்திற்காகவும் அதன் மூலம் அவர்கள் இறையுணர்வையும் ஆன்மீக சிந்தனையையும் பெறும் வகையிலும் யோகர் சுவாமிகளின் உலக யாத்திரை அமைந்திருக்கிறது. இந்த உலக யாத்திரையின்போது கோலாகலமான நிகழ்ச்சிகள் எதுவும் இடம்பெறக்கூடாது என்பதுடன் யாத்திரை செல்லும் பாதைகளில் மக்களது பக்திப் பெருக்கும் ஆன்மீக உணர்வும் மேலோங்கியிருக்க வேண்டும் என்பதுவும் சுப்பிரமுனிய சுவாமிகளின் பெருவிருப்பமாகவும் அறிவுரையாகவும் இருந்தது.



யோகர் சுவாமிகளின் உலக யாத்திரையானது பதினேழு வருடங்களை நிறைவுக்குக் கொண்டு வரும் இவ்வேளையில் அமெரிக்காவின் ஹாவாயிலிருந்து ஆரம்பமாகி ஐக்கிய அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள் முதலாக உலகத்தின் பெரும் பகுதியைக் கடந்துவிட்ட நிலையில் இப்போது ஆசியாவுக்குள் உட்பிரவேசித்திருக்கிறது என்பது சிறப்புக்குரிய தகவலாகும். யோகர் சுவாமிகள் பிறந்து வாழ்ந்து அருள் வழங்கி அற்புதங்கள் செய்த புண்ணிய பூமி யாழ்ப்பாணக் குடாநாடு. 1964ஆம் ஆண்டு பங்குனி மாதத்து ஆயிலியம் நட்சத்திரத் தினத்தன்று மகா சமாதியடைந்த சுவாமிகளின் ஐம்பதாவது குருபூசை தினம் இம் மாதம் (ஏப்ரல்) பத்தாம் திகதி வருகிறது. அன்றைய நாளில் நல்லைக் கந்தன் ஆலய சுற்றாடலில் ஐம்பதாவது குருபூசை நிகழ்வை சிறப்பாக அனுட்டிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. யோகர் சுவாமிகள் தனது குருநாதரான செல்லப்பா சுவாமிகளிடமிருந்து ஞானோபதேசம் பெற்றுக் கொண்ட இடம் நல்லூர் என்பதால் அங்கு ஐம்பதாவது குருபூசையை நடாத்துவது பொருத்தமானதாக இருக்கும் என்பது யோகர் சுவாமிகளது அடியார்களின் விருப்பமாகும். பதினாறு வருடங்களுக்கு முன் அமெரிக்க மாநிலத்தின் ஹாவாய் தீவிலிருந்து வெண்கலச் சிலை வடிவில் ஆரம்பமான யோகர் சுவாமிகளின் உலக யாத்திரையானது




அவரது ஐம்பதாவது குருபூசை நாளன்று யாழ்ப்பாணத்தை வந்தடையவிருக்கிறது என்பது சுவாமிகளின் அடியார்களுக்கு மகிழ்ச்சி தரும் செய்தியாக அமைவதுடன் சுவாமிகளை வரவேற்பதற்கும் காத்துக் கொண் டிருக்கிறார்கள். சுவாமிகள் வாழ்ந்த யாழ்ப்பாணப் பூமியில் ஐம்பதாவது குருபூசை நாளின்போது சிலைவடிவில் எழுந்தருளியிருக்கவேண்டும் என்பது சுவாமிகளது ஆன்மார்த்தமான விருப்பம் போலும். உலகளாவிய ரீதியில் சைவத் தமிழ் மக்களால் போற்றித் துதிக்கப்படும் யோகர் சுவாமிகளது உலக யாத்திரை சுவாமிகளது ஐம்பதாவது குருபூசை வருடத்தில் இலங்கையில் நிறைவுக்கு வருவது சுவாமிகளின் ஆசிக் குரிய அருட்பேறு என்றுதான் சொல்ல வேண்டும்.

# யோகசுவாமிகளின்

## ஐம்பதாவது குருபூசை

10.04.2014




பிரசுர அன்பளிப்பு:

Kids Park

ஆன்ம பலத்தையும், நோயற்ற வாழ்வையும் தரும்

சைவ உணவை அகமகிழ்ந்து உண்ண வாருங்கள்

Sooryaa

ஐஸ் கிறீம்

பேக் ஹவுஸ்

சைவ உணவகம்

369, பருத்தித்துறை வீதி, நல்லூர். Hot line: 021 222 2002 T.P: 021 221 7326

149, புதுச் செட்டித்தெரு, கொழும்பு 13. T.P :- 0112 446720



அச்சமைப்பு:- கரிகணன் (தனியார்) நிறுவனம்.